# சமூக நலன்
# மற்றும்
# மகளிர் உரிமைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 – 2022

### மானியக் கோரிக்கை எண்.45


## திருமதி. பி. கீதா ஜீவன்

**சமூக நலன் மற்றும்**
**மகளிர் உரிமைத் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| வ. எண் | அத்தியாயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1–27 |
| 2 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை | 28–106 |
| 3 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 107–125 |
| 4 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் | 126–189 |
| 5 | சமூகப் பாதுகாப்பு | 190–251 |
| 6 | நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் | 252–260 |
| 7 | சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள் | 261–268 |
| 8 | இணைப்பு– 1 | 269 |
| 9 | இணைப்பு– 2 | 270–271 |

**மானிய கோரிக்கை எண் 45**

# சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2021-2022

## அத்தியாயம்- 1

### முன்னுரை

**'பட்டங்கள் ஆள்வதும்**
**சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே**
**பெண் இளைப்பில்லை**
**காண் என்று கும்மியடி'**

**- மகாகவி சுப்ரமணிய பாரதியார்**

"இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு நாட்டின் வெற்றி எனும் விதைகள் அந்நாட்டிலுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளிடம் விதைக்கப்பட்டுள்ளது"

– ஜாய்ஸ் பண்டா.

சிறந்த அறிவாற்றல், வளங்களைக் கண்டறிந்து தன்னிச்சையாக முடிவெடுக்கும் திறன், வாழ்க்கையை

மாற்றும் சூழ்நிலைகளை கட்டுப்பாட்டில் வைத்தல், நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களை சுதந்திரமாக மேற்கொள்ளுதல் போன்றவை அதிகாரமளித்தல் மூலம் பெறப்படுகிறது. மகளிர் உரிமை என்பது நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மற்றும் கலாச்சார சவால்களை முறியடித்து நல்வாழ்வு பெறுவதாகும்.

பாலின அடிப்படையில் எந்த பாகுபாடும் இருக்கக்கூடாது என நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுதி அளிக்கிறது. பெண்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளிப்பதற்காக பல்வேறு சட்ட வழிவகைகள் அரசியலமைப்பில் வரையறை செய்யப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பானது, பெண்களுக்கான சமத்துவத்தை வழங்குவது மட்டுமல்லாமல், சமூக, பொருளாதார, கல்வி மற்றும் அரசியல் போன்றவற்றில் அவர்களுக்கு நிகழும் பாகுபாடுகளை சமநிலைப்படுத்தி, அவர்களுக்கான நேர்மறையான நடவடிக்கைகளை

மேற்கொள்வதற்கு மாநிலத்திற்கு அதிகாரம் அளிக்கின்றது.

இந்திய அரசியலமைப்பு சட்டம், அடிப்படை உரிமைகளான சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதையும், அனைவரின் சமமான பாதுகாப்பையும் உறுதி செய்கின்றது. எந்தவொரு குடிமகனையும் மதம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதைத் தடுக்கிறது மற்றும் அவர்களின் வேலைவாய்ப்பு தொடர்பான நிகழ்வுகளில் சம வாய்ப்புக்கான உறுதியினை அளிக்கிறது.

இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவுகள் – கற்பழிப்பு (பிரிவு 376), ஆள்கடத்தல் மற்றும் வெவ்வேறு நோக்கங்களுக்காக ஆள்கடத்துதல், (பிரிவுகள் 363–373), வரதட்சணை கொடுமை செய்து கொலை செய்தல், (பிரிவு 498–ஏ) பாலியல் வன்கொடுமை (பிரிவு 354) மற்றும் பாலியல் துன்புறுத்தல் (பிரிவு 509) பெண்களுக்கு எதிரான

குற்றச் செயல்களிலிருந்து பாதுகாப்பை வழங்குகின்றன.

இது போன்றே பெண்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான சிறப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஒழுக்க நெறிபிறழ்தல் தடுப்புச் சட்டம் 1956, வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961, சம ஊதியம் வழங்கும் சட்டம் 1976, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005, பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2013 போன்றவை பெண்களின் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட சில சட்டங்கள் ஆகும்.

சமீப காலங்களில் பெண்களுக்கான தகுதிகளை நிர்ணயம் செய்வதில் அதிகாரம் மற்றும் உரிமை அளித்தல் என்பது ஒரு முதன்மை பொருளாக கருதப்படுகிறது.

பெண்களின் சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்கென 1990–ஆம் ஆண்டின்

நாடாளுமன்றச் சட்டத்தின்படி "தேசிய மகளிர் ஆணையம்" உருவாக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்பின் 73 மற்றும் 74–ஆம் திருத்தங்கள் (1993), ஊராட்சி மற்றும் நகராட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை வழங்கியுள்ளது. இச்சட்டத்திருத்தங்கள் பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பங்கேற்பதற்கும் அவர்கள் தன்னிச்சையாக முடிவெடுக்கும் வாய்ப்பிற்கும் ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளது.

பெண்களின் சம உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பல்வேறு சர்வதேச மாநாடுகளின் தீர்மானங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்களையும் இந்தியா அங்கீகரித்துள்ளது. அவற்றில் முக்கியமானது 1993–ஆம் ஆண்டு நடைபெற்ற பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான மாநாட்டின் ஒப்புதல் (Convention on Elimination of All forms of Discrimination against Women) ஆகும்.

**மாநிலத்திலுள்ள அனைத்து வளர்ச்சியிலும் பெண்களுக்கு உரிய இடம் வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை என்ற பெயரை "சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை" என்று மாற்றியுள்ளது. பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள், திருநங்கையர் போன்றவர்களுக்கு தற்போது செயல்படுத்தி வரும் திட்டங்களிள் உள்ள அணுகுமுறைகளில் பெரும் மாற்றத்தை கொண்டு வருவதன் மூலம் இந்திய அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் முறையாக சென்றடைவதை தமிழ்நாடு அரசு உறுதி செய்கிறது.**

இத்துறை, மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடிமக்களையும் குறிப்பாக, பெண்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான குறிக்கோள்களையும் சமூகநீதியையும் அங்கீகாரம் அளிக்கும் பொருட்டு பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளது. ஏழை விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் சமூக

பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதோடு, பயனுள்ள திறன் மேம்பாடு திட்டங்களை அளித்து அவர்களின் நிலையினை உயர்த்திட அரசு உத்தேசித்துள்ளது, வளர்ச்சிக்கான பல்வேறு கொள்கைகளையும் திட்டங்களையும் இவ்வரசு வகுத்துள்ளது.

சமூகநலனில் அக்கறை கொண்ட இவ்வரசு, ஏழைப் பெண்கள், கைம்பெண்களின் மகள்கள், பெற்றோர் இல்லாத பெண்கள், மறுமணம் செய்து கொள்ளும் கைம்பெண்கள் மற்றும் சாதிமதபேதமற்ற சமூகத்தை உருவாக்கும் நோக்கத்தில் கலப்பு திருமணம் செய்வோர் போன்றோருக்கு பல்வேறு திருமண உதவித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்றோருக்கு உணவு, திறனை வளர்ப்பதற்கான பயிற்சி மற்றும் அவர்களின்

எதிர்காலத்தை எதிர்கொள்ள தேவையான தைரியம் ஆகியவற்றுடன் அவர்கள் பாதுகாப்பாக தங்குவதற்கான வசதிகள் சேவை இல்லங்களால் வழங்கப்படுகின்றன. மேலும் அவர்களின் குழந்தைகள் மற்றும் தண்டனை கைதிகளின் குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விளிம்பு நிலையிலுள்ள மக்கள் தங்குவதற்கும் இச்சேவை மையங்கள் இடமளிக்கின்றன. சேவை இல்லங்கள் முதன்முதலில் தமிழ்நாட்டில் தான் உருவாக்கப்பட்டன. பின்னர், குறுகிய கால தங்கும் இல்லங்கள் (SWADHAR HOMES) என்ற பெயரில் நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தேசியளவில், நகர்ப்புறங்களில் பணிக்கு செல்லும் பெண்களின் பங்களிப்பு தமிழ்நாட்டில் அதிக அளவில் உள்ளது. அதாவது தேசிய சராசரியான 15.4% விட தமிழ்நாட்டில் 21.8% என பணிக்கு செல்லும் மகளிரின் பங்களிப்பு உள்ளது. உழைக்கும் பெண்கள், பிற மாநிலங்களிலிருந்து பணி நிமித்தமாக வரும் பெண்கள், கிராமங்கள் மற்றும் சிறிய நகரங்களிலிருந்து

குடிபெயர்ந்து பெரிய நகரங்கள் மற்றும் நகரங்களில் பணிபுரிந்து வருவதால் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை கணிசமாக உள்ளது. இவ்வரசு பெண் குழந்தைகளின் உயர் கல்வியை ஊக்கப்படுத்த தொடர்ச்சியான முயற்சியினை மேற்கொண்டு வருகிறது. பெண்குழந்தைகள் பள்ளியில் அதிகமாக சேருவதற்கும் தொழிற்கல்வியில் தேர்ச்சி பெறுவதற்கும் தேவையான நிதி அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் பணிபுரியும் பெண்கள் பெரிய நகரங்கள் மற்றும் நகரங்களுக்கு அதிகளவில் குடிபெயர்ந்து வருகின்றனர். எனவே, பணிபுரியும் பெண்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு மாநிலம் முழுவதும் பணிபுரியும் பெண்கள் விடுதிகள் ஏற்படுத்த தமிழ்நாடு அரசு அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் 18 மாவட்டங்களில் 28

பணிபுரியும் பெண்கள் விடுதிகளை நடத்தி வருகிறது. பணிபுரியும் பெண்களின் தேவைகளை நிறைவேற்ற, மாநிலம் முழுவதும் அதிக விடுதிகளைக் கட்டவும், தற்போதுள்ள விடுதிகளை மேம்படுத்தவும் இத்துறை திட்டமிட்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு அரசு, 2013–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தின் கீழ் ஒரு சிறப்பு நோக்கங்களை செயல்படுத்தும் அமைப்பான (Special Purpose Vehicle) "தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் கழகம் லிமிடெட்" (Tamil Nadu Working Womens Hostels Corporation Limited) என்ற அமைப்பினை உருவாக்கியுள்ளது.

மேலும் பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்திட தமிழ்நாடு போக்குவரத்துகழக கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகர பேருந்துகளில் பணிபுரியும் மகளிர் உட்பட அனைத்து மகளிர், உயர்கல்வி பயிலும் மாணவியர்கள், திருநங்கையர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கட்டணமில்லாமல் பயணத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.

புதுமையான திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு எப்போதும் முன்னிலையில் உள்ளது. 2008 ஆம் ஆண்டில் திருநங்கைகளுக்கென தனி வாரியம் அமைத்தன் மூலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது. சமீபத்தில் பல மாநிலங்களால் இது பின்பற்றப்பட்டு வருகிறது. திருநங்கைகளுக்கென தமிழக அரசால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள், நாடு முழுவதிலும் உள்ள திருநங்கையரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி திருநங்கையரால் பாராட்டப்பட்டு வருகிறது. இப்போது திருநங்கையர் தாங்களாகவே முன்வந்து சேர்வதற்கு ஒரு தனி "செயலி" உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் திறன், பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு போன்றவை உருவாக்கப்பட்டு, அவர்களின் எதிர்காலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் சமூகத்தில் கண்ணியமாக வாழ வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பெண்களின் பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரமளிப்பினை உறுதி செய்யும் பல்வேறு திட்டங்களை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மேற்கொண்டு வருகிறது. 124 பெண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தொழில் முனைவோருக்கான திறன் வளர்க்கப்பட்டு, வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவர்களுக்கு சீருடைகள் தைத்து வழங்கும் பணி மற்றும் வளரிளம்பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இணை உணவு வழங்கும் பணிகள் இக்கூட்டுறவு சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது சமுதாயத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை உயர்த்துவதற்கான ஒரு முழுமையான அணுகுமுறையை ஊக்குவிக்கிறது. மேலும் இதன் மூலம் குடும்ப வருமானத்தை பெருக்கி, பல

பொறுப்புகளில் பெண்கள் பங்கேற்று மேலாண்மை செய்வதன் மூலம் அவர்களின் தலைமைத்துவம் மற்றும் திறமைகள் வளர்க்கப்பட்டு நாளடைவில் அரசியலில் அதிகாரம் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பெண்களின் நலன் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் மற்றும் குறுகிய கால தங்கும் இல்லங்கள் (ஸ்வதார் இல்லங்கள்) ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கான குறுகிய கால தங்கும் வசதி, உணவு, மருத்துவ உதவி, சட்ட உதவி, ஆலோசனை மற்றும் திறன் பயிற்சி போன்ற ஒருங்கிணைப்பு சேவைகள் வழங்கப்படுகின்றன. மகளிர் சக்தி மையங்கள் மூலம் நடப்பில் உள்ள பெண்கள் நலனுக்கான திட்டங்கள் மற்றும் சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெண்கள் உதவி எண் **181** மூலம் பெண்களுக்கான அவசர கால சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்திய அரசியலமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் உரிமைகள் தொடர்பாக (United Nations Convention on the Rights of the Child) வரையறுக்கப்பட்டுள்ள உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு மாநிலம் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. குழந்தைகளே ஒரு நாட்டின் சொத்துக்கள் ஆவர். குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அனைத்து விதமான பாகுபாடுகள் மற்றும் அவர்கள் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாவதை தமிழ்நாடு அரசு உறுதியாக தடுத்து வருகிறது. இவ்வரசு குழந்தைகளின் மீது மிகுந்த அக்கறை கொண்டு அவர்களை பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு சட்டங்கள் மற்றும் திட்டங்கள் இயற்றி அதனை நடைமுறைப்படுத்தி வருகிறது. மேலும் வலிமையான குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பினை ஏற்படுத்தி குழந்தைகளுக்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

ஒவ்வொரு குழந்தையும் சமுதாயத்தில் பண்பான வாழ்க்கையை மேற்கொள்ள உரிமை உண்டு. ஒரு குழந்தையின் உடல், மனம் மற்றும் சமூக நல்வாழ்வு அக்குழந்தை சார்ந்த குடும்பத்தைப் பொறுத்தது. வறுமை, புறக்கணிப்பு, பாலின ஏற்றத்தாழ்வு, பாலியல் சுரண்டல்கள் மற்றும் பொருளாதாரச் சுரண்டல்கள் போன்ற அனைத்து தீய பாதிப்புகளிலிருந்தும் குழந்தைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் பல்வேறு கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குழந்தைகளின் நலனுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

குழந்தைகளுக்கான உரிமைகளை உறுதியளித்தல், அவர்கள் முழு திறனை அடைய சம வாய்ப்புகளை வழங்குதல் போன்ற செயல்கள் குழந்தைகளின் சமத்துவத்தை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் சர்வதேச வளர்ச்சி இலக்குகளை பெருமளவில் அடைவதற்கும் வழிவகுக்கும்.

எனவேதான், இத்துறை, தொட்டில் குழந்தை திட்டம்–1992, முதலமைச்சரின் பெண் குழந்தைகள்

பாதுகாப்புத் திட்டம்–1992, பெண் குழந்தைகளை பாதுகாப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் (Beti Bachao Beti Padhao) திட்டம்– 2015, சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் இல்லங்கள், பெண்கல்வியை ஊக்குவிக்கும் திட்டங்கள் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. மேலும், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம், 2006–யினை இவ்வரசு மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

வருங்கால சமுதாயத்தை உருவாக்கும் நோக்கிலும் குழந்தைகள் நல்வாழ்விற்காகவும் சமூக நலன் சார்ந்த திட்டங்களில் தமிழ்நாடு அரசு முதலீடு செய்கிறது. ஒரு குழந்தை கருவாக இருக்கும் நிலை முதல் பருவமடையும் நிலை வரை அரசு மிகுந்த அக்கறையுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அமைதியான மற்றும் ஆரோக்கியமான குடும்ப சூழலில் குழந்தைகளை

வளர்க்கும் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் மாநிலமாக தமிழ்நாடு அரசு செயல்படுகிறது.

சமூகத்தில் உள்ள பெற்றோரை இழந்த, கைவிடப்பட்ட மற்றும் ஒப்படைப்பு செய்யப்பட்ட குழந்தைகளை குடும்ப சூழல் நிலவும் அமைப்பு சாரா நிறுவனங்களில் பராமரிப்பதற்கு இவ்வரசு ஊக்கப்படுத்துகிறது. இந்நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு உயர்ந்த தரத்திலான பராமரிப்பினை வழங்க இவ்வரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

குழந்தைகளின் பராமரிப்பில் பங்குபெறும் அமைப்புகள் தங்களது பொறுப்புகளை உணரும் வகையில் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அரசால் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், அவர்கள் பல்வேறு சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளை கையாளும் திறனை வலுப்படுத்தவும் இப்பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015–யினை குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தபடுவதை மேற்பார்வை செய்வது பங்குபெறும் அமைப்புகளின் முக்கிய பொறுப்பாகும். அரசால் வகுக்கப்பட்ட சட்டத்தின்படி ஒவ்வொரு குழந்தைக்குமான தனிநபர் பராமரிப்பு திட்டம் என்ற முக்கிய திட்டம் உருவாக்கப்பட்டு அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்றினால் பெற்றோர்களை இழந்து, ஆதரவின்றி தவிக்கும் குழந்தைகளின் நலன்களைப் பாதுகாத்திடும் வகையிலும், அவர்கள் தங்களது பள்ளிக் கல்வியை தொடர்வதை உறுதி செய்யும் வகையிலும், கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள் மற்றும் ஏற்கனவே தாய் அல்லது தந்தையை இழந்து தற்போது கொரோனா நோய் தொற்றினால் மற்றொரு பெற்றோரையும் இழந்த

குழந்தைகள் ஆகியோருக்கு ரூ.5.00 இலட்சம் வழங்கவும், கொரோனா நோய் தொற்றினால் தாய், தந்தை ஆகிய இருவரையும் இழந்து உறவினர்/ பாதுகாவலருடன் வாழும் குழந்தைகள் தங்களது 18 வயதினை நிறைவு செய்யும் வரை ஒவ்வொரு மாதமும் ரூ.3000/- பராமரிப்பு நிதியாக வழங்கவும், அவர்களின் பட்டப்படிப்பு வரையிலான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் போன்ற அனைத்து செலவுகளையும் தமிழ்நாடு அரசே ஏற்கும் எனவும் கொரோனா நோய் தொற்றினால் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தாய் அல்லது தந்தைக்கு உடனடி நிவாரண தொகையாக ரூ.3.00 இலட்சம் வழங்குதல் உட்பட பல்வேறு நிவாரண உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் என்பது குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட

ஒரு விரிவான திட்டமாகும். இது முப்பதாண்டுகளுக்கு மேலாக செயல்பட்டுவரும் உலகின் மிகப்பெரிய குழந்தை பராமரிப்பு திட்டங்களில் ஒன்றாகும். இத்திட்டம் இந்தியாவில் குழந்தைகளிடையே பரவலாக காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டை நிவர்த்தி செய்கிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் குழந்தையின் பருவ வளர்ச்சியின் பல அம்சங்களை ஒருங்கிணைக்கிறது. ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கூடுதல் ஊட்டச்சத்து, நோய்த்தடுப்பு, சுகாதார பரிசோதனைகள் மற்றும் பரிந்துரை சேவைகளை வழங்குகிறது. இத்திட்டம், 3–6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு முறைசாரா முன்பருவ கல்வியையும், 15–49 வயதுடைய பெண்களுக்கு சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து கல்வியையும் வழங்குகிறது. முறைபடுத்தப்பட்ட பராமரிப்பின் கீழ் குடும்பத்தை விட்டு வெளியே உள்ள

குழந்தைகளுக்கு ஊட்டச்சத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வடிவமைக்கப்பட்ட குழந்தை பராமரிப்பு சேவைகளை வழங்குவதில் தமிழ்நாடு நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டுள்ளது.

நோபல் பரிசு பெற்ற இந்திய பொருளாதார நிபுணர், டாக்டர் அமர்த்தியாசென், அவர்கள், "தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தை வெகுவாக பாராட்டியுள்ளதோடு சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளுக்கு அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆக்கபூர்வமாக செயல்பட்டதால், நலப்பணிகளைப் பெறுவதற்கு உள்ள உரிமைகள் குறித்த விழிப்புணர்வு 20 சதவிகிதத்திற்கும் கீழிருந்து 80 சதவிகிதமாகவும், அல்லது அதற்கு மேலும் உயர்ந்துள்ளது என்றும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சிறப்பாக செயல்பட வாய்ப்பு உள்ளது, இதற்கு தமிழ்நாடு முன்னுதாரணமாக திகழ்கிறது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மதிய உணவுத் திட்டம், தமிழ்நாடு அரசால் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு முன்னோடித் திட்டமாகும். ஒன்றிய அரசுஇத்திட்டத்தைப் பின்பற்றி, அனைத்து மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தி தற்போது நாடு தழுவிய திட்டமாக மாறியுள்ளது.

சத்துணவு திட்டமானது நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஊட்டச்சத்து தரத்தை உயர்த்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தின் மூலம் இயங்கும் (National Child Labour Project) பள்ளிகளில் துவக்கப்பள்ளி, உயர்துவக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி வகுப்புகளில் படிக்கும் குழந்தைகளுக்கு வேலை நாட்களில் மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது. மதிய உணவு என்பது பசியால் வாடும் குழந்தைகளின் பசியை போக்கும் உணவு மட்டுமல்லாமல், அப்பசியை போக்கி குழந்தையின் கவனத்தை மீண்டும்

பாடங்களுக்குக் கொண்டு வருவதாகும். இத்திட்டம், பள்ளிக்கு வராமல் இருக்கும் குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்ந்து பயிலுவதை ஊக்குவிக்கிறது. இத்திட்டத்தினால் பள்ளிக் குழந்தைகளின் ஒரு நாளில் ஒரு வேளை உணவு உறுதி செய்யப்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் குழந்தைகளின் உரிமைகளுக்கான உடன்படிக்கையில் (United Nations Convention on Rights of Child) உள்ள பிரிவு 24, பத்தி 2(c)–இன் கீழ் வரும், "குழந்தைகளுக்கான போதிய ஊட்டச்சத்துள்ள உணவு" என்ற அடிப்படை உரிமையை நிறைவேற்ற இந்தியா உறுதியளித்துள்ளது. தேசிய உணவு பாதுகாப்பு சட்டம், 2013 –ன் கீழ், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துவக்கப்பள்ளி, உயர்துவக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி குழந்தைகளின் கல்வி தரத்தையும், ஊட்டச்சத்து நிலையையும் மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளர் "மார்க் ட்வைன்" யிடம் அவர் முதிர்வடைவதைப் பற்றி ஒரு கேள்வி எழுப்பிய போது வயது என்பது மனதின் பிரச்சினை, நீங்கள் கவலைப்படாவிட்டால் அது ஒரு பிரச்சனை அல்ல என்று கூறினாராம். எனினும் மூத்த குடிமக்களின் தேவை கவலைக்குரியதாகவே உள்ளது. ஏனெனில் முதுமை 'இரண்டாம் குழந்தைப்பருவம்' என்றும் அழைக்கப்படுகிறது. குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டுமோ அது போல, மூத்த குடிமக்களை பாதுகாக்க வேண்டும்.

முதியோர் நலனை குறிக்கோளாகக் கொண்டு மூத்த குடிமக்களுக்கான மத்திய அரசு சட்டம், 2007 இயற்றப்படுவதற்கு முன்பே, 1991–ஆம் ஆண்டில் ஆதரவற்ற முதியோர்களுக்காக முதியோர் இல்லங்களை நிறுவுவது போன்ற மூத்த குடிமக்களின் பாதுகாப்புக்காக பல்வேறு சமூக நலத்திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தியது. மூத்த குடிமக்களின் தரமான வாழ்க்கை மற்றும் கண்ணியத்தை

பாதுகாப்பதற்கான வழிகாட்டுதல்களுடன் "பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலன்" என்ற சட்டம் 2007–இல் இயற்றப்பட்டது. பிறகு 2009–ஆம் ஆண்டில் இச்சட்டத்திற்கான விரிவான விதிகள் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது. மூத்த குடிமக்களுக்கு நன்மை பயக்கும் நலத்திட்டங்களை நிறைவேற்றுவோருக்கான பணிகள் மற்றும் பொறுப்புகள் இவ்விதிகளில் வரையறுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2011–ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் ஏறத்தாழ 10.4 கோடி மூத்த குடிமக்கள் உள்ளனர். அதில் தமிழ்நாட்டில் முதியோர் மக்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் 11.2% ஆகும்.

இதனை கருதிற்கொண்டு, முதியோர் ஓய்வூதியத்திட்டம் 22.01.1962 அன்று முதன்முதலாக தமிழ்நாட்டில் தான் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1974–

இல் உடல் ஊனமுற்றோருக்கும் 1975–இல் ஆதரவற்ற கைம்பெண்களுக்கும் 1981–இல் ஆதரவற்ற விவசாய தொழிலாளர்களுக்கும் 1986–இல் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 1995–ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசு மாதம் ஒன்றுக்கு ரூ.200 மட்டும் வழங்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் தமிழ்நாடு அரசால் மாதம் ரூ.800 கூடுதலாக சேர்த்து ரூ.1,000 மாத ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. முதியோர் எளிதாக பயணம் மேற்கொள்ள வசதியாக, இலவச பயணச் சீட்டு மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. முதியோர்களுக்கென தனி மருத்துவ வார்டுகள் மற்றும் தனி வரிசைகள் அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முதியோர்களை பராமரிக்கும் முதியோர் இல்லங்களுக்கு அரசு, மானியங்கள் வழங்குகிறது. முதியோர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், திட்டங்களை கண்காணிக்கவும் தலைமைச் செயலாளர் அவர்களின்

**தலைமையில் மாநில உயர் மட்டக் குழு மற்றும் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மாவட்ட குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

*****

## அத்தியாயம் – 2

# சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சமூகத்தில் உள்ள நலிவடைந்த பிரிவினரின், அதாவது பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள் மற்றும் திருநங்கையருக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் சமூக நீதி சட்டங்களை அமல்படுத்துவதிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

## 2.1 குழந்தை நலன்

ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களின் இனம், பாலினம், மதம், மொழி, திறமைகள் எவ்வாறு இருப்பினும் அனைத்து நிலையிலும் உரிமைகள் உள்ளன. குழந்தைகளின் உரிமைகள் என்பது சுகாதாரம், கல்வி, குடும்ப வாழ்க்கை, விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு, போதுமான வாழ்க்கைத் தரம் மற்றும் தவறாக அணுகுதல் மற்றும் தீங்குகளிலிருந்து

பாதுகாக்கப்படுவதற்கான உரிமை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். குழந்தைகளின் உரிமைகள் என்பது அவர்களின் வளர்ச்சி மற்றும் வயதுக்கு ஏற்ற தேவைகளை உள்ளடக்கியதாகும். அவை ஒரு குழந்தை வளரும்போது காலத்திற்கேற்ப மாறக்கூடியதாகவும் உள்ளது.

குழந்தை உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தம் (United Nations Convention on the Rights of the Child), 18 வயதிற்குட்பட்ட நபரை குழந்தை என வரையறுக்கிறது. இது குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தமாகும். இது குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பில் பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தின் முதன்மைப் பங்கையும், இந்தக் கடமைகளைச் செய்ய அவர்களுக்கு உதவ வேண்டியது அரசின் கடமை என்பதையும் ஒப்புக்கொள்கிறது.

### 2.1.1 தொட்டில் குழந்தை திட்டம்

சமுதாயத்தில் ஆண்குழந்தைகளை அதிகம் விரும்பும் மனோபாவம் கொண்ட சமூக கட்டமைப்பினால், பெண்குழந்தைகள் தங்கள் குழந்தை பருவம் முதல் வளரிளம் பருவம் வரை பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். பாலின தேர்வு மூலம் பெண்கருக்கலைப்பு, பெண்சிசுக்கொலை போன்ற பெண்குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் நாட்டில் பாலின விகிதத்தினை சமநிலையில் அன்றி குறைக்கத் தொடங்கியுள்ளதையடுத்து, பெண் சிசுக்கொலையைத் தடுக்கும் நடவடிக்கையாக அரசு 1992–இல் சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தை என்னும் புதுமையான திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

மருத்துவமனைகளில் தொட்டில்களை அமைப்பதன் மூலம், தாய்மார்கள் தாங்கள் விரும்பாத பெண் குழந்தைகளை தொட்டில்களில் பாதுகாப்பாக விட்டுச் செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த குழந்தைகளை மரணத்தின் பிடியிலிருந்து மீட்பதற்கும்,

பெண் குழந்தைகள் மீதான உண்மையான மதிப்பினை ஊக்குவிப்பதற்குமான ஒரு தனித்துவமான நடவடிக்கையாகும்.

இந்த திட்டத்தின் கீழ், பெற்றோர்கள் வறுமை காரணமாகவும், பெண் குழந்தைகளை விருப்பமின்மை மற்றும் மாற்றுத்திறனாளிகளாக பிறக்கும் குழந்தைகளை தாமாக முன்வந்து சேர்த்தனர். இதன் மூலம் பச்சிளங்குழந்தைகள் கொல்லப்படுவதிலிருந்து காப்பாற்றப்பட்டு, குழந்தைகளே இல்லாத தம்பதியினருக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சட்டப்பூர்வமாக தத்து கொடுக்கப்படுகின்றனர்.

2001–ஆம் ஆண்டில் இத்திட்டம் மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பெண் சிசுக்கொலை நடைமுறையில் அதிகமாக இருந்ததால் நீட்டிக்கப்பட்டது. 2011–ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும்

திருவண்ணாமலை மாவட்டங்களில் பெண்குழந்தை பிறப்பு விகிதம் குறைவாக இருந்ததால் மேற்கண்ட மாவட்டங்களிலும் தொட்டில் குழந்தை திட்டம் 2011–ஆம் ஆண்டு முதல் விரிவுப்படுத்தப்பட்டது.

இதன்படி, மேற்கண்ட மாவட்டங்களில் வரவேற்பு மையங்கள் திறக்கப்பட்டன. மேலும், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், குழந்தைகள் இல்லங்கள் மற்றும் காப்பகங்கள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்ட தொட்டில்கள் மூலமும் பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகள் பெறப்பட்டன.

பிறந்த பெண் சிசுக்களை கொலை செய்யும் தவறான பழக்க வழக்கங்களை தடுத்திடும் நோக்கிலும், குறைந்து வரும் பெண் குழந்தை பாலின விகிதத்தை அதிகப்படுத்திடவும் அரசு எந்திரம் சட்டத்தை பொறுப்புடன் செயல்படுத்துவதுடன் குற்றம்

செய்பவர்களை தமிழ்நாடு அரசு முனைப்புடன் தண்டிப்பதிலும் முயற்சியெடுத்து வருகிறது.

தொட்டில் குழந்தைத் திட்டம் தொடங்கியது முதல் ஜூலை 2021 வரை மொத்தம் 5656 குழந்தைகள் (ஆண் 1229, பெண் 4427) இறப்பின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.43.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.2 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள்

தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் பெறப்பட்ட குழந்தைகள் சில நேரங்களில் பல்வேறு காரணங்களால் குறிப்பாக மாற்றுத்திறனாளிகளாக உள்ள குழந்தைகள் பெற்றோர்களால் தத்தெடுக்கப்படுவதில்லை. எனவே, இந்த முரண்பாட்டை எதிர்கொள்ள சிறப்பு கவனம் தேவைப்படும் இக்குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு, தனியார் தொண்டு நிறுவனங்களால்

நடத்தப்படும் இல்லங்களை, சிறப்புத் திட்டமாக மாநில அரசு தொடங்கியது.

சிறப்பு கவனம் தேவைப்படும் இக்குழந்தைகளைப் பராமரிப்பதற்காக தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கீழ்க்கண்ட நான்கு சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் இல்லங்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது.

1. பிரேமவாசம், காஞ்சிபுரம்

2 ஸ்ரீ அருணோதயம் டிரஸ்ட், சென்னை

3. பேமிலிஸ் ஃ பார் சில்ரன், கோயம்புத்தூர்

4. கம்யூனிட்டி ஹெல்த் எஜுகேஷன் சொசைட்டி, திருவள்ளூர்

தற்போது இவ்வில்லங்களில் 137 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு ரூ.120/– வீதம் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக, தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.37.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.3 முதலமைச்சரின் பெண்குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

வறுமை நிறைந்த குடும்பங்களில் பெண்குழந்தைகள் பொருளாதார சுமையாக தோன்றுவது மட்டுமல்லாமல் அவர்களுக்கு கல்வி கட்டாயமில்லை என கருதுவதோடு, அவர்களது கருத்துகளும் மதிக்கப்படுவதில்லை. கல்வியறிவு பெற்ற அதிகாரம் நிரம்பிய பெண் குழந்தைகள் இத்தகைய சமூகத்தில் மனமாற்றத்தை ஏற்படுத்தும் கருவிகளாக பார்க்கப்படுகின்றனர். பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிப்பதில் கல்வி முக்கிய பங்காற்றுகிறது. கல்வி, பெண்களின் திருமண வயதை அதிகரிப்பதற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் அவர்களின் ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிபடுத்துகிறது. நன்கு படித்த பெண்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் பங்கேற்கிறார்கள்.

பெண் சிசுக்கொலையை ஒழித்திடவும் ஆண் குழந்தைகளை விரும்பும் போக்கை மட்டுப்படுத்திடவும் குடும்பக் கட்டுப்பாட்டை ஊக்கப்படுத்திடவும் அரசு, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்துவதன் மூலம் பெண் குழந்தைகளின் நலனை பாதுகாக்கிறது.

பெண் குழந்தைகளின் கல்வியை உறுதிசெய்திடவும் மற்றும் அவர்களின் உரிமைகளை காத்திடவும் அரசால் அக்குழந்தைகளின் பெயரில் நேரடியாக வைப்பு நிதி முதலீடு செய்து உதவிபுரியும் வகையில், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் 1992–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளின் பெயரில் நிலையான வைப்புத்தொகை "தமிழ் நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில்" முதலீடு செய்யப்படுகிறது. இந்த

வைப்புத்தொகையின் ரசீது நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. பெண் குழந்தையின் 18 வயது நிறைவடைந்ததும், திரண்ட வட்டிவிகிதத்துடன் கூடிய வைப்புதொகையின் முதிர்வு தொகையாக பயனாளிக்கு உயர்கல்வி பயில வழங்கப்படுகிறது.

## திட்டத்தின் நோக்கங்கள்

- பெண் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்தல், சமூக மற்றும் நிதிநிலையில் அதிகாரத்தினை வழங்குதல்
- பெண் குழந்தைகள் குறைந்த பட்சம் 10–ஆம் வகுப்பு வரை கல்வி பெறுவதை உறுதிசெய்தல் பின் உயர் கல்வி பெறவும் ஊக்குவித்தல்
- 18 வயதிற்கு பிறகு திருமணம் செய்து கொள்ளும் மனப்பாங்கினை பெண் குழந்தைகளிடம் ஊக்குவித்தல்.
- இரண்டு பெண் குழந்தைகளுடன் குடும்பகட்டுப்பாடு செய்து கொள்ள பெற்றோர்களை ஊக்குவித்தல்.

- பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிக்கும் திறன்களை மேம்படுத்த குடும்பத்தின் பங்களிப்பை உறுதி செய்தல்.

## திட்டத்தின் வகைகள் மற்றும் பயன் பெற தேவையான தகுதிகள்

<table>
<tr><th>வ.எண்</th><th>திட்டங்கள்</th><th>திட்டத்தில் பயன்பெற தேவையான தகுதிகள்</th></tr>
<tr><td>1.</td><td>திட்டம் –1<br>(ஒரு பெண் குழந்தை) ஆரம்ப வைப்புத்தொகை ரூ.50,000</td><td rowspan="2">• குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை / இரு பெண் குழந்தைகள் மட்டும் இருக்க வேண்டும். ஆண் குழந்தை இருக்க கூடாது, எதிர் காலத்தில் ஆண் குழந்தையை தத்தெடுக்கவும் கூடாது.<br>• பெற்றோரில் ஒருவர் 35 வயதிற்குள் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டிருக்க வேண்டும்.<br>• விண்ணப்பிக்கும் போது குழந்தைகளின் பெற்றோர் தமிழ்நாட்டில் 10 ஆண்டுகள் தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும்.<br>• குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/– க்குள் இருக்க வேண்டும்.<br>• திட்டம்–1ல், குழந்தையின் 3 வயது முடிவதற்குள்ளும், திட்டம்–2ல் இரண்டாவது குழந்தையின் 3 வயது முடிவதற்குள்ளும் திட்டத்தில் பயன் பெற விண்ணப்பிக்க வேண்டும்.</td></tr>
<tr><td>2.</td><td>திட்டம்–2 (இரண்டு பெண்குழந்தைகள்) ஆரம்ப வைப்புத்தொகை ரூ.25,000 (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்)</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | • முதல் மற்றும் இரண்டாம் பிரசவங்களின் போது ஒன்றுக்கு மேற்பட்ட பெண் குழந்தைகள் இருப்பின், அவர்கள் திட்டம்2-ன் கீழ் பயன் பெறுவர். |

## திட்டத்தின் பயனாளிகள்

இத்திட்டத்தின் கீழ் ஜூலை 2021 வரை 10,15,975 பெண் குழந்தைகள் பதிவு செய்யப்பட்டு ரூ.1628.97 கோடி தொகை வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் 29,344 பெண் குழந்தைகள் பதிவு செய்யப்பட்டு ரூ.73.42 கோடி தொகை வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மார்ச் 2021-ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 26,561 பெண் குழந்தைகளுக்கு ரூ.76.44 கோடி முதிர்வுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. 2021-22-ஆம் ஆண்டில் ஜூலை 2021 வரை 9,379

பெண் குழந்தைகளுக்கு ரூ.30.88 கோடி முதிர்வுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.4 பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் திட்டம்

ஒன்றிய அரசு, குழந்தை பாலின விகிதம் தேசிய சராசரியை விட குறைவாக உள்ள 100 மாவட்டங்களில், குழந்தை பாலின விகிதத்தின் சரிவைக் கருத்தில் கொண்டு "பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" திட்டத்தை 2015ல் அறிமுகப்படுத்தியது. 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தேசிய சராசரி பாலின விகிதம் ஒவ்வொரு 1000 ஆண் குழந்தைகளுக்கு, 918 பெண் குழந்தைகள் மட்டுமே உள்ளனர் என பதிவு செய்யப்பட்டுள்ளது. குழந்தை பாலின விகிதத்தில் சரிவு என்பது பெண் குழந்தைகள்

வாழ்வதற்கான உரிமையற்ற நிலையின் முக்கிய வெளிப்பாடாகும். இது பிறப்புக்கு முன் பாலினம் அறிந்து கொல்லப்படுதல், பிறந்த பின் பாலின ரீதியில் மறுக்கப்படும் மருத்துவ வசதி, ஊட்டச்சத்து மற்றும் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும்.

**திட்டத்தின் நோக்கங்கள்:**

1. பாலின பாகுபாடு அடிப்படையில் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதை தடுத்தல்.
2. பெண் குழந்தை உயிர் வாழ்வதையும் அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல்.
3. பெண் குழந்தையின் கல்வியினை உறுதி செய்தல் மற்றும் பங்கேற்பினை மேம்படுத்துதல்.

**திட்டத்தின் செயல்பாடுகள்:**

2015 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்தில் "பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து,

குழந்தை பாலின விகிதம் தேசிய சராசரியை விடக் குறைவாக இருந்த 10 மாவட்டங்களுக்கு 2018–ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. (அரியலூர், தர்மபுரி, நாமக்கல், சேலம், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை). இந்த மாவட்டங்களில் பெண் குழந்தைகளின் முக்கியத்துவம் குறித்து பல இனங்களில் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு அனைத்து அளவிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டம் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் மேற்கண்ட 11 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. மேலும், ஒரு மாவட்டத்திற்கு ரூ.50.00 இலட்சம் வீதம் ரூ.5.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மீதமுள்ள 21 மாவட்டங்களில், பெண் குழந்தைகளின் பிறப்பை ஊக்குவிப்பதற்கும், பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், பெண்

குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கும், தொலைத்தொடர்பு மற்றும் ஊடக செய்திகள் வாயிலாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பல்வேறு துறை அலுவலர்களால் களப்பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், பாராட்டு கடிதம் வழங்குதல் மூலம் பெண் குழந்தை பிறப்பை கொண்டாடுதல், தாய்மார்களுக்கு சுகாதார பொருட்கள் வழங்குதல், மரக்கன்றுகள் வழங்குதல், பெண் மற்றும் ஆண் குழந்தைகளின் பிறப்பு எண்ணிக்கையை தெரிவிக்கும் தகவல் பலகை பராமரித்தல், கையெழுத்து இயக்கம், மனித சங்கிலி, பேரணி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியரிடையே ஓவியப்போட்டி, கட்டுரை போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல், சுவரொட்டிகள், பதாகைகள் ஆகியவற்றை அரசு அலுவலகங்கள் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடுமிடங்களில் நிறுவுதல் ஆகிய செயல்பாடுகள் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.1.5 குழந்தை திருமண தடைச்சட்டம், 2006

திருமணம் செய்யும் பெண் 18 வயதுக்கு உட்பட்டவராக இருந்தாலோ அல்லது ஆண் 21 வயதுக்கு உட்பட்டவராக இருந்தாலோ, அத்தகைய திருமணம் ஒரு குழந்தைத் திருமணம் ஆகும். இத்தகைய திருமணங்கள் சட்டத்தை மீறிய குற்றச் செயலாக கருதப்படுகிறது.

குழந்தைகள் தமது குழந்தைப் பருவத்தை முழுமையாக அனுபவிக்க வேண்டியது அவர்களது சுதந்திரமாகும். குழந்தை திருமணம் அத்தகைய சுதந்திரத்தினைப் பறித்து, அவர்களின் அடிப்படை உரிமைகளான சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி, உடல் மற்றும் மனரீதியான பாலியல் வன்கொடுமைகளிலிருந்து பாதுகாப்பு ஆகியவற்றை மறுக்கின்றது. குழந்தைத் திருமணத்தினால், இக்குழந்தைகள் தீராத மன உளைச்சல் அடைவதோடு, அறிவு முதிர்ச்சி இன்மையால், மனவலிமை

குறைந்தும், சிறுவயதில் பிள்ளைப்பேறு அடைவதால், உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு, பல்வேறு சுகாதார சிக்கல்களை சந்திக்கின்றனர்.

குழந்தைத் திருமணத்தைத் தடை செய்யவும் குழந்தைத் திருமணத்தை நடத்துபவர்களுக்கும், துணை புரிவோருக்கும் கடுமையான தண்டனைகளை உறுதிசெய்யவும், நடைமுறைபடுத்தப்பட்ட குழந்தைத் திருமண தடைச்சட்டம்–2006ஐ மாநிலம் முழுவதும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது. மேலும் தமிழ்நாடு அரசால் மாநில விதிகள் 30.12.2009–இல் ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட சமூக நல அலுவலர்களை, குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைத் திருமணம் குறித்த தகவல் எவ்வகையில் கிடைக்கப்பெற்றாலும், புகாரினை ஏற்று நடவடிக்கை எடுக்க, குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்படி, குழந்தைத் திருமணத்தை நடத்திய பெற்றோர், பாதுகாவலர், மணமகன், மதத்தலைவர்கள், உறவினர்கள், நண்பர்கள், அமைப்புகள், திருமண தரகர் அனைவரும் குற்றம் செய்தவராகக் கருதப்படுகின்றனர். மேலும், இக்குற்றம் பிணையில் விடுவிக்க இயலாத குற்றமாகவும், இரண்டு ஆண்டுகள் வரை கடுமையான சிறைத் தண்டனை அல்லது ரூ. 1 இலட்சம் அபராதம் விதிக்கக்கூடிய அல்லது இரண்டையும் தண்டனையாக விதிக்கக் கூடியதாகவும், வரையறுக்கப்பட்டு உள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தேவையான பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு வழங்கிடவும் இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## குழந்தை திருமணத்தை தடுப்பதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

- பல்வேறு கள அலுவலர்கள் மற்றும் உள்ளூர் மக்களைக் கொண்ட கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு ஏற்படுத்தப்பட்டு,

கூட்டங்கள் நடத்தப்பட்டு, கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- சமுதாய வானொலி, சூரியன் எப்எம், அரசு கேபிள் தொலைக்காட்சி, பத்திரிக்கை செய்திகள் வாயிலாகவும், கொரோனா பெருந்தொற்று காலத்தில் குழந்தைத் திருமண தடை தொடர்பான விழிப்புணர்வு, பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.
- குழந்தைத் திருமணம் எனும் கொடுமையிலிருந்து பெண் குழந்தைகளை பாதுகாப்பதற்காக, குழந்தைத் திருமணம் தொடர்பான விளம்பரப்படம் தயாரிக்கப்பட்டு தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.
- ஒன்றிய அரசு திட்டமான மகிளா சக்தி கேந்திரா திட்டத்தின் கீழ் குழந்தை திருமணங்கள் அதிகம் நடைபெறும் இடங்கள் மற்றும் சுபமுகூர்த்த தினங்களுக்கு முன்னதாக, வட்டாரங்களில் குழந்தை திருமண தடைச்சட்டம் 2006

குறித்தும், குழந்தை திருமணத்தால் நிகழும் பாதிப்புகள், குழந்தைகள் **உதவி எண்.** 1098 குறித்தும் ஊராட்சிகள் தோறும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பணிபுரியும் பெண்கள் கூடுமிடங்களில் கொரோனா தொற்று தொடர்பான விதிமுறைகளை கடைப்பிடித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- ஒருங்கிணைந்த சேவை மையத் திட்டப்பணியாளர்களும், குழந்தை திருமணத் தகவல் கிடைக்கப் பெற்றவுடன் நேரடியாக களத்திற்கு சென்று குழந்தை திருமணங்களை தடுத்து நிறுத்துகின்றனர்.
- பெண் குழந்தைகளின் கல்வியை மையமாக கொண்டும், குழந்தை திருமணத்தை அறவே தடுத்திடும் நோக்கிலும், பெண் குழந்தை

பாதுகாப்புத் திட்டம், அனைத்து திருமண நிதியுதவி திட்டங்களும் உள்ளடக்கிய பல்வேறு நலத்திட்டங்கள், பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியடையும் போது பயனடையும் வகையில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில், 2020–21 ஆம் நிதியாண்டில் 1021 பெண்குழந்தைகளுக்கு மாதம் ரூ.1000/– வீதம் செலவில், மூன்று மாத கால தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு உள்ளது.
- சமூக வலைதளத்தில் ஒரு பிரிவாக இத்துறையின் மூலம் "தமிழ் மகளிர் குரல் – சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை" என்னும் தனி வலையொளி உருவாக்கப்பட்டு விழிப்புணர்வு குறும்படங்கள், பொதுமக்கள் பார்வைக்காக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

2008–ஆம் ஆண்டு முதல் ஜீலை 2021 வரை தமிழ்நாட்டில் 16,281 குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த 2020–ஆம் ஆண்டு மட்டும் 3,208 குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு உள்ளன.

### 2.1.6 பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கான விருதுகள்

பெண் குழந்தைகளின் திறன்களை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையிலும், பெண் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து செயல்படும் குழந்தைகளின் முயற்சியை பாராட்டும் வகையிலும், நாட்டில் முதன்முறையாக தமிழ்நாடு அரசால், ஒவ்வொரு ஆண்டும் 18 வயதுக்குட்டடப்பட்ட ஒரு பெண் குழந்தைக்கு தேசிய பெண் குழந்தைகள் தினமான ஜனவரி 24–ம் தேதி அன்று மாநில அளவில் விருதாக ரூ.1,00,000–ற்கான காசோலையும், பாராட்டு பத்திரமும் வழங்கப்பட்டு வருகிறது.

பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றும் மாவட்டங்களை அங்கீகரிக்கும் விதமாக மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு பதக்கங்களும், சான்றிதழும் தமிழ்நாடு பெண்குழந்தைகள் பாதுகாப்பு தினமான பிப்ரவரி 24 அன்று ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

## 2.2 மகளிர் நலன்

அமர்த்தியா சென் மற்றும் பேராசிரியர் ஜீன் டிரீஸ் ஆகியோர் இணைந்து எழுதிய "An Uncertain Glory – India and its Contradictions" என்ற புத்தகத்தில், தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு அடித்தளம் சமூக நலனுடன் கூடிய வளர்ச்சியாகும் என்று குறிப்பிட்டு பாராட்டி உள்ளனர்.

தமிழ்நாடு, பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் ஒரு புகழ்பெற்ற பாரம்பரியத்தை கொண்டுள்ளது. முதன்முதலாக 1921–இல் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1926–இல் பெண் சட்டமன்ற துணை சபாநாயகராக டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நியமனம் செய்யப்பட்டார். தேவதாசி முறை ஒழிப்பு மசோதா 1929–இல் நிறைவேற்றப்பட்டது. 1973–இல் முதல் முறையாக காவல் துறையில் பெண்கள் நியமனம் செய்யப்பட்டனர். 1988–இல் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கர்ப்பிணி பெண்களுக்கு 24 மணிநேர மருத்துவ சேவை தொடங்கப்பட்டது.

நாட்டிலேயே முதன் முறையாக பெண்களுக்கு சொத்தில் சம உரிமைக்கான சட்டம் 1989–இல் நிறைவேற்றப்பட்டது, அரசுப்பணிகளில் பெண்களுக்கு 30 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது, ஆரம்பப்பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரையிலான ஆசிரியர் பதவிகளில் பெண்கள் மட்டுமே நியமிக்கப்பட்டது, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டத்தின் கீழ் ரூ.6000/– கர்ப்பிணி பெண்களுக்கு நிதியுதவி வழங்கியது, 1989–ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் சுய

உதவிக்குழுக்கள் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது போன்றவை அரசால் தொடங்கப்பட்ட வழிகாட்டி திட்டங்களாகும். 1992–இல் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 1996–இல் தமிழகத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் முதல் முறையாக பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும் பணிபுரியும் மகளிர், உயர்கல்வி பயிலும் மாணவியர்கள் உட்பட அனைத்து மகளிரின் பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்திட தமிழ்நாடு போக்குவரத்துக் கழக கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகர பேருந்துகளில் கட்டணமில்லா பயண வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 2.2.1 திருமண நிதியுதவித் திட்டம்

பெண் கல்வியை உயர்த்துதல், குழந்தை திருமணத்தை தடுத்தல், சமூக சீர்திருத்த திருமணங்களை ஊக்குவித்தல் ஆகிய

நோக்கத்திற்காக திருமண நிதியுதவித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திருமண உதவித் திட்டங்கள் மக்களின் பேராதரவு பெற்ற திட்டங்களாகும்.

1. வறிய நிலையில் உள்ள பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளின் திருமணத்தை நடத்த உதவுவதோடு ஏழ்மை நிலையில் உள்ள பெண்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் வகையில் 03.06.1989 முதல் துவங்கப்பட்ட திட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டமாகும்.
2. ஏழை கைம்பெண் தாய்மார்களின் மகளின் திருமணத்தை நடத்த உதவும் நோக்கில் 1982–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டம் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டமாகும்.
3. ஆதரவற்ற பெண்கள் திருமணம் செய்து கொள்ள உதவி செய்திடும் வகையில் 1985–ஆம் ஆண்டு அரசால் துவங்கப்பட்ட

திட்டம் அன்னை தெரசா நினைவு திருமண நிதியுதவித் திட்டமாகும்.

4. கைம்பெண்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் நோக்கத்துடனும் அவர்களின் மறுமணத்தை ஊக்கப்படுத்தும் விதத்திலும் 1975–ஆம் ஆண்டு முதல் டாக்டர். தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.
5. சமூகத்தில் காணப்படும் சாதி வேறுபாட்டினை அகற்றவும், வரதட்சணைக் கொடுமைகளை ஒழிக்கும் விதத்திலும் கலப்புத் திருமணங்களுக்கு நிதியுதவி அளித்து ஊக்கப்படுத்த 1968 முதல் கலப்புத்திருமண நிதியுதவி திட்டம் தற்போது டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு கலப்பு திருமண நிதியுதவித் திட்டம் என செயல்பட்டு வருகிறது.

# அனைத்து திருமண நிதியுதவித் திட்டங்களில் பயன் பெறுவதற்கான தகுதிகள்:–

| திருமண நிதி உதவித் திட்டத்தின் பெயர் | ஆண்டு வருமான வரம்பு (ரூ) | குறைந்த பட்ச வயது வரம்பு | கல்வித் தகுதி | விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|
| 1,மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டம் | ரூ.72,000 | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | குறைந்த பட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பழங்குடியினர்– 5ம் வகுப்பு | விண்ணப்பங்களை திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பாக அளிக்கப்பட வேண்டும். சிறப்பு நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை மனுக்களை ஏற்றுக்கொள்ளலாம். திருமண நாளன்றோ அல்லது திருமணம் முடிந்த பின்னரோ அளிக்கப்படும் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது. |
| 2, ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம் | ரூ.72,000 | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | இல்லை | விண்ணப்பங்களை திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பாக அளிக்கப்பட வேண்டும். சிறப்பு நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை மனுக்களை ஏற்றுக்கொள்ளலாம். |
| 3, அன்னை தெரசா– அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டம் | வருமான வரம்பு இல்லை | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | இல்லை | திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பு விண்ணப்பிக்க வேண்டும். சிறப்பு நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை மனுக்களை ஏற்றுக்கொள்ளலாம். |
| 4, டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம் | வருமான வரம்பு இல்லை | மணமகள் – 20 வயது மணமகன் – 40 வயது (அதிகபட்சம்) | இல்லை | மறுமணம் முடிந்த 6 மாதக் காலத்திற்குள் |

| திருமண நிதி உதவித் திட்டத்தின் பெயர் | ஆண்டு வருமான வரம்பு (ரூ) | குறைந்த பட்ச வயது வரம்பு | கல்வித் தகுதி | விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|
| 5, டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமணம் நிதியுதவித் திட்டம் திட்டம் – I: ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மற்றும் பிற இனத்தவர் திட்டம் II: முற்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பு | வருமான வரம்பு இல்லை | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | குறைந்த பட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பழங்குடியினர்– 5ம் வகுப்பு | திருமணம் முடிந்த இரண்டு ஆண்டிற்குள் |

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திருமண உதவித் திட்டங்களில், 8 கிராம் தங்க நாணயத்துடன் பட்டம்/பட்டயம் பெற்றவர்களுக்கு ரூ.50,000/–, ஏனையோருக்கு ரூ.25,000/– நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணம் நிதியுதவித் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமணம் நிதியுதவித்

திட்டங்களின் கீழ், 8 கிராம் தங்க நாணயத்துடன் பட்டதாரி அல்லாதோருக்கான நிதியுதவித் தொகையான ரூ.25,000/-ல், மின்னணு பரிமாற்றம் மூலம் ரூ.15,000/- மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ.10,000/- பட்டம் / பட்டயம் பெற்றோருக்கான நிதியுதவி தொகை ரூ.50,000/-ல், மின்னணு பரிமாற்றம் மூலம் ரூ.30,000/- மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ.20,000/-மும் வழங்கப்படுகிறது.

2020-2021-ஆம் நிதியாண்டில் மேற்படி ஐந்து வகையான திருமண உதவித் திட்டங்களின் கீழ் 1,08,373 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.762.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.2 சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள்,

கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் சுயமாக தொழில் செய்து தங்களது வாழ்க்கை தரத்தை உயர்த்தி கொள்ள பயன்படும் வகையில் மோட்டார் இணைக்கப்பட்ட தையல் இயந்திரங்கள் அரசால் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயனடைவதற்கு வயது வரம்பு 20 முதல் 40 வயது வரை இருத்தல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.72,000/- ஆகவும், தையல் பயிற்சி பெற்ற நபராகவும் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் 2020-2021-ஆம் நிதியாண்டில் 3,000 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.1.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.3 அரசு சேவை இல்லங்கள்

செங்கல்பட்டு, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர் ஆகிய எட்டு மாவட்டங்களில் அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. கவனிப்பும்,

பாதுகாப்பும் தேவைப்படும் ஏழைப்பெண்கள், ஆதரவற்ற பெண்கள், கைம்பெண்கள் ஆகியோருக்கு தங்கும் இடம், உணவு, சுகாதாரம் , பயிற்சி மற்றும் மருத்துவ வசதி போன்றவை அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வில்லங்களில் உள்ள பெண்களின் திறனை மேம்படுத்த தொழிற்பயிற்சி, ஆங்கிலத்தில் பேசுவதற்கான பயிற்சி, கணினி பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து வழிகாட்டுதல் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. பல்வேறு சூழ்நிலைகளில் பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் செய்த பெண்கள் இவ்வில்லங்களில் குழந்தைகளுடன் தங்கி தங்கள் பள்ளிப் படிப்பையும் தொடரலாம். பெண் குழந்தைகள் 18 வயது வரையிலும், ஆண் குழந்தைகள் 10 வயது வரையிலும் இச்சேவை இல்லங்களிலேயே தங்கி கல்வி பயிலலாம்.

அனைத்து சேவை இல்லங்களிலும் உள்ளுறைவோரின் பாதுகாப்பினை உறுதி செய்திட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

2020–2021–ஆம் ஆண்டில் இவ்வில்லங்களில் 527 உள்ளுறைவோர்கள் தங்கி பயனடைந்து வருகின்றனர்.

அரசு சேவை இல்லங்களில் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து முடித்த பெண்குழந்தைகள் உயர்கல்வி பயில்வதை ஊக்கப்படுத்திடும் வகையில், தொழில்சார் கல்வி பயின்றிட ரூ.50,000/– மற்றும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்திட ரூ.30,000/– நிதியுதவி அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.486.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.2.4 மகளிர் தொழிற்கூட்டுறவு சங்கங்கள்

மகளிருக்கு அதிகாரப்பகிர்வு அளிப்பதன் மூலம் பாலின சமத்துவத்தை அடைவதே அரசின் கொள்கையாகும்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்படும் மகளிர் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் மூலம் பெண்களின் பொருளாதார வளர்ச்சி

மேம்படுத்தப்பட்டு வருகிறது. இச்சங்கங்களில் 18 வயது முதல் 40 வயது வரை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெண்கள், கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு வருமானம் ஈட்டக்கூடிய வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் 124 மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சங்க உறுப்பினர் தங்களது வாழ்விடத்திலிருந்தே தங்களது வீட்டுப் பணிகளுடன் சேர்த்து பள்ளி குழந்தைகளுக்கான சீருடைகள் தைக்கும் பணியினை மேற்கொள்கின்றனர். இதனால் அவர்களது குடும்ப வருமானம் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் வளர்ச்சிக்கு துணைபுரிகிறது.

மேலும் 98 மகளிர் தையல் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 1 திருநங்கையர் தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கம் சமூக நல இயக்குநர்

கட்டுப்பாட்டிலும், 25 இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் கட்டுப்பாட்டிலும் செயல்படுகின்றன.

இம்மகளிர் தையற் தொழிற்கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் பயன்பெறும் பள்ளி மாணவ மாணவியர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ஆகியவற்றின் கீழ் இயங்கும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கும் நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இதனால் பெண்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படுவதுடன் அவர்களின் தினசரி செலவினங்களுக்கு முறையான வருவாயை ஈட்டித் தருகிறது.

தமிழக அரசு திருநங்கையரின் நலனுக்காக சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் வருமானத்தை உறுதி செய்யும் வகையில் ஒரு தனி தையல் தொழிற் கூட்டுறவு சங்கத்தை உருவாக்கியுள்ளது.

**கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அவற்றில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை விவரம் :–**

| வ. எண் | கூட்டுறவு சங்கங்களின் வகைகள் | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 83 | 80,884 |
| 2 | எழுதுபொருள் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் (தையற் பணியிலும் ஈடுபடுகின்றனர்) | 15 | 4,087 |
| 3 | இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 25 | 1,350 |
| 4 | திருநங்கையர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கம் | 1 | 25 |
| **மொத்தம்** | | **124** | **86,346** |

2020–2021 ஆம் கல்வியாண்டில் 38.05 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கப்பட்டு, அதற்கான தையல் கூலி ரூ.81.26 கோடி பள்ளிக் கல்வித் துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

## 2.2.5 குறுகிய கால தங்கும் இல்லங்கள் (ஸ்வதார் கிரஹ்)

ஒன்றிய அரசின் பெண்கள் (ம) குழந்தைகள் மேம்பாட்டு துறை 1969–ஆம் ஆண்டில் பெண்கள் (ம) குழந்தைகளை ஒடுக்கப்படுவதிலிருந்து தடுக்கவும் அவர்கள் உயிர் வாழவும் மறுவாழ்வு பெறவும் குறுகிய கால தங்கும் இல்லம் என்ற திட்டத்தினை தொடங்கியது. 2001–2002–ஆம் ஆண்டில் இதே நோக்கத்துடன், இக்கட்டான சூழ்நிலைகளில் உள்ள பெண்களுக்கு ஸ்வதார் என்ற திட்டத்தினை ஒன்றிய அரசின் பெண்கள் (ம) குழந்தைகள் மேம்பாட்டு துறையின் மூலம் தொடங்கப்பட்டது. இத்திட்டமானது இக்கட்டான சூழ்நிலைகளில் உள்ள பெண்களின்

மறுவாழ்விற்கு தங்கும் இடம், உணவு, உடை, ஆலோசனை, பயிற்சி, மருத்துவ (ம) சட்ட உதவி வழங்குகிறது.

தமிழ்நாட்டில் 36 ஸ்வதார் இல்லங்கள் மூலம் 916 பெண்கள் மற்றும் 66 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். ஸ்வதார் இல்லங்கள் நடத்திட தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானியம் 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால வழங்கப்படுகிறது.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.3.35 கோடி ஒன்றிய அரசின் பங்காகவும், ரூ.2.23 கோடி மாநில அரசின் பங்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.6 மகளிர் சக்தி மையம்

மகளிர் சக்தி மையம் எனும் இத்திட்டம் ஒன்றிய அரசின் "மகளிர் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்கான குழுமம்" என்ற குடையின் கீழ்

2017–2018–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டமானது கிராம புற மகளிர், அவர்தம் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த சேவைகளான திறன் வளர்ப்பு பயிற்சிகள், அரசு நலத்திட்டங்கள், அடிப்படை சட்ட உதவிகள், பாதுகாப்பிற்கான அமைப்புகள், கல்வியறிவு, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து போன்றவற்றை ஒரே இடத்தில் எளிதாக அணுகி பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கி தருகிறது.

இத்திட்டத்திற்கான நிதியானது, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகித அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இத்திட்டம் மாநில, மாவட்ட (ம) வட்டார அளவில் செயல்பட்டு வருகிறது.

### 2.2.6.1 மாநில பெண்கள் வள மையம்

மாநில பெண்கள் வள மையமானது, நலிவுற்ற மற்றும் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட மகளிரை

பாதிக்கக்கூடிய பிரச்சினைகள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு, மகளிர் மேம்பாடு அடைவதற்கு தேவையான திறன்வளர்ப்பு பயிற்சிகள் வழங்கி, பெண்கள் வாழ்வில் பிரச்சனைகளை களைதல் மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

பெண்களை மையமாகக் கொண்ட திட்டங்களான ஒருங்கிணைந்த சேவை மையம், பெண்கள் உதவி மையம் போன்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுவதற்கான தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் இதர துறை சார்ந்த உதவிகள் கிடைப்பதற்கான முயற்சிகள் எடுத்து வருகிறது.

தற்போது 32 மாவட்ட பெண்கள் வள மையங்களும் 16 வட்டார பெண்கள் வள மையங்கள் பின்தங்கிய இரண்டு மாவட்டங்களான விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுகின்றன.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.9.77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.7 ஒன் ஸ்டாப் சென்டர் (OSC)

ஒன்றிய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பு திட்டமான "சகி" என்ற ஒருங்கிணைந்த சேவை மையம், தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பத்தில், சமுதாயத்தில், பணிபுரியும் இடத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் திட்டமாகும். பாலின துன்புறுத்தல் மற்றும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தற்காலிக தங்கும் வசதி, மருத்துவ உதவி, சட்ட உதவி, காவல் உதவி, உளவியல் ஆலோசனை மற்றும் ஆற்றுப்படுத்துதல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகள் ஓரிடத்தில் கிடைக்கும் வகையில், ஒருங்கிணைந்த சேவை மையங்கள் 32 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மையங்கள் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை / மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் செயல்படுகின்றன.

மேலும், புதிதாக உருவாக்கப்பட்ட இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக் குறிச்சி, தென்காசி உள்ளிட்ட நான்கு மாவட்டங்களுக்கு சேவை மையங்கள் அமைக்க ஒன்றிய அரசால் 2021–2022–ஆம் நிதியாண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், ஒன்றிய அரசின் 100 சதவீத நிதியில் செயல்படுகிறது. ஜுலை 2021 வரை ஒருங்கிணைந்த சேவை மையங்களின் மூலம் 16,799 மகளிர் பயனடைந்துள்ளனர். இதுவரை 1,470 பாதிக்கப்பட்ட மகளிருக்கு ஒருங்கிணைந்த சேவை மையத்தில் தற்காலிகமாக தங்குவதற்கு இட வசதி அளிக்கப்பட்டு சேவைகள் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த சேவை மையங்களுக்கு சொந்த கட்டிடம் கட்ட ரூ.48 இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### 2.2.8 மகளிர் உதவி எண்

2018–ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசின் 100% நிதியுதவியுடன் நாடு முழுவதும் ஒரே சீரான குறியீடு **181 மகளிர் உதவி எண்** மூலம் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 24 மணி நேர உடனடி மற்றும் அவசர கால அழைப்பை ஏற்பதை நோக்கமாக கொண்டு இத்திட்டம் செயல்படுகிறது பெண்களுக்கான அரசின் திட்டங்கள் மற்றும் அவை குறித்த விவரங்களையும், தகவல் கோரும் பெண்களுக்கு இம்மையம் அளித்து வருகிறது. 2021–2022–ஆம் ஆண்டில் தொடரும் செலவினத்திற்காக ஒன்றிய அரசால் ரூ.23.25 லட்சம் மகளிர் உதவி மையத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

மகளிர் உதவி எண் (181) வாயிலாக 2018 முதல் ஜூலை 2021 வரை பெறப்பட்ட 3,21,174 அழைப்புகளுக்கு பதிலளிக்கப்பட்டு 21,094 பாதிக்கப்பட்ட பெண்களின் அழைப்புகள் பதிவு

செய்யப்பட்டு அவர்களுக்கு பல்வேறு துறைகள் மூலம் வெவ்வேறு சேவைகள் அளிக்கப்பட்டுள்ளன.

### 2.2.9 நிர்பயா நிதி

பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கிடும் நோக்கில் 2016–ஆம் ஆண்டில் ஒன்றிய உள்துறை அமைச்சகம் மூலம் "நிர்பயா நிதி" ஏற்படுத்தப்பட்டது. நாட்டில் சென்னை உட்பட 8 நகரங்களில், பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்க உதவிடும் வகையில், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சென்னை பெருநகர மாநகராட்சிக்கு ரூ.425.06 கோடி மதிப்பில் பெருநகர சென்னை காவல் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை மாநகர போக்குவரத்து துறை மற்றும் சமூக நலத்துறை ஆகிய நான்கு துறைகள் மூலம் 12 திட்டங்கள் செயல்படுத்திட ஒன்றிய அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இந்நிதி 60:40 என்ற விகிதத்தில், ஒன்றிய, மாநில அரசின் பங்களிப்புடன்

2018–2019 ஆம் ஆண்டு முதல் துறைகள் மூலம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நிர்பயா நிதியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் பெண்கள் உதவி எண் சேவையினை வலுப்படுத்திட ரூ.12.96 கோடி இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணை ரூ.6.48 கோடி 2019–2020–ஆம் ஆண்டு பெறப்பட்டது. கூடுதல் பணியாளர்களுடன் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் பெண்கள் உதவி எண் சேவையினை தரம் உயர்த்தி, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அனைத்து தரப்பு பெண்களையும் சென்றடையும் வகையிலும், பெண்களின் அவசர தேவை மற்றும் துயர் களைய வசதியாக, தொலைபேசி சேவையை தவிர, கூடுதலாக முகநூல், கீச்சகம்(Twitter), வலையொளி (Youtube), படவரி(Instagram), மின்னஞ்சல், குறுஞ்செய்தி போன்றவை வாயிலாகவும் அழைப்புகள் பெறப்பட்டு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பெண்கள்

உதவி எண்ணிற்கு சிறப்பு வலைத்தளம் உருவாக்கப்பட்டு தகவல் பரிமாற்றம் செய்யும் வசதி, பாதிக்கப்பட்ட பெண்கள் தொலைத்தொடர்பு கலந்தாய்வு (Teleconferencing) மூலம் தனக்கு தேவையான சட்ட உதவி, ஆலோசனைகள், காவல்துறை, மருத்துவ உதவி ஆகியவற்றை பெறவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது

### 2.2.10 பெண்களுக்கான சமூக நலச் சட்டங்கள்

பெண்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதி செய்யும் பொருட்டு, சமூக நலத்துறை கீழ்காணும் சமூக நலச் சட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961
2. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 மற்றும் அதன் விதிகள் 2006
3. பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013.

4. தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 மற்றும் தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், 2015.

### 2.2.11 பணிபுரியும் மகளிர்க்கான அரசு விடுதிகள்

பணிக்கு செல்லும் பெண்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் பாதுகாவலர்களாக இருப்பதாலும், அவர்கள் வீட்டில் இருப்பது போன்ற உணர்வினையும் பாதுகாப்பினையும் தருவதாக அமைந்திடும் வகையில் பணிபுரியும் மகளிர்க்கான அரசு விடுதி செயல்பட தமிழக அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தற்போதைய சூழ்நிலையில், தங்கள் குடும்பத்திலிருந்து எந்த இடத்திற்கும் தங்கள் குடும்ப வருமானத்திற்காக பொருளாதார ரீதியாக பங்களிப்பு செய்ய விரும்பும் பெண்கள் பாதுகாப்பான மற்றும் குறைந்த வாடகையில் தங்குமிடம்

தேவைப்படுகிறது. 2021–ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரையில் அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியும் மகளிருக்கான பணிபுரியும் அரசு விடுதிகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப 18 மாவட்டங்களில் செயல்படும் 28 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகளுடன் மீதமுள்ள மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

## 2.2.12 தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதி நிறுவனம்

தமிழ்நாடு அரசு, 2013–ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டத்தின் கீழ் ஒரு சிறப்பு நோக்கங்களை செயல்படுத்தும் அமைப்பான (Special Purpose Vehicle) "தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் கழகம் லிமிடெட்" (Tamil Nadu Working Women's Hostels Corporation Limited) என்ற அமைப்பினை 2018–2019–ல் உருவாக்கியுள்ளது. இந்த நிறுவனம் மகளிர் தங்கும்

விடுதிகள், குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லம், குழந்தைகள் பராமரிப்பு நிறுவனம் ஆகியவற்றிற்கு நவீன வசதிகள் உடைய உள்கட்டமைப்பு அமைத்து மேலாண்மை மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை ஏற்று நடத்தும். இந்நிறுவனம் தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தின் நிதி பெற்று செயல்படும். சமூக நல இயக்குநரகம் ஒருங்கிணைப்பு நிறுவனமாக செயல்படுகிறது.

இத்திட்டத்தின் நோக்கமானது வீட்டை விட்டு விலகி பணிக்காக வரும் பெண்களுக்கு வீடு போன்ற பாதுகாப்பு மற்றும் இனிமையான சூழலை கொண்ட தங்கும் விடுதிகளை ஏற்படுத்தி தருவதாகும்.

## 2.3 முதியோர் நலன்

60 வயதிற்கு மேற்பட்டவர்கள் மூத்த குடிமக்கள் ஆவர். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில், தமிழ்நாடு (10.4%) 75 இலட்சம் மூத்த குடிமக்களை பாதுகாப்பதில் கேரள மாநிலத்திற்கு (11%)

அடுத்தபடியாக சிறந்த மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாக ஆயுட்கால விகிதத்தை உயர்த்த செயல்பட்டதன் மூலம் இந்நிலையை சாதிக்க முடிந்தது.

தமிழ்நாட்டில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையானது 60 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ வசதி போன்றவற்றை அளிக்க தொண்டு நிறுவனங்கள் மூலம் முதியோர் இல்லங்களை நடத்தி வருவதோடு முதியோர் பயனடையும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சட்டத்தை தொய்வின்றி செயல்படுத்தி வருகிறது.

### 2.3.1 பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம் 2007

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டமானது 2007–ஆம் ஆண்டு இந்திய அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம் மூத்த

குடிமக்களுக்கு பொருளாதார பாதுகாப்பு, நலன் மற்றும் பாதுகாப்பை வழங்குவதன் மூலம் அரசியலமைப்புச் சட்டம் 21–ஆம் பிரிவின்படி கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம் மற்றும் வாழ்விற்கான உரிமை, இருப்பிடத்திற்கான உரிமை போன்றவற்றை உறுதிப்படுத்துகிறது.

இச்சட்டத்தின்படி பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களை பாதுகாப்பது அவர்களின் குழந்தைகள் மற்றும் அவர்களின் சட்டபூர்வ வாரிசுகளின் கடமையாகும். இச்சட்டத்தின்படி ஆதரவற்ற முதியோரின் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்ய முதியோர் இல்லங்களை நடத்துவது அரசின் கட்டாயமாகிறது. இச்சட்டமானது மூத்த குடிமக்களின் உடல் நலம், மன நலம் மற்றும் அவர்கள் சொத்துகளுக்கு பிரச்சினை ஏற்படும் பட்சத்தில் பராமரிப்பு தீர்ப்பாயங்கள் மூலம் தீர்வு காண வழிவகை செய்துள்ளது. தமிழ்நாடு அரசு இச்சட்டத்தின் கீழ் விதிகளை 2009–ஆம் ஆண்டில் இயற்றியுள்ளது.

**சட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- இச்சட்டம் மூத்த குடிமக்கள் மற்றும் ஈன்றெடுத்த, தத்தெடுத்த, மாற்றான் தந்தை அல்லது மாற்றான் தாய் ஆகிய பெற்றவர்கள் இருவரையும் உள்ளடக்கியுள்ளது.
- தங்கள் குழந்தைகள் / சட்டபூர்வ வாரிசுகளால் பராமரிக்கப்படாவிட்டால் பாதிக்கப்பட்ட எந்த மூத்தக் குடிமகனும் இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பராமரிப்பு தீர்ப்பாயங்களுக்கு மனு அளித்து அதிகபட்சம் ரூ.10,000/– வரை சீவனாம்சமாக பெற்றுக்கொள்ளலாம்.
- இச்சட்டத்தின் கீழ் சீவனாம்சம் கோரி பெறப்பட்ட விண்ணப்பம் 90 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும்.
- மூத்த குடிமக்களுக்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கக்கூடிய பொறுப்பில் உள்ளவர் அவர்களை கைவிட்டால், அவர்களுக்கு தண்டனையாக

3 மாதங்கள் சிறைதண்டனை அல்லது ரூ.5,000/– வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

- இச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாளான 31.12.2009 முதல் ஒரு பெற்றோர் அல்லது மூத்த குடிமகன் தங்களை பராமரிப்பார்கள் என்ற நிபந்தனையுடன் சொத்துக்களை தன் பிள்ளைகள் அல்லது வாரிசுதாரர்களுக்கு தானசெட்டில்மெண்ட் செய்த பின், அவர்கள் அதன்படி நடக்காவிட்டால் பராமரிப்பு தீர்ப்பாயங்களில், அந்த தான செட்டில்மெண்டை இரத்து செய்யக் கோரி விண்ணப்பம் செய்யலாம்.

**பாராமரிப்பு தீர்ப்பாயங்கள்**

இச்சட்டத்தின் பிரிவு 5–ன் கீழ் வழக்கை தீர்ப்பதற்காகவும், முடிவு செய்வதற்காகவும் மற்றும் பாராமரிப்பு ஆணை வழங்குவதற்காகவும் அரசானது இச்சட்டத்தின் பிரிவு 7–ன் கீழ் வருவாய் கோட்ட அலுவலர்களை பாராமரிப்பு தீர்ப்பாயங்களாக

நியமித்துள்ளது. இதுபோன்று 92 தீர்ப்பாயங்கள் தமிழ் நாட்டில் செயல்படுகின்றன. இத்தீர்ப்பாயம் உரிமையியல் நீதிமன்றங்களுக்கான அனைத்து அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

**சமரச அலுவலர்**

மாநில அரசானது பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலச் சட்ட விதிகள், 2009 பிரிவு 9-ன் படி மாவட்ட சமூக நல அலுவலர்களை சமரச அலுவலர்களாக நியமித்துள்ளது. எனினும் பாதிக்கப்பட்ட முதியவர் மற்றும் எதிர் தரப்பினர் இருவரும் சமரசம் செய்து கொள்ள விருப்பப்பட்டால், தீர்ப்பாயம் அவ்வழக்கை சமரச அலுவலருக்கோ அல்லது இரு தரப்பினரும் ஒத்துக்கொண்ட நபரையோ சமரச அலுவலராக நியமித்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை அனுப்பி ஒரு மாத காலத்திற்குள் இரு தரப்பினருக்கும் ஏற்புடையவாறு தீர்வு காண வழக்கினை அனுப்பலாம்.

**பராமரிப்பு அலுவலர்**

இச்சட்டத்தின் (2007) பிரிவு–18(1) ன் கீழ் அரசு, மாவட்ட சமூக நல அலுவலர்களை பராமரிப்பு அலுவலர்களாக நியமித்துள்ளது. இவர் பராமரிப்பு தீர்ப்பாயங்களிலோ அல்லது மேல்முறையீடு தீர்ப்பாயத்திலோ அப்பெற்றோர் விரும்பினால் அவர்கள் சார்பில் தோன்றி அவர்கள் தரப்பு வாதத்தை உரைக்கலாம்.

**மேல்முறையீடு தீர்ப்பாயம்**

பராமரிப்பு தீர்ப்பாயத்தின் ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய மாநில அரசு, மாவட்ட ஆட்சியர்களை மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களாக நியமித்துள்ளது.

தீர்ப்பாயத்தின் ஆணைகளுக்கு எதிராக 60 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம் என்றும் மேல்முறையீட்டாளர் தகுந்த காரணத்தினால் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் மேல்முறையீடு

செய்ய இயலவில்லை என்று கருதினால் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் மேல்முறையீட்டு விண்ணப்பத்தினை ஏற்றுக்கொள்ளலாம்.

**மாநில மற்றும் மாவட்ட அளவிலான மூத்த குடிமக்கள் நலக் குழு**

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம் 2007–யினை சிறப்பாக செயல்படுத்துவதை உறுதிசெய்வதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் மாநில உயர்மட்ட ஆலோசனை குழுவினையும் ஒவ்வொரு மாவட்ட அளவிலும் மூத்த குடிமக்களுக்கான நலனை பாதுகாப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆலோசனை குழுவினையும் மாநில அரசு அமைத்துள்ளது.

**மூத்த குடிமக்களுக்கான நிறுவன சேவைகள்:**

## 2.3.2 மாநில அரசு நிதியின் கீழ் மானியம் பெறும் முதியோர் இல்லங்கள்

1991 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு தொண்டு நிறுவனங்களை முதியோர் இல்லங்கள் ஆரம்பிக்க ஊக்குவித்து தங்கள் குடும்பங்களால் கைவிடப்பட்ட 60 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற முதியோர்களை பாதுகாக்கும் பொருட்டு நிதியுதவி அளித்து வருகிறது.

இவ்வில்லங்களில் உணவு, உடை, உறைவிடம், மருத்துவ உதவி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்றவை அளிக்கப்பட்டு வருகின்றன. ஒரு முதியோர் இல்லத்தில் 40 முதியோர்கள் தங்கி பயனடையலாம். முதியோர்களுக்கு உணவூட்டு மானியமாக ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.1,200/- வீதம் வழங்கப்படுகிறது.

21 முதியோர் இல்லங்களில் 724 முதியோர்கள் பயனடைந்துள்ளனர். இவ்வில்லங்களுக்கான மானியம்

5:1 என்ற விகிதத்தில் மாநில அரசும் தொண்டு நிறுவனமும் பங்களிக்கிறது.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.1.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.3 முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள்

தமிழ்நாடு அரசு ஒரு நிறுவன அமைப்பிற்குள் தாத்தா பாட்டியின் அன்பு பேரக் குழந்தைகளுக்கு கிடைப்பது போன்ற சூழலை உருவாக்க வேண்டி முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகம் என்ற திட்டத்தினை 2011-12 ஆண்டிலிருந்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு மானிய உதவி வழங்குவதன் மூலம் செயல்படுத்தி வருகிறது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகமும் 25 குழந்தைகள் மற்றும் 25 முதியோர்களுக்கான தங்கும்

வசதியுடன் செயல்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் 44 ஒருங்கிணைந்த வளாகங்களில் 1005 குழந்தைகள் மற்றும் 1,020 முதியோர்கள் 2020-2021-ஆம் ஆண்டில் பயனடைந்துள்ளனர். மாநில அரசு 75% மற்றும் தொண்டு நிறுவனம் 25% என்ற விகிதத்தில் இத்திட்டத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.6.43 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.4 ஒருங்கிணைந்த மூத்த குடிமக்களுக்கான திட்டம் (IPSrC)

ஒன்றிய அரசு, மூத்த குடிமக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த தங்குமிடம், உணவு, மருத்துவ கவனிப்பு மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்கி ஆக்கமும் செயல்திறன் மிக்க முதியோரை பெற ஊக்குவிக்கவும், தொடர்புடைய துறைகளின் பங்கேற்பினை

அதிகரிக்கவும், இத்திட்டத்தை 2016–17–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஒன்றிய அரசு, தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பெறும் முதியோர் இல்லங்களுக்கு 90:10 என்ற விகிதத்தில் நேரடியாக மானிய உதவி அளித்து வருகிறது. இத்திட்டமானது ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் முதியோர் இல்லங்கள் செயல்படுத்தப்படுவதுடன், நடமாடும் மருத்துவக் குழு, முதியோர்களுக்கான தொடர் சிகிச்சை மையம் மற்றும் பிசியோதெரபி கிளினிக் போன்ற பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.12.85 கோடி மானிய நிதி உதவியுடன் 71 திட்டங்கள் மூலம் 3054 முதியோர்கள் பயனடைந்து வருகின்றனர்.

### 2.3.5 முதியோர் ஆதரவு மையங்கள்

தற்போதைய சமூக பொருளாதார சூழ்நிலையில் கல்வி, வேலைவாய்ப்பு, தனி குடும்ப விருப்பம் போன்ற காரணங்களினால் முதியோர்கள் தனிமைபடுத்தப்படுகின்றனர். இப்படிப்பட்ட தனிமை முதியோர்களுக்கு உடல் மற்றும் மன நலம் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இதுபோன்ற முதியோர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் மற்றும் அவர்களின் திறன்களை மேம்படுத்தவும், நோபல் விருது பெற்ற டாக்டர்.எஸ்தர் டஃப்லோ அவர்களின் தலைமையில் தமிழக அரசால் அமைக்கப்பட்ட ஒரு குழு ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின்படி, முதியோர்களுக்கான பிரத்யேக சிறப்பு மையமாக முதியோர் ஆதரவு மையம் என்கிற திட்டம் கொண்டு வரப்பட்டது.

37 மாவட்டங்களில் தலா 2 வட்டாரங்களில் முன்னோடி திட்டமாக முதியோர் ஆதரவு மையங்கள்

தொண்டு நிறுவனங்கள் மூலம் ரூ.37.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இம்முதியோர் ஆதரவு மையங்கள் தங்கும் இல்லமாக அல்லாமல் பகல் நேர பராமரிப்பு மையங்களாக செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் செய்தித்தாள்கள் மற்றும் புத்தகங்கள் கிடைப்பதோடு எளிமையான உடற்பயிற்சி, மன நல ஆலோசகர்கள் மூலம் ஆலோசனையும் வழங்கப்பட்டு வருகிறது. முதியோர்கள் தங்கள் நண்பர்களை சந்தித்து தங்களது அன்பையும் உணர்வுகளையும் பகிர்ந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியடைவதோடு மட்டுமல்லாமல் தங்களது திறமைகளை வெளிகொணரும் இடமாகவும் இம்மையங்கள் செயல்படுகின்றன.

### 2.3.6. முதியோர் உதவி எண் – 14567

இந்தியா முழுவதும் ஒன்றிய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒரே **முதியோர் உதவி எண் 14567,** சேவை முதியோர்களுக்கு காலை 08.00 மணி முதல்

இரவு 8 மணி வரை வழங்கும் பொருட்டு தமிழ்நாட்டில் 28.04.2021 அன்று முதல் செயல்பட்டு வருகிறது. இதற்கு ஒன்றிய அரசு 100 விழுக்காடு நிதியினை இவ்வுதவி எண்ணை செயல்படுத்தும் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. 2021–22–ஆம் ஆண்டிற்கு ரூ.1.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

முதியோர் உதவி எண் 14567 என்பது ஒரு கட்டணமில்லா தொலைபேசி எண்ணாகும். இம்முதியோர் உதவி எண்ணிற்கு அழைக்கும் முதியோர்களுக்கு கீழ்க்காணும் சேவைகள் அளிக்கப்படுகிறது.

- பாதிக்கப்பட்ட முதியோர்களை மீட்பது மற்றும் நிவாரண ஒருங்கிணைப்பு நடவடிக்கை
- முதியோர் இல்லங்கள் குறித்த தகவல்கள்
- மூத்த குடிமக்களுக்கான நலத்திட்டங்கள் குறித்த தகவல்கள்
- மன நலம் மற்றும் சட்ட ஆலோசனை

## 2.3.7 முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம்

முதியோர்களுக்கு எதிரான வன்முறைகளை களைவதில் சமூகம் பெரும் பங்கு வகித்து வருகிறது.

முதியோர்களின் இயலாமையை சமூகம் அவர்களை திறனற்றவர்களாகவும் தேவையற்றவர்களாகவும் கருதுவதால் அவர்களுக்கெதிரான குற்றங்கள் அதிகரித்து வருகிறது. எனவே, முதியோரை பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு உறுதுணையாக இருத்தல் போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றிய தீர்மானத்தின்படி ஆண்டுதோறும் சர்வதேச முதியோருக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினமாக ஜூன் 15 ஆம் நாள் தமிழ்நாடு அரசால் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில் பள்ளி / கல்லூரி மாணவர்கள் மற்றும் அரசு பணியாளர்கள் முதியோருக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி எடுக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.8. சர்வதேச முதியோர் தினவிழா

1990 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் 14ஆம் நாள் அன்று ஐக்கிய நாடுகளின் சபை, அக்டோபர் 1 ஆம் நாளை சர்வதேச முதியோர் தினமாக அறிவித்தது. முதியோர்கள் நலனுக்காக தங்களது திறன் மற்றும் சேவைகள் வழங்கியவர்களை கௌரவிக்க தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இத்தினத்தில் முதியோர்களின் நலனுக்காக சேவை புரிந்த சிறந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக சேவகர்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் கௌரவிக்கப்படுகின்றனர்.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.5.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.9 மூத்த குடிமக்களுக்கான செயல் திட்டம்.

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் 2007 மற்றும் மூத்த குடிமக்களுக்கான தேசிய கொள்கை, 2011

ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் 2019–2025 வரை உள்ள நிதியாண்டுகளுக்கான **"மூத்த குடிமக்களுக்கான செயல் திட்டம்"** உருவாக்கப்பட்டுள்ளது. மூத்த குடிமக்களின் கீழ்கண்ட 10 வகையான முன்னுரிமை தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இச்செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது:–

1. நிதி பாதுகாப்பு
2. சத்துணவு மற்றும் சுகாதாரம்
3. குடியிருப்பு வசதிகள்
4. மூத்த குடிமக்களின் உயிர் மற்றும் உடைமைக்கான பாதுகாப்பு
5. தலை முறைகளுக்கு இடையேயான பிணைப்புடன் கூடிய பயனுள்ள, ஆக்கப்பூர்வமான முதுமை
6. முதியோருக்கு உகந்த அணுகு தன்மையுடன் கூடிய போக்குவரத்து வசதிகள் மற்றும் சூழலை உருவாக்குதல்
7. மூத்த குடிமக்களுக்கான விழிப்புணர்வு மற்றும் திறன் வளர்ப்பு பணிகள்

8. சமூதாயத்தில் முதியோர் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் முதியோர் நேய உபகரணங்கள் மற்றும் சேவைகள்
9. ஆராய்ச்சி மற்றும் ஆய்வு
10. திட்ட மேலாண்மை

ஒன்றிய அரசானது மாநில செயல் திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்களுக்கு ரூ.1.18 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மூத்த குடிமக்களுக்கான தரவுத்தளத்தை உருவாக்குதல் | 25.00 |
| 2 | மூத்த குடிமக்களுக்கான கைபேசி செயலி உருவாக்குதல் | 15.00 |
| 3 | விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் திறன் மேம்பாடு | 48.00 |
| 4 | கொல்லி மலையில் நடமாடும் மருத்துவக் குழு | 30.00 |
| **மொத்தம்** | | **118.00** |

## 2.4 திருநங்கையர் நலன்

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படை உரிமைகளில் உள்ள சரத்துகள் 14, 15, 16, 19 மற்றும்

21 ஆனது நம் நாட்டின் அனைத்து குடிமக்களும் அவர்களின் இனம், ஜாதி, மதம், சமூகம், சமூக அந்தஸ்து மற்றும் பாலினம் உள்ளிட்டவைகளை கருத்தில் கொள்ளாமல் சம வாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்று எடுத்துரைக்கிறது. ஒவ்வொரு குடிமக்களுக்கும் அடிப்படை கோட்பாடுகளான தேர்வு செய்யும் உரிமை மற்றும் சுயநிர்ணய உரிமைகளுக்கு அங்கீகாரமளிக்கிறது. ஒரு நபர் எந்த பாலினத்தை சேர்ந்தவர் மற்றும் தொடர்புடையவர் என்பதை தீர்மானிப்பது சம்பந்தப்பட்ட நபரின் சுய நிர்ணய உரிமை மற்றும் கண்ணியத்திற்கு உள்ளார்ந்ததாகும்.

தமிழ்நாடு அரசால் மூன்றாம் பாலினத்தவரை "திருநங்கையர்" என மரியாதை நிமித்தமாக அழைத்திட வழி செய்ததுடன், இந்தியாவிலேயே முதன் முறையாக அவர்களுக்கென தனியாக நல வாரியம் 2008–ல் தோற்றுவிக்கப்பட்டது. அதனால்

திருநங்கையருக்கு சமூகத்தில் உரிய அங்கீகாரம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திருநங்கையர் நலவாரியம் அவர்கள் பின்வருவனவற்றை பெறுவதற்கு உதவுகிறது: –

- அடையாள அட்டை
- குடும்ப அட்டை
- வீட்டு மனை பட்டா
- குடியிருப்பு வீடுகள்
- தையல் இயந்திரம்
- உயர் கல்வி உதவித்தொகை
- சுய உதவி குழுக்கள் உருவாக்குதல் திருநங்கையர் வாழ்வாதாரத்தினை உயர்த்திடும் வகையில் தொழில் செய்திட மானியத் தொகை ரூ.20,000/– முதல் ரூ.50,000/– வரை வழங்கப்பட்டு வருகிறது.

ஆதரவின்றி, 40 வயதிற்கு மேற்பட்ட வாழ்வாதாரத்தை ஈட்ட இயலாத திருநங்கையருக்கு உதவிடும் வகையில் மாத ஓய்வூதியமாக ரூ.1000/– வழங்கப்பட்டு, 1000 திருநங்கையர் ஆண்டு தோறும் பயன்பெற்று வருகின்றனர்.

திருநங்கையர் நலனில் என்றும் தனி அக்கறை செலுத்திடும் தமிழ்நாடு அரசு, கோவிட் நோய்த்தொற்று காலத்தில் அவர்களுக்கு உதவிடும் வகையில் குடும்ப அட்டை இல்லாவிடினும், திருநங்கையர் நல வாரியத்தின் மூலம் அடையாள அட்டை பெற்றுள்ள 8493 திருநங்கையருக்கு ரூ.4,000/- இரு தவணைகளில் வழங்கிட அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தி உள்ளது.

மேலும், திருநங்கையரும் மகளிருக்கு அளிக்கப்பட்ட சமவாய்ப்பை பயன்படுத்திடவும் பாதுகாப்பான பயணம் மேற்கொள்வதற்கு ஏதுவாக பேருந்துகளில் இலவச பயண சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது..

திருநங்கையர்கள் தங்களுடைய தனித் திறமையால் பல்வேறு துறைகளில் முன்னேறியவர்கள் மற்றும் திருநங்கையர் நலனுக்காக சிறப்பாக பணியாற்றிய திருநங்கையர்களை ஊக்குவிக்கும் விதமாக ஒருவருக்கு, திருநங்கையர் தினமான ஏப்ரல்

பதினைந்தாம் நாளன்று மாநில அளவிலான "மூன்றாம் பாலினருக்கான விருது" ரூ.1,00,000/–க்கான காசோலை மற்றும் சான்றிதழ் 2020–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. திருநங்கையர் தங்களது சுய விவரங்களை பதிவு செய்வதற்கு ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீட்டில் "மூன்றாம் பால்" என்ற கைபேசி செயலி உருவாக்கப்பட்டு 04.02.2021 முதல் செயல்பாட்டில் உள்ளது.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.5.92 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.5 தமிழ்நாடு மகளிர் ஆணையம்

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான மனுக்களை விசாரிக்கவும், பெண்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்திடவும் சட்டரீதியான அமைப்பான (Statutory Body) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விசாரணை செய்து உடனடியாக தீர்வு காண

இவ்வாணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாணையம் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை ஆராய்ந்து உரிய தீர்வுகளை அரசுக்கு பரிந்துரைக்கிறது. மேலும் பெண்கள் தொடர்பான சமூக நீதி சட்டங்களான வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம் 2007, பணிபுரியும் இடங்களில் ஏற்படும் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013 ஆகிய சட்டங்களை முறையாக செயல்படுத்தப்படுவதை இவ்வாணையம் உறுதி செய்கிறது.

மேலும், தேசிய மகளிர் ஆணையத்தின் உதவியோடு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மாவட்டந்தோறும் பெண்களுக்கான சட்டவிழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருகிறது. நடைப்பயணம், பேரணி

போன்ற பல்வேறு சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநில மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுகின்றன.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.73.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.6 தமிழ் நாடு சமூக நல வாரியம்

தமிழ்நாட்டில் 1954–ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக செயல்படுகிறது. ஒன்றிய சமூக நல வாரியத்தின் திட்டங்களையும் மாநில அரசின் திட்டங்களையும் நன்முறையில் செயல்படுத்துவதை கண்காணிப்பதற்காகவும் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சமூக நல வாரியம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு உதவி செய்து

பெண்களுக்கு கல்வி, பயிற்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய சேவையினை செய்து வருகிறது.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.44.37 இலட்சம் மாநில அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.**

## 2.6.1 குடும்ப ஆலோசனை மையம் (மாநில அரசு நிதியுதவி)

தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலமாக 5 குடும்ப ஆலோசனை மையங்கள் சென்னை, திருவள்ளூர், விழுப்புரம், திருவாரூர், மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாடு அரசு சென்னையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் குடும்ப ஆலோசகர்களாக பணி புரியும் ஆலோசகர்களுக்கு ஒன்றிய அரசின் மதிப்பூதியம் ரூ.10,000/- உடன், கூடுதல் மதிப்பூதியமாக ரூ,3,500/- மாநில அரசு வழங்குகிறது. 2021-2022 ஆண்டுக்கு ஆலோசனை மைய செலவினத்திற்கு முதல் தவணையாக

ரூ.20.00 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.10.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.6.2 குடும்ப ஆலோசனை மையம் (ஒன்றிய அரசு மானியம்)

1984–ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் தமிழ் நாட்டில் குடும்ப ஆலோசனை மையம் தமிழ்நாடு சமூக நல வாரியம் மூலமாக துவங்கப்பட்டது.

தற்போது தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 56 மையங்களில் 2 மையங்கள் சென்னை(புழல்) மற்றும் வேலூரில் உள்ள மத்திய பெண்கள் சிறைச்சாலையில் செயல்பட்டு வருகிறது. மூன்று மையங்கள் முறையே காவல் துறை ஆணையரகம், ஆயிரம் விளக்கு மற்றும் பூக்கடையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள 51 மையங்கள் 2018–19–ஆம் ஆண்டு முதல் மாநில அரசு அலுவலகங்களான மாவட்ட ஆட்சியர் வளாகம்,

மாவட்ட சமூக நல அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு குடும்ப ஆலோசனை மையங்களில் 2 குடும்ப ஆலோசகர்கள் பணிபுரிகிறார்கள். ஒவ்வொரு குடும்ப ஆலோசகருக்கும் மாதம் தொகுப்பூதியமாக ரூ.10,000/- வழங்கப்படுகிறது. இதில் ரூ.9,000/- ஒன்றிய சமூக நல வாரியத்தின் மானியமாகவும் ரூ.1,000/- தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பாகவும் வழங்கப்படுகிறது.

தமிழ் நாடு சமூக நல வாரியத்தின் மூலம் 2020-21-ஆம் ஆண்டில் ரூ.182.40 இலட்சம் மானியமாக குடும்ப ஆலோசனை மையத்திற்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 66,424 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

## 2.7 மாநில விருதுகள்

### 2.7.1 அவ்வையார் விருது

அவ்வையார் விருது சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மத நல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிக சிறந்து விளங்கும் ஒரு மகளிருக்கு சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8–ஆம் தேதி ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதாளர் 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், ரூ.1.00 இலட்சம் காசோலை, பொன்னாடை மற்றும் சான்று ஆகியவை வழங்கி கௌரவப்படுத்தப்படுகிறார்.

### 2.7.2 பெண்களுக்காக சிறந்த சேவை புரிந்த நிறுவன விருது மற்றும் சிறந்த சமூக சேவகர் விருது

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று பெண்களுக்காக சிறப்பாக பணியாற்றிய சிறந்த சமூக சேவகர் மற்றும் பெண்களுக்காக சிறப்பாக தொண்டாற்றிய சிறந்த நிறுவனத்திற்கு சுதந்திர

தினத்தன்று விருதுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த சமூக சேவகருக்கு 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், மற்றும் சான்று ஆகியவை வழங்கப்படுகின்றன. சிறந்த நிறுவனத்திற்கு ரூ.50,000/- ரொக்கப் பரிசுடன், 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கமும் வழங்கப்படுகிறது.

*****

**அத்தியாயம் – 3**

# புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

## 3.1 மதிய உணவுத் திட்டம்

மதிய உணவுத் திட்டம் என்பது அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படும் முதன்மைத் திட்டமாகும். இத்திட்டம் பள்ளி செல்லும் குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகளை நிறைவு செய்கிறது. இத்திட்டம் மாணவர்கள் வகுப்பறையில் பசியுடன் இருப்பதை போக்குவது மட்டுமல்லாமல் இந்தியாவின் எதிர்கால குடிமகனாக இருக்கும் குழந்தைகளை ஊட்டச்சத்துடன் உருவாக்குவதன் மூலம் தேசத்தை மேம்படுத்துவதற்கான ஒரு சிறந்த திட்டமாகும்.

பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இந்தியாவில் மதிய உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தியதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகும். தமிழ்நாட்டின்

முன்னாள் முதலமைச்சர் திரு.கே.காமராஜ் அவர்களால் சென்னையில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் தமிழகத்தின் அனைத்துமாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 1982–இல் சத்துணவு திட்டம் தொடங்கப்பட்டது. 1989–லிருந்து முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களால் சத்துணவு திட்டத்தில் முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

## 3.2 இத்திட்டத்தின் சீரிய நோக்கங்கள்

- குழந்தைகள் பள்ளிக்கு செல்லாமல் இடையில் நின்று விடுவதை குறைப்பதன் மூலம் பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தலை உறுதி செய்தல்.
- மாணவர்கள் வகுப்பறையில் பசியுடன் இருப்பதை ஒழித்தல்.
- கல்வியறிவு விகிதத்தை அதிகரித்தல் மற்றும் குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குதல்.

## 3.3 திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

i. 5–9 வயதுடைய தொடக்கப்பள்ளி குழந்தைகள் மற்றும் 10–15 வயதுடைய உயர் தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு சுவையான சூடான சமைத்த கலவை சாதம் மற்றும் மசாலா முட்டைகள் வருடத்தில் 220 வேலை நாட்களில் வழங்கப்படுகிறது.

ii. 15 மாவட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு மையங்களில் உள்ள குழந்தைகளுக்கு வருடத்தில் 312 நாட்கள் சுவையான சூடான சமைத்த கலவை சாதம் மற்றும் மசாலா முட்டைகளும் வழங்கப்படுகிறது.

iii. உணவு உரிமை விதிமுறைகள் – தொடக்கப்பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு (1 முதல் 5ம் வகுப்பு வரை) நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு 100 கிராம் அரிசி மற்றும் உயர் தொடக்க பள்ளிகளில் பயிலும் குழந்தைக்கு (6 – 10ம் வகுப்பு வரை) ஒரு குழந்தைக்கு 150கிராம் அளவு அரிசி என்ற கணக்கீட்டின் படி நாளொன்றுக்கு வழங்கப்படுகிறது.

## 3.4 பரிணாம வளர்ச்சி

| வருடம் | சத்துணவுத் திட்டத்தின் வளர்ச்சி |
|---|---|
| 1962 | தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மதிய உணவு திட்டம் தொடங்கப்பட்டது. |
| 1982 | 5+ முதல் 9+ வயது வரை பள்ளி செல்லும் ஏழை குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. |
| 1984 | 6–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. |
| 1989 | பள்ளி செல்லும் அனைத்து குழந்தைகளுக்கும் இரு வாரங்களுக்கு ஒரு முறை முட்டை வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. |
| 1997 | சத்துணவுத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளுக்கு முக்கிய பிரமுகர்களின் பிறந்தநாள் அன்று இனிப்பு பொங்கல் வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. |
| 1998 | 2 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. |
| 2006 | 2 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் இரு முறை முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2007 | 2 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் மூன்று முறை முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2010 | 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் (வாரத்தில் ஐந்து நாட்கள்) முட்டை வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. |
| 2014 | பயனாளிகளுக்கு பல வகை கலவை சாதம் மசாலா முட்டையுடன் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. |

## 3.5. பள்ளிகளில் உள்ள சத்துணவு மையங்கள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை

| வ. எண் | நிலை | சத்துணவு மையங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தொடக்கப்பள்ளி (1 முதல் 5ம் வகுப்பு வரை) | 26,872 | 21,30,216 |
| 2 | உயர் தொடக்கப்பள்ளி (6 முதல் 8ம் வகுப்பு வரை) | 16,116 | 14,34,549 |
| 3 | 9 மற்றும் 10ஆம் வகுப்பு | | 6,44,842 |
| 4 | தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகள் | 186 | 4,010 |
| **மொத்தம்** | | **43,174** | **42,13,617** |

## 3.6 சத்துணவு திட்டத்தில் வழங்கப்படும் உணவு வகைகள்

### <u>கலவை சாதம்</u>

ஒரு சிறப்பு ஊட்டச்சத்து அறிமுகமாக கலவை சாதத்துடன் 5 வகையான முட்டை மசாலா தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

| நாட்கள் | முதல் மற்றும் மூன்றாம் வாரம் | | இரண்டாவது மற்றும் நான்காவது வாரம் | |
|---|---|---|---|---|
| திங்கட் கிழமை |  | வெஜிடபிள் பிரியாணி + மிளகு முட்டை |  | சாம்பார் சாதம் + (பிஸிபேளாபாத்) வெங்காயம் தக்காளி மசாலா முட்டை |
| செவ்வாய் கிழமை |  | கறுப்பு கொண்டைக் கடலை புலாவு + தக்காளி மசாலா முட்டை |  | மீல்மேக்கர் மற்றும் காய்கறி கலந்த வெஜிடபிள் சாதம் + மிளகு முட்டை |
| புதன் கிழமை |  | தக்காளி சாதம் + மிளகு முட்டை |  | புளி சாதம் + தக்காளி மசாலா முட்டை |
| வியாழக் கிழமை |  | சாதம், சாம்பார்+ வேகவைத்த முட்டை |  | எலுமிச்சை சாதம் + பாசிப் பயறு சுண்டல் + தக்காளி முட்டை |
| வெள்ளிக் கிழமை |  | கருவேப்பிலை / கீரை சாதம், மசாலா முட்டை+ மிளகாய்பொடி தூவி வறுத்த உருளைக்கிழங்கு |  | சாதம் + காய்கறியுடன் சாம்பார், வேக வைத்த முட்டை மற்றும் வறுத்த உருளைக்கிழங்கு |

## கூடுதல் ஊட்டச்சத்து வழங்குதல்

| வழங்கப்படும் உணவு | | அளவு |
|---|---|---|
| <br> | கறுப்பு கொண்டைக் கடலை / பச்சைப்பயறு | 20 கிராம் (வாரம் ஒரு முறை) |
|  | உருளைக்கிழங்கு | 20 கிராம் (வாரம் ஒரு முறை) |
|  | முட்டை | அக்மார்க் 'A' தரத்திலான 46 முதல் 52 கிராம் எடை (அனைத்து பள்ளி வேலை நாட்களிலும்) |
|  | வாழைப்பழம் | 100 கிராம் (முட்டை உண்ணாத பயனாளிகளுக்கு) |

**இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு**

இருமுறை செறிவூட்டப்பட்ட அயோடின் மற்றும் இரும்பு சத்துக்களுடன் கூடிய உப்பு சமையலுக்கு பயன்படுத்தப்படுகிறது.

**சத்துணவில் செறிவூட்டப்பட்ட எண்ணெய்**

இருமுறை செறிவூட்டப்பட்ட வைட்டமின் 'ஏ' மற்றும் 'டி' சத்துகள் அடங்கிய எண்ணெய் தினமும் சத்துணவில் பயன்படுத்தப்படுகிறது.

**மதிய உணவு திட்டத்தின் கீழ் ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்கு தேவையான ஊட்டச்சத்து கணக்கீட்டு அளவு முறைகள்**

| வ. எண் | வகுப்பு | ஒன்றிய அரசு நெறி முறைகள் | | மாநில அரசால் வழங்கப்படுவது | |
|---|---|---|---|---|---|
| | | கலோரி (கிலோ கலோரிகள்) | புரதம் (கிராம்) | கலோரி (கிலோ கலோரிகள்) | புரதம் (கிராம்) |
| 1. | தொடக்கப் பள்ளி (1 முதல் 5ஆம் வகுப்பு வரை ) | 450 | 12 | 557.00 | 18.92 |
| 2. | உயர் தொடக்கப் பள்ளி (6 முதல் 8ஆம் வகுப்பு வரை) | 700 | 20 | 735.00 | 22.77 |
| 3. | 9, 10ஆம் வகுப்பு | --- | --- | 735.00 | 22.77 |

### 3.7 தேசிய மதிய உணவுத் திட்டம்

தொடக்கக் கல்வி பெறும் குழந்தைகளுக்கான தேசிய ஊட்டச்சத்து திட்டம் 15.08.1995–இல் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டு 1997–1998–இல் இருந்து செயல்படுத்தப்பட்டது, பின்னர் உயர் தொடக்கப் பள்ளிகளில் அக்டோபர் 2007–இல் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கான உணவூட்டுச் செலவினம் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கான மதிப்பூதியத்திற்கான செலவினம் ஒன்றிய /மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், அரிசி, அரிசிக்கான போக்குவரத்து செலவினம் மற்றும் மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செலவினத்திற்கு ஒன்றிய அரசால் 100% நிதி வழங்கப்படுகிறது.

## 3.8 உணவூட்டுச் செலவினம்

நாளொன்றுக்கு / ஒரு குழந்தைக்கு (ரூபாயில்)

| வகுப்பு | மதிய உணவு செலவினம் (60:40) | ஒன்றிய அரசு (60%) | மாநில அரசு (40%) | மாநில அரசின் கூடுதல் பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) | 4.97 | 2.98 | 1.99 | 2.65 | 7.62 |
| உயர் தொடக்கப் பள்ளி (6 முதல் 8 ஆம் வகுப்பு வரை) | 7.45 | 4.47 | 2.98 | 0.27 | 7.72 |
| 9, 10ஆம் வகுப்பு | 100 % மாநில அரசின் பங்களிப்பு | | | | 9.33 |

## 3.9 உணவு பொருட்கள் மேலாண்மை

சத்துணவு மையத்தின் தேவைக்கேற்ப தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் அரிசி, பருப்பு, செறிவூட்டப்பட்ட எண்ணெய், செறிவூட்டப்பட்ட உப்பு, கறுப்பு கொண்டைக்கடலை, பச்சைப்பயறு ஆகிய உணவுப்பொருட்கள் ஒவ்வொரு மையத்திலும் விநியோகிக்கப்படுகிறது. தேவையான காய்கறிகள் மற்றும் தாளிதப் பொருட்கள் வாங்குவதற்கு மூன்று மாதத்திற்கு ஒருமுறை முன்பணம்

அமைப்பாளர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் வாரம் இரண்டு முறை சத்துணவு மையங்களுக்கு 46 முதல் 52 கிராம் எடையிலான முட்டை விநியோகம் செய்யப்படுகிறது. முறைகேடுகளை தடுக்க, முட்டைகளின் மீது நிர்ணயிக்கப்பட்ட வண்ண முத்திரை இடப்படுகிறது.

## 3.10 சத்துணவு மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள்

சத்துணவை சமைப்பதற்கும், உணவு பொருட்களை பாதுகாப்பாக சேமிப்பதற்கும் வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் கட்டப்பட்டுள்ளன. சத்துணவு மையங்களை நவீனப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக சத்துணவு மையங்களில் எரிவாயு இணைப்புகளுடன் சமையல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## 3.11 சத்துணவு மையங்களை கண்காணிக்கும் முறை

- மூன்று அடுக்கு கண்காணிப்பு அமைப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. (மாநிலம்/மாவட்டம்/வட்டாரம்)
- சத்துணவு மையங்களில் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலின்படியும் நடைமுறை விதிமுறைகளின்படியும் உணவின் தரம் மற்றும் அளவு குறித்து சத்துணவு திட்ட கள அலுவலர்களால் கண்காணிக்கப்படுகிறது.
- சத்துணவு பரிமாறப்படுவதற்கு முன்பு உணவின் சுவை பள்ளிகளின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களால் சரி பார்க்கப்படுகிறது.
- சத்துணவு மையங்களுக்கு சர்வதேச தரச்சான்று (ISO) பெறுவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. இதுவரை 100 சத்துணவு மையங்களுக்கு சர்வதேச தர நிர்ணய அமைப்பின் கீழ் சான்றளிக்கப்பட்டுள்ளது.
- உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு சட்டத்தின் கீழ், அனைத்து சத்துணவு மையங்களையும் பதிவு செய்து ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்து வரும் ஒரே மாநிலமாக தமிழகம் விளங்குகிறது.
- சத்துணவு மையங்களுக்கான கணக்குகள் அந்தந்த கிராம பஞ்சாயத்துகளில் நடைபெறும் கூட்டங்களில் வைக்கப்படுகிறது.

### 3.12 குறை தீர்வு முறை

சத்துணவுத் திட்ட செயல்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திடும் வகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை இயக்ககத்தில் செயல்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணமில்லா தொலைபேசி எண் மற்றும் இணையவழி செயலி (மென்பொருள்) மூலமாக தொடர்பு கொண்டு பொது மக்கள் தங்களின் கருத்து மற்றும் புகார்களைத் தெரிவிக்கலாம்.

கட்டணமில்லா தொலைபேசி எண் : 1800–425–8971.
இணைய வழி மின்னஞ்சல் –
http:// www.middaymeal.tn.gov.in –online complaint

இவ்வழியாக பெறப்படும் கருத்து மற்றும் புகார்களை பதிவு செய்து, சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலமாக குறிப்பிட்ட பள்ளியினை ஆய்வு செய்து குறைகள் இருப்பின் அவற்றினை 30 நாட்களுக்குள்

நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 3.13 திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி

- சத்துணவு மையத்தில் பணிபுரியும் அமைப்பாளர்கள் உணவு பாதுகாப்பு தரப்படுத்தல் ஆணையத்தின் (Food Safety and Standards Authority of India) கீழ் பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுநர்களால் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது.
- முன்கள பணியாளர்கள் தங்களது பணிகளை திறம்பட செய்யும் பொருட்டு அவர்களது தகுதி மற்றும் திறனை மேம்படுத்துவதற்கு அனைத்து நிலைகளிலும் பயிற்சிகள் நடத்தப்பட்டன.
- கொரோனா வைரஸ் தொற்று காலத்தில் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்கு அனைத்து பணியாளர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 3.14 முன்கள பணியாளர்களுக்கான விருதுகள்

- ஒவ்வொரு மாவட்டத்திலும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு சமையல் போட்டி நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு ரூ.5000/–

ரொக்கப்பரிசும், சான்றிதழ்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்படுகிறது.

➢ நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி தேர்வு செய்யப்படும் மாவட்ட அளவிலான ஒரு சிறந்த சத்துணவு அமைப்பாளருக்கு ரூ5000/– ரொக்கப்பரிசும் சான்றிதழும் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படுகிறது.

## 3.15 பயனாளிகளின் உடல் நலபரிசோதனை

➢ மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பாக அனைத்து பள்ளிகளிலும் தொடர்ந்து சுகாதார முகாம்கள் நடத்தப்படுகின்றன.

➢ சுகாதார முகாமின் போது, பொது சுகாதார பரிசோதனையுடன் இரத்தசோகை, கண் மற்றும் பல் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

➢ இரும்புச் சத்து, போலிக் அமில மாத்திரைகள், குடற்புழு நீக்க மாத்திரைகள் ஆகியவையும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், குழந்தைகளுக்கு சுகாதார அட்டைகள் சுகாதார துறையுடன் இணைந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 3.16 சத்துணவுப் பணியாளர்கள்

- ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல்

உதவியாளர் என மூன்று பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

- 500 பயனாளிகளுக்கு மேல் உள்ள சத்துணவு மையங்களுக்கு கூடுதலாக ஒரு சமையலர் நியமனம் செய்யப்படுகின்றனர்.
- சத்துணவு பணியாளர்களின் நலனுக்காக சிறப்பு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்வதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

**ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் சிறப்பு காலமுறை ஊதிய விகிதம்**

| பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் (ரூ) |
|---|---|---|
| அமைப்பாளர் | 42,423 | 7,700 – 24,200 |
| சமையலர் | 42,852 | 4,100 – 12,500 |
| சமையல் உதவியாளர் | 42,855 | 3,000 – 9,000 |

சத்துணவுப் பணியாளர்களுக்கு அகவிலைப் படி, வீட்டு வாடகை படி, நகர ஈட்டுப் படி, மருத்துவப் படி, மலைவாழ் படி, குளிர்கால படி போன்ற படிகளுடன் ஆண்டு ஊதிய உயர்வும் வழங்கப்படுகிறது.

சத்துணவுப் அமைப்பாளர் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது, ஒட்டுமொத்த ஓய்வு தொகையாக ரூ.1,00,000/−மும், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ரூ50,000/−மும் வழங்கப்படுகிறது. சத்துணவுப் பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது சிறப்பு ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.2000/− வழங்கப்படுகிறது.

## 3.17 கொரோனா காலத்தில் செயல்பாடுகள்

கொரோனா தொற்றுக் காலத்தில் மார்ச் 2020 முதல் பள்ளிகள் மூடப்பட்டுள்ளது. சத்துணவு பயனாளிகளின் உடல்நலத்தை பேணிகாக்க, ஒன்றிய அரசின் அறிவுரையின்படி தமிழ் நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் மாணவ, மாணவியர்களுக்கு நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி உலர் உணவுப் பொருட்களை (அரிசி, பருப்பு மற்றும் முட்டை) வழங்கி வருகிறது.

### 3.18 சத்துணவு திட்டத்தில் புதுமைகள் (செறிவூட்டப்பட்ட அரிசி)

- தமிழ்நாடு அரசின் புதுமையான முன்முயற்சி திட்டத்தின் கீழ் 9 வகையிலான நுண்ணூட்ட சத்துக்களுடன் (வைட்டமின் A, வைட்டமின் B1, வைட்டமின் B2, வைட்டமின் B3, வைட்டமின் B6, வைட்டமின் B12, போலிக் அமிலம், இரும்பு மற்றும் துத்தநாகம்) கூடிய செறிவூட்டப்பட்ட அரிசி நவம்பர் 2019 முதல் முன்னோடித் திட்டமாக தருமபுரி, மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் நீலகிரி ஆகிய 5 மாவட்டங்களில் அனைத்து சத்துணவு மற்றும் அங்கன்வாடி பயனாளிளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.529.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேலும் ஒரு முன்னோடி திட்டமாக மூன்று நுண்ணூட்ட சத்துக்களுடன் கூடிய (இரும்பு சத்து, போலிக் அமிலம் மற்றும் உயிர்ச்சத்து B12) செறிவூட்டப்பட்ட அரிசி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 01.10.2020 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

### 3.19 பள்ளி காய்கறி தோட்டம் அமைத்தல்

- ஊட்டச்சத்து தோட்டம் அமைப்பதின் நோக்கம் சத்துணவில் புதிய காய்கறிகளை வழங்குவதன்

மூலம் குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை நீக்குவதாகும்

- இயற்கை மற்றும் தோட்டக்கலை ஆகியவற்றைப்பற்றிய அனுபவ அறிவினை வழங்குதல்
- காய்கறிகளில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துகள் மற்றும் துரித உணவின் தீங்கு மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து குழந்தைகளின் அறிவு திறனை உயர்த்துதல்.

## நிதி ஒதுக்கீடு

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.2,078.70 கோடி இத்திட்டத்திற்கென,நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

*****

## அத்தியாயம்–4

# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

## 4.1 முன்னுரை

குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், போதுமான ஊட்டச்சத்தினை வழங்கும் நோக்குடனும் அமைப்பு ரீதியான குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு நீண்ட நெடிய வரலாற்று பின்னணியினைப் பெற்றுள்ளது.

"***குழந்தைகளுக்கென செய்யப்படும் முதலீடு நாட்டின் எதிர்கால நலனுக்கான முதலீடு***" என்பதை உணர்ந்து, ஒன்றிய அரசின் உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு சுகாதாரம், ஊட்டச்சத்து, முன்பருவக் கல்வி மற்றும் சுகாதாரக் கல்வி அளிப்பதேயாகும்.

இந்தியாவில். 1975ம் வருடம் மகாத்மா காந்தியடிகளின் 106வது பிறந்த தினத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் முன்னேற்றத்திற்கு ஏற்ற வகையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் 33 திட்டங்களாக வடிவமைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் இத்திட்டம் திண்டுக்கல் மாவட்டத்தில் நிலக்கோட்டை (கிராமப்புறம்) சென்னை (நகர்ப்புறம்,) மற்றும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தளி (மலைப்புறம்) ஆகிய மூன்று இடங்களில் தொடங்கப்பட்டது, பின்னர், 2003–ஆம் ஆண்டு வரை 116 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களாக நீட்டிக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் முன்முயற்சியாக, தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் (TINP) I & II–இன் கீழ் 318 வட்டாரங்களில் இத்திட்டம் உலக வங்கி உதவியுடன் 1982 முதல் 2003 வரை

செயல்படுத்தப்பட்டு பின்னர் ஒருங்கிணைக்கப்பட்டு தமிழ்நாட்டில் அனைத்து வட்டாரங்களிலும் 434 திட்டங்களாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் என மறுபெயரிடப்பட்டது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆரம்ப நிலையிலேயே பாலின பாகுபாட்டை சீரமைத்து குழந்தைகள், வளரிளம் பெண்கள் ஆகியோரின் வளர்ச்சி, முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை மேம்படுத்தி சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும்.

## 4.2 தொலைநோக்குப் பார்வை

தாய், சேய் ஆகியோரது ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கும், உடல், மனம், அறிவு, உணர்வுசார்ந்த குழந்தையின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிபடுத்துவதற்கும், பாதுகாப்பு, பாலின கூர்உணர்திறன், குழந்தைநேய சூழல் கொண்ட தரமான சேவையினை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் வழங்குகிறது.

## 4.3 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் இந்தியா முழுமைக்குமான ஒரு திட்டமாகும். இத்திட்டம் பின்வரும் ஐந்து முக்கிய நோக்கங்களை கொண்டுள்ளது.

- 0 முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துதல்.
- குழந்தையின் சரியான உளவியல், உடல் மற்றும் சமூக வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தல்..
- இறப்பு, நோயுற்ற தன்மை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பள்ளி இடைநிற்றல் நிகழ்வுகளை குறைத்தல்.
- குழந்தை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக பல்வேறு துறைகளிடையே கொள்கை மற்றும் செயல்பாட்டின் பயனுள்ள ஒருங்கிணைப்பை அடைதல், மற்றும்
- சரியான ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வியின் மூலம் குழந்தையின் இயல்பான ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து தேவைகளைக் கவனிப்பதற்கான தாயின் திறனை மேம்படுத்துதல்.

## 4.4 இலக்குகள்

"***ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத தமிழ்நாடு***" என்ற நிலையை அடைவதையும், நிலையான வளர்ச்சி இலக்குகளில் கூறப்பட்டுள்ளபடி "*எவரும் விடுபடக்கூடாது*" என்ற கொள்கை கட்டமைக்கப்படுவதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 4.5 மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டக் குழுமத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்படும் நலப்பணிகள் :–

1. ஆரம்ப நிலை குழந்தைகள் கவனிப்பு, கல்வி மற்றும் வளர்ச்சி
   - துணை உணவு
   - முன்பருவக் கல்வி
2. ஊட்டச்சத்து ஆலோசனை மற்றும் கவனிப்பு
   - பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள்.
   - மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறையை சமுதாய அளவில் மேலாண்மை செய்தல்.

3. சுகாதார பணிகள்

- மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசி வழங்குதலை உறுதி செய்தல்.
- ·மருத்துவப் பரிந்துரை

4. சமுதாய பங்கேற்பு, விழிப்புணர்வு, ஆதரவு திரட்டுதல், தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள்.

## 4.6 அணுகுமுறைகள்

1. அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைய, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்திட பொருத்தமான, சாதகமான எண்ணங்களை மக்களிடையே ஊக்குவிக்க, பல்வேறு துறைகள் மற்றும் பங்குதாரர்களுடன் ஒருங்கிணைந்து திட்டத்தை செயல்படுத்துதல்.
2. செய்தி, அச்சு மற்றும் காணொலி போன்ற பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி மக்களிடையே சமீபத்திய தகவல்களை பரப்பிடுதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
3. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் திறன் மேம்பாடு மற்றும் நிகழ்நேர கண்காணிப்பினை உறுதிசெய்தல்.

## 4.7 ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டமானது, 2017 ஆம் ஆண்டில் ஒரு குடையின் கீழ் அதன் சேவைகள் அமையும் வகையில் கீழ்க்காணுமாறு ஒன்றிய அரசால் மறுசீரமைக்கப்பட்டுள்ளது:–

1. அங்கன்வாடி சேவைகள் திட்டம்.
2. பிரதம மந்திரி மகப்பேறு நிதி உதவித் திட்டம் (பிரதான் மந்திரி மாத்ரு வந்தன யோஜனா– 2018–2019ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது)
3. தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம்
4. குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்
5. தேசிய ஊட்டச்சத்து இயக்கம் (போஷன் அபியான்)
6. வளரிளம் பெண்களுக்கான திட்டம்

## 4.8 செயல்பாட்டு நிலை

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 54,439 அங்கன்வாடி மையங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் 49,499 முதன்மை மையங்கள் மற்றும் 4,940 குறு

மையங்களாகும். 385 கிராமப்புறத் திட்டங்கள், 47 நகர்ப்புறத் திட்டங்கள் மற்றும் 2 பழங்குடியின திட்டங்கள் வாயிலாக இம்மாநிலத்தில் இத்துறையின் சேவைகள் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களைச் சென்றடைகிறது.

கிராமப்புற, நகர்ப்புறத் திட்டங்களில் ஒரு அங்கன்வாடி மையம் செயல்பட முதன்மை அங்கன்வாடி மையம் எனில் 400 முதல் 800 மக்கள் தொகை எனவும், குறு அங்கன்வாடி மையம் எனில் 150 முதல் 400 மக்கள் தொகை எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது. பழங்குடியினப் பகுதி திட்டங்களில் முதன்மை அங்கன்வாடி மையத்திற்கு 300 முதல் 800 மக்கள் தொகை எனவும், குறு அங்கன்வாடி மையத்திற்கு 150 முதல் 300 மக்கள் தொகை எனவும் மாறுபடும்.

## 4.9 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீடு விவரம்

(ரூபாய் கோடியில்)

| மொத்த நிதி ஒதுக்கீடு | திட்ட மதிப்பீடு | ஒன்றிய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மாநில அரசின் தனிப்பட்ட பங்கு | மாநில அரசின் மொத்த பங்கு |
|---|---|---|---|---|---|
| 2536.69 | 1512.79 | 812.66 | 700.13 | 1023.90 | 1724.03 |

2021–2022 ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் செயல்பாட்டிற்கென ஒன்றிய அரசின் பங்கு 32% மற்றும் மாநில அரசின் பங்கு 68%. ஆகும்.

## 4.10 மொத்த பயனாளிகள் விவரம்

| வ. எண் | பயனாளிகளின் வகை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 6 மாதம் முதல் 1 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 4,47,080 |
| 2 | 6 மாதம் முதல் 1 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | |
| 3 | 1 முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 7,13,447 |
| 4 | 1 முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | |
| 5 | 2 முதல் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 7,68,185 |

| | | |
|---|---|---|
| 6 | 2 முதல் 3 வயதிற்குட்பட்ட (கடுமையான எடை குறைவுள்ள) | |
| 7 | 3 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 7,62,496 |
| 8 | 3 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | |
| | **மொத்தக் குழந்தைகள்** | **26,91,208** |
| 9 | கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 7,23,890 |
| 10 | வளரிளம் பெண்கள் (11 முதல் 14 வயதிற்குட்பட்ட பள்ளி செல்லா) | 237 |
| | **மொத்தம்** | **34,15,335** |

## 4.11 துணை உணவுத் திட்டம் (Supplementary Nutrition Programme)

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் துணை உணவுத் திட்டமானது, குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 11 முதல் 14 வயதிற்குட்பட்ட பள்ளி செல்லா வளரிளம் பெண்களின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்த வேண்டும் என்ற அரசின் நிலைபாட்டினை உறுதி செய்வதற்கான ஒரு மிகப்பெரிய சமூகப் பாதுகாப்பு நடவடிக்கையாகும்.

ஒரு குழந்தையின் வாழ்நாளில் முதல் ஆயிரம் நாட்கள், அதாவது கருவான நாள் முதல் குழந்தையின்

இரண்டாவது பிறந்தநாள் வரையிலான காலம் மிக முக்கியமானதாகும். இப்பருவத்தில், குழந்தைகள் அவர்களின் உடல் வளர்ச்சியின் மிக முக்கியமான கட்டத்தில் இருப்பதால், இக்காலகட்டத்தில் ஏற்படும் சரிவிகித ஊட்டச்சத்தின்மை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு, நீண்டகாலம் தொடரக்கூடிய சரிசெய்ய இயலாத மீளமுடியாத விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். இப்பருவத்தில் அளிக்கப்படும் சரியான ஊட்டச்சத்து, குழந்தையின் கற்றல் திறன்களின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், ஒட்டுமொத்த வளர்ச்சியினையும் உறுதி செய்கிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் துணை உணவுத் திட்டமானது, பயனாளிகளுக்கு சூடான சமைத்த உணவு வழங்குதல் மற்றும் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் உணவுப்பொருள் வழங்குதல் என்ற இருவகையிலான சேவைகள் மூலம், பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவு, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013, அட்டவணை 2ல்

பரிந்துரைக்கப்பட்ட ஊட்டச்சத்து மதிப்பிற்கேற்றவாறு திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013, அட்டவணை–2ல் வரையறுக்கப்பட்ட ஊட்டச்சத்து மற்றும் ஒன்றிய அரசால் அனுமதிக்கப்பட்டு உள்ள நிதி வரையறை குறித்த விவரம் கீழ்க்கண்டவாறு;

| பயனாளிகளின் வகை | தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013, அட்டவணை 2ல் வரையறுக்கப்பட்ட நாள் ஒன்றுக்கான ஊட்டச்சத்தின் அளவு | | ஒன்றிய அரசால் பயனாளி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்ட செலவினம் (ரூ.) |
|---|---|---|---|
| | புரதம் (கிராமில்) | சக்தி (கிலோ கலோரி) | |
| 6 மாதம் முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 12– 15 | 500 | 8.00 |
| 6 மாதம் முதல் 6 வயதிற்குட்பட்ட கடுமையான எடை குறைவுள்ள குழந்தைகள் | 20 – 25 | 800 | 12.00 |
| கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 18 – 20 | 600 | 9.50 |

## 4.12 இணை உணவு (சத்துமாவு)

குழந்தையின் ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்ய தாய்ப்பால் மட்டும் போதுமானதாக இல்லாதபோது தாய்ப்பாலுடன் பிற திட மற்றும் திரவ உணவுப் பொருட்கள் வழங்குதலே இணை உணவு வழங்குதல் என்னும் செயல்பாடாகும். உரிய நேரத்தில் குழந்தைகளுக்கு இணை உணவு வழங்கத் துவங்குவதை உறுதிசெய்யும் பொருட்டு, குழந்தைகளுக்கு 6 மாதம் முடிவடைந்தவுடன் சத்துமாவு வழங்கப்படுகிறது. மேலும் சரியான வளர்ச்சிக்கு உதவும் வகையில், குழந்தைகளின் 6 வயது நிறைவடையும் வரை அங்கன்வாடி மையத்தில் பதிவு செய்துள்ள குழந்தைகளுக்கு வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் இணை உணவாக சத்துமாவு வருடத்தில் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

கருவின் வளர்ச்சி, கர்ப்பிணியின் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையுடன் நேரடித் தொடர்புடையதாகும். எனவே, கர்ப்பிணியின்

ஆரோக்கியமான உடல்நலத்தை உறுதிப்படுத்த, அவர்கள் அங்கன்வாடியில் பதிவு செய்து கொண்டவுடன் நுண்ணூட்டச்சத்து செறிவூட்டப்பட்ட சத்துமாவு வழங்கப்படுகிறது. பிறந்த குழந்தையின் ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்காக 6 மாதம் முடிய தாய்ப்பால் மட்டுமே பரிந்துரைக்கப்படுவதால், இக்காலகட்டத்தில் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துமாவு வழங்கப்படுகிறது.

மேலும் 11 முதல் 14 வயதிற்குட்பட்ட பள்ளி செல்லா வளரிளம் பெண்களுக்கும் அவர்களது முக்கியமான வளர்ச்சிப் பருவத்திற்கு உதவும் வகையில் வருடத்திற்கு 300 நாட்களுக்கு சத்துமாவு வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும் இணை உணவின் (சத்துமாவு) கலவை பின்வருமாறு;

| வ. எண் | மூலப்பொருட்கள் | சதவீதம் |
|---|---|---|
| 1 | கோதுமை மாவு | 45.50 |
| 2 | வறுத்த கேழ்வரகு மாவு | 6.00 |
| 3 | செறிவூட்டப்பட்ட பாமாலின் எண்ணெய் | 5.00 |
| 4 | முளைகட்டிய கேழ்வரகு மாவு | 5.00 |
| 5 | கொழுப்பு நீக்கப்படாத சோயா மாவு | 10.50 |
| 6 | வெல்லம் | 27.00 |
| 7 | வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் கலவை | 1.00 |
| **மொத்தம்** | | **100** |

அங்கன்வாடி மையங்களில் வழங்கப்படும் சத்துமாவானது, 25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 2 தனியார் உற்பத்தியாளர்களிடமிருந்து 65:35 என்ற விகிதத்தில் கொள்முதல் செய்யப்படுகிறது. தற்போது 25 கூட்டுறவு சங்கங்களில் 1,350 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் கைம்பெண்கள், கணவரால் கைவிடப்பட்டவர், ஆதரவற்ற பெண்கள் ஆவார்கள். இச்சங்கங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட

உறுப்பினர்களைக் கொண்ட குழு மூலமாகவும், அரசால் நியமிக்கப்பட்ட நிர்வாக அலுவலர்களான தொழிற்கூட்டுறவு அலுவலர்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

## 4.13 அங்கன்வாடி மையங்களுக்கு வருகைபுரியும் 2 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சூடான சமைத்த பல்வகை உணவு வழங்குதல்

அங்கன்வாடி குழந்தைகளுக்கு சத்தான மதிய உணவு வழங்குவதில் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. ஒவ்வொரு குழந்தையின் சரியான உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு போதுமான ஊட்டச்சத்து தேவைப்படுகிறது. எனவே குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த, குழந்தைகளுக்கு சூடான சமைத்த உணவுடன், செவ்வாய்க்கிழமை கருப்பு கொண்டைகடலை / பச்சை பயிறும், வெள்ளிக்கிழமை உருளைக்கிழங்கும் மற்றும் திங்கள், புதன், வியாழக்கிழமைகளில் முட்டையும்

வழங்கப்படுகின்றன. குழந்தைகளின் செரிமானத் திறன் மற்றும் சிறப்புத் தன்மைகளை கருத்தில் கொண்டு சூடான சமைத்த உணவின் வகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் 2 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையத்திலேயே சூடான சமைத்த உணவு வழங்கப்படுகிறது.

**வாராந்திர உணவுப்பட்டியல்:**

| நாள் | உணவு வகைகள் |
|---|---|
| திங்கள் கிழமை | தக்காளி சாதம் + வேகவைத்தமுட்டை |
| செவ்வாய் கிழமை | கலவை சாதம் + வேக வைத்த கருப்புக் கொண்டைக் கடலை அல்லது வேக வைத்த பச்சைப்பயிறு |
| புதன் கிழமை | காய்கறிப்புலவு + வேகவைத்த முட்டை |
| வியாழக் கிழமை | எலுமிச்சை சாதம் + வேகவைத்த முட்டை |
| வெள்ளிக் கிழமை | பருப்பு சாதம் + வேக வைத்த உருளைக்கிழங்கு |
| சனிக் கிழமை | கலவை சாதம் |
| ஞாயிற்றுக் கிழமை | வீட்டிற்கு எடுத்துச்செல்லும் வகையில் உலர் உணவுப்பொருட்கள் (அரிசி மற்றும் பருப்பு) |

அங்கன்வாடி மையங்களுக்கு அரிசி, பருப்பு, கருப்புக் கொண்டைக்கடலை, பச்சைப்பயிறு மற்றும் செறிவூட்டப்பட்ட எண்ணெய் வழங்குவதற்கான பொறுப்பு நிறுவனம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகும். இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு, தமிழ்நாடு உப்புக் கழகத்தால் வழங்கப்படுகிறது. முட்டைகள் ஒப்பந்தப்புள்ளி கோருதல் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. மேற்கண்ட அனைத்து உணவுப் பொருட்களும் ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திற்கும் நேரடியாக விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும், சூடான சமைத்த உணவு தயாரிக்க தேவையான காய்கறிகள், தாளிதப் பொருட்கள் மற்றும் எரிபொருள் செலவினத்தை மேற்கொள்ள, பருப்பு பயன்படுத்தப்படும் 3 நாட்களுக்கு (செவ்வாய்கிழமை, வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை) குழந்தை ஒன்றுக்கு நாளொன்றிற்கு ரூ.1.52–ம், பருப்பு பயன்படுத்தாத

3 நாட்களுக்கு (திங்கட்கிழமை, புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை) ரூ.1.81–ம் வழங்கப்படுகிறது.

**வாரந்திர உணவு அட்டவணை (முட்டையுடன் சூடான சமைத்த உணவு மற்றும் இணை உணவு (சத்துமாவு)**

<table>
<tr><th>வ எண்</th><th>பயனாளிகளின் வகை</th><th>திங்கள்</th><th>செவ்வாய்</th><th>புதன்</th><th>வியாழன்</th><th>வெள்ளி</th><th>சனி</th><th>ஞாயிறு</th></tr>
<tr><td>1</td><td>6 மாதம் முதல் 1 வயதிற்குட்பட்ட குழந்தைகள்</td><td colspan="6">சத்துமாவு</td><td rowspan="2">இல்லை</td></tr>
<tr><td>2</td><td>1 முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகள்</td><td colspan="6">சத்துமாவு மற்றும் புதன் கிழமையன்று 1 முட்டை</td></tr>
<tr><td>3</td><td>2 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள்</td><td>சத்துமாவு, தக்காளி சாதம் மற்றும் வேக வைத்த முட்டை</td><td>சத்துமாவு, கலவை சாதம் மற்றும் வேக வைத்த கருப்புக் கொண்டைக் கடலை அல்லது பச்சைப் பயறு</td><td>சத்துமாவு, காய்கறி புலவு மற்றும் வேக வைத்த முட்டை</td><td>சத்துமாவு எலுமிச்சை சாதம் மற்றும் வேக வைத்த முட்டை</td><td>சத்துமாவு, பருப்பு சாதம் மற்றும் வேக வைத்த உருளைக் கிழங்கு</td><td>சத்து மாவு, மற்றும் கலவை சாதம்</td><td>உலர் உணவுப் பொருட்கள் (அரிசி மற்றும் பருப்பு)</td></tr>
<tr><td>4</td><td>கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 11 முதல் 14 வயது வரையிலான பள்ளி செல்லா வளரிளம் பெண்கள்</td><td colspan="6">சத்துமாவு</td><td>இல்லை</td></tr>
</table>

**பயனாளிகளுக்கு தினசரி வழங்கப்படும் (சத்துமாவு + சூடான சமைத்த உணவில் உள்ள அரிசி மற்றும் முட்டை) ஊட்டச்சத்தின் அளவு விவரம் :**

| வ எண் | பயனாளிகளின் வகை | நாள் ஒன்றிற்கு சத்துமாவு + மதிய உணவில் உள்ள அரிசி மற்றும் முட்டை (வாரத்திற்கு) (கிராமில்) | துணை உணவின் (சத்துமாவு + சமைத்த உணவு + முட்டை) மூலம் வழங்கப்படும் ஊட்டச்சத்தின் அளவு ( நாள் ஒன்றுக்கு) | |
|---|---|---|---|---|
| | | | புரதச் சத்து (கிராமில்) | ஆற்றல் (கலோரிச் சத்து) (கிலோ கலோரியில்) |
| 1 | 6 மாதம் முதல் 1 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 125 | 13.75 | 500 |
| 2 | 6 மாதம் முதல் 1 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | 200 | 22.00 | 800 |
| 3 | 1 முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 125+ வாரத்தில் ஒரு முட்டை | 14.85 | 514.44 |
| 4 | 1 முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | 200+ வாரத்தில் ஒரு முட்டை | 23.10 | 814.44 |

தொடர்ச்சி.

| வ எண் | பயனாளிகளின் வகை | நாள் ஒன்றிற்கு சத்துமாவு + மதிய உணவில் உள்ள அரிசி மற்றும் முட்டை (வாரத்திற்கு) (கிராமில்) | துணை உணவின் (சத்துமாவு + சமைத்த உணவு + முட்டை) மூலம் வழங்கப்படும் ஊட்டச்சத்தின் அளவு ( நாள் ஒன்றுக்கு) | |
|---|---|---|---|---|
| | | | புரதச் சத்து (கிராமில்) | ஆற்றல் (கலோரிச் சத்து) (கிலோ கலோரியில்) |
| 5 | 2 முதல் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 100+80+ வாரத்தில் 3 முட்டைகள் | 24.27 | 868.79 |
| 6 | 2 முதல் 3 வயதிற்குட்பட்ட (கடுமையான எடை குறைவுள்ள) | 165+80+ வாரத்தில் 3 முட்டைகள் | 31.42 | 1128.79 |
| 7 | 3 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 10+80+ வாரத்தில் 3 முட்டைகள் | 14.37 | 508.79 |
| 8 | 3 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | 100+80+ வாரத்தில் 3 முட்டைகள் | 24.27 | 868.79 |
| 9 | கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் | 165 | 18.15 | 660 |
| 10 | வளரிளம் பெண்கள் (11 முதல் 14 வயதிற்குட்பட்ட பள்ளி செல்லா) | 165 | 18.15 | 660 |

**பயனாளிகளுக்கு தினசரி வழங்கப்படும் இணை உணவிற்கான (சத்துமாவு + சூடான சமைத்த மதிய உணவு + முட்டை) சராசரி செலவின விவரம்:**

| வ எண் | பயனாளிகளின் வகை | பயனாளி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ஒன்றிய அரசால் அனுமதிக்கப் பட்ட செலவினம் | பயனாளி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு மேற்கொள்ளப்படும் செலவினம் | ஒன்றிய அரசின் பங்கு (ரூ.) | மாநில அரசின் பங்கு (ரூ.) | மாநில அரசின் கூடுதல் பங்கு (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 6 மாதம் முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 8.00 | 7.86 | 3.93 | 3.93 | இல்லை |
| 2. | 6 மாதம் முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | 12.00 | 12.58 | 6.00 | 6.00 | 0.58 |
| 3. | 2 வயது முதல் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 8.00 | 10.96 | 4.00 | 4.00 | 2.96 |
| 4. | 2 வயது முதல் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | 12.00 | 15.05 | 6.00 | 6.00 | 3.05 |
| 5. | 3 வயது முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 8.00 | 5.30 | 2.65 | 2.65 | இல்லை |
| 6. | 3 வயது முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | 12.00 | 10.96 | 5.48 | 5.48 | இல்லை |
| 7. | கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மார்கள், 11 முதல் 14 வயது வரையிலான பள்ளி செல்லா வளரிளம்பெண்கள் | 9.50 | 10.38 | 4.75 | 4.75 | 0.88 |

## 4.14 கோவிட் 19 பெருந்தொற்று காலத்தில் உலர் உணவு வழங்குதல்

கோவிட் 19 காரணமாக அங்கன்வாடி மையங்கள் மூடப்பட்டிருப்பதால், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலையை பராமரிப்பது மட்டுமல்லாமல், பின்னடைவை சந்திக்காமல் இருப்பதையும் உறுதி செய்வதற்காக இணை உணவு (சத்து மாவு), அரிசி, பருப்பு மற்றும் முட்டை ஆகியவை பயனாளிகளின் வீடுகளுக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை நேரடியாக வழங்கப்படுகிறது. 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், 11 முதல் 14 வயது பள்ளி செல்லா வளரிளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலுட்டும் தாய்மார்களுக்கு இணை உணவு (சத்துமாவு) வழங்கப்படுகிறது. 2 வயது முதல் 6 வயது குழந்தைகளுக்கு சூடான சமைத்த மதிய உணவுக்கு பதிலாக அரிசி, பருப்பு மற்றும் வாரத்திற்கு 3 முட்டை ஆகியன உலர் உணவுப் பொருட்களாக வழங்கப்படுகின்றன.

## 4.15 செறிவூட்டப்பட்ட உணவுப்பொருட்களின் பயன்பாடு

உடல் திசுக்களின் வளர்ச்சி மற்றும் வளர்சிதை மாற்றத்தை தூண்டுவதற்கு தேவையான அத்தியாவசிய நுண்ணூட்டச்சத்துக்கள், வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் ஆகும். இரும்பு, அயோடின் மற்றும் வைட்டமின் ஏ ஆகிய நுண்ணூட்டச்சத்து குறைபாடுகள் அதிக அளவில் காணப்படுகின்றன.

குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களிடையே உள்ள நுண்ணூட்டச்சத்து குறைபாட்டினை களைவதற்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் துணை உணவுத் திட்டத்தில் (Supplementary Nutrition) கீழ்க்காணும் செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1. 1991 ஆம் ஆண்டிலிருந்து சத்துணவு தயாரிப்பதற்கு அயோடின் செறிவூட்டப்பட்ட உப்பு பயன்படுத்தப்பட்டது. தற்போது இரும்பு

மற்றும் அயோடினுடன் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு பயன்படுத்தப்படுகிறது.

2. சத்துணவு சமைப்பதற்கு, வைட்டமின் ஏ மற்றும் வைட்டமின் டி செறிவூட்டப்பட்ட பாமாயில் எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது.
3. செறிவூட்டப்பட்ட வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் அடங்கிய இணை உணவு (சத்துமாவு) குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு வழங்கப்படுகிறது.
4. நுண்ணூட்டச்சத்து குறைபாட்டினை நிவர்த்தி செய்யும்பொருட்டு சத்துணவு திட்டத்தின் கீழ் மாநில அரசால் ஒரு முன்னோடித் திட்டமாக தருமபுரி, மதுரை, தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் நீலகிரி ஆகிய 5 மாவட்டங்களில், 9 வகையான சத்துக்களால் (வைட்டமின் ஏ, பி1, பி2, பி3, பி6, பி12, போலிக் அமிலம், இரும்புச்சத்து மற்றும் துத்தநாகம்) செறிவூட்டப்பட்ட அரிசியினை பயன்படுத்தி நவம்பர் 2019 முதல் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.
5. இரும்புச்சத்து, வைட்டமின் பி12 மற்றும் போலிக் அமிலம் ஆகிய மூன்று ஊட்டச்சத்துகளால் செறிவூட்டப்பட்ட அரிசி பயன்படுத்தி சத்துணவு தயாரிக்கும் திட்டம் ஒன்றிய அரசால் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 4.16 இரத்த சோகை குறைபாடுள்ள கர்ப்பிணி பெண்களுக்கு இருமுறை செறிவூட்டப்பட்ட (இரும்பு மற்றும் அயோடின்) உப்பு வழங்குதல்.

கர்ப்பிணி பெண்களிடையே காணப்படும் இரத்த சோகையினை குறைக்கும் பொருட்டு இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு வழங்கும் திட்டம் சேலம், வேலூர், மற்றும் விழுப்புரம் ஆகிய 3 மாவட்டங்களில் ஆகஸ்ட்–2020 முதல் ஜூலை 2021 முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டது, ஒவ்வொரு பயனாளிக்கும் ஒரு மாதத்திற்கு 1 கிலோ வீதம் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு (இரும்பு மற்றும் அயோடின் செறிவூட்டப்பட்டது) வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் ரூ.9.40 இலட்சம் செலவினத்தில், இரத்த சோகையினால் பாதிக்கப்பட்ட 10,120 கர்ப்பிணி பெண்கள் பயன்பெற்றனர். மேற்காணும் 3 மாவட்டங்களிலிருந்து பெறப்படும் கள ஆய்வு அறிக்கையின் அடிப்படையில், திட்ட விரிவாக்கம் குறித்து அரசால் முடிவு செய்யப்படும்.

## 4.17 உடல் நலம் குன்றிய, ஆதரவற்ற முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு சத்து மாவு வழங்குதல்

முதியோர் ஓய்வூதியம் பெறும் ஆதரவற்ற மற்றும் உடல் குன்றிய மூத்த குடிமக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக, ஒரு பயனாளிக்கு நாளொன்றுக்கு ரூ.6.30 செலவில் 100 கிராம் சத்து மாவு மாதத்திற்கு ஒரு முறை வீட்டிற்கு எடுத்து சென்று பயன்படுத்தும் வகையில் 9094 முதியோர்களுக்கு வழங்கப்பட்டது. இராமநாதபுரம், சேலம், வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஆகஸ்டு 2020 முதல் ஜூலை 2021 வரை ரூ.209.12 இலட்சம் செலவில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டது, மேற்காணும் 4 மாவட்டங்களிலிருந்து பெறப்படும் கள ஆய்வு அறிக்கையின் அடிப்படையில், திட்ட விரிவாக்கம் குறித்து அரசால் முடிவு செய்யப்படும்.

## 4.18 தேசிய ஊட்டச்சத்து குழுமம் (போஷான் அபியான் – முழுமையான ஊட்டச்சத்துக்கான பிரதமரின் செயல்பாட்டுக்கான திட்டம்)

6 வயதிற்குட்பட்ட குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை முன்னேற்றுவதற்கான குறிக்கோளுடன் தேசிய ஊட்டச்சத்து திட்டம் (POSHAN Abhiyaan) ஒன்றை ஒன்றிய அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்பு முறையே 80:20 என்ற விகிதாசார அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநில அளவில், மாநில திட்ட மேலாண்மை அலகும், மாவட்டம் மற்றும் வட்டார அளவில் உதவி அலகுகள் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டு தேசிய ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் திறம்பட செயல்பட கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.19 பொதுவான மென்பொருள் செயலி (ICDS–CAS)

குறித்த நேரத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்த மற்றும் திறன்பட கண்காணிக்க, பொதுவான மென்பொருள் செயலி மூலம் அங்கன்வாடி பணியாளர்கள் 11 பதிவேடுகளில் 10 பதிவேடுகள் கைதிறன் பேசி செயலி மூலம் எண் முறைப்படுத்தப்பட்டு (Digitalization) பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலை தொடர் கண்காணிப்பின் மூலமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து கள பணியாளர்களுக்கும் மேற்பார்வையின் தரத்தை மேம்படுத்த கைதிறன் பேசி (Smart Phone) மற்றும் சிறு மின்சேமிப்பு கருவி (Power Bank) வழங்கப்பட்டு செயலியின் செயல்பாடுகள் குறித்த பயிற்சிகள் அனைத்து அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. போஷான் அபியான் திட்டத்தின் ஒரு பகுதியாக, சிறந்த கண்காணிப்பு மற்றும் நிகழ்ச்சி மேலாண்மைக்கு

தேவையான தகவல்களை உருவாக்க மற்றும் பெற அனைத்து வசதிகளுடன் கூடிய மென்பொருள் செயலி வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

போஷான் அபியான் திட்டத்தின் கீழ் பயனாளிகளின் வளர்ச்சி முறையாக கண்காணிக்கப்பட்டு உறுதிசெய்யப்படுகிறது. வளர்ச்சிக் கண்காணிப்பு சாதனங்கள் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதாவது சிறு குழந்தைகளின் நீளத்தை அளவிடும் கருவி (Infantometer), குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்கள் உயரத்தை அளவிடும் கருவி (Stadiometer), தாய் மற்றும் குழந்தை எடை எடுக்கும் கருவி (Mother & Child Digital Weighing Scale) மற்றும் குழந்தைகளின் எடை கருவி (Infant Weighing Scale) ஆகியவை அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டு தகுதியான பயனாளிகளின் வளர்ச்சி கண்காணிக்கப்படுகிறது.

## 4.20 தேசிய ஊட்டச்சத்துக் குழுமத்தால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

மாநில அரசின் பாராட்டத்தக்க முயற்சிகள், ஊட்டச்சத்து திட்டத்திற்கு அளிக்கப்படும் கூடுதல் நிதி பங்களிப்பு மற்றும் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013–இன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டாய ஊட்டச்சத்து விதிமுறைகளை திறம்பட செயல்படுத்தியதால், போஷான் அபியான் திட்டத்தின் ஊட்டச்சத்து குறியீடுகள் கவனிக்கத்தக்க மற்றும் அளவிடக்கூடிய விளைவுகளைக் ஏற்படுத்தியுள்ளது. அவை பின்வருமாறு தெரிவிக்கப்படுகின்றது.

| குறியீடுகள் | போஷன் அபியான் குறிக்கோள்கள் | National Family Health Survey (NFHS)–4 (2016) | | ICDS – CAS (பிப்ரவரி – 2020) |
|---|---|---|---|---|
| | | தேசிய அளவில் (%) | மாநில அளவில் (%) | மாநில அளவில் (%) |
| குள்ளத் தன்மை | ஆண்டொன்றுக்கு 2% குறைத்தல் | 38.4 | 27.1 | 24.29 |
| மெலிவுத் தன்மை | ஆண்டொன்றுக்கு 2% குறைத்தல் | 21.0 | 19.7 | 6.63 |
| எடை குறைவு | ஆண்டொன்றுக்கு 2% குறைத்தல் | 35.7 | 23.8 | 8.13 |

| | | | | |
|---|---|---|---|---|
| இரத்த சோகை உடைய 6–59 மாதம் வரையிலான குழந்தைகள் | ஆண்டொன்றுக்கு 3% குறைத்தல் | 58.6 | 50.7 | – |
| இரத்த சோகை உடைய பெண்கள் | ஆண்டொன்றுக்கு 3% குறைத்தல் | 50.3 | 44.4 | 15.14 |

## 4.21 படிப்படியாக கற்கும் முறை (Incremental Learning Approach)

கள பணியாளர்களின் ஆலோசனை திறனை மேம்படுத்துவதற்கும், குழந்தையின் பொன்னான முதல் 1000 நாட்களின் முக்கியத்துவத்தை ஊக்குவிப்பதற்கும், படிப்படியாக கற்கும் முறை 21 தொகுதிகள் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது.

கீழ்நிலை பணியாளர்கள் வரை சென்றடையும் வகையில் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. நிலையினை சென்று சேரும் வகையில் பயிற்சிகளானது மாநில வளக் குழு, மாவட்ட வளக் குழு, வட்டார வளக் குழு மற்றும் தொகுதி அளவிளான வளக் குழு ஆகியவை ILA–வின் உள்ளடக்கத்தை மாநில அளவிலிருந்து

தொகுதி அளவிற்கு பரப்புவதற்கும் அனைத்து தரப்பு பயனாளிகளை சென்றடையவும் அமைக்கப்பட்டன.

## 4.22 சமுதாயம் சார்ந்த நிகழ்வுகள்

தகுதியான பயனாளிகளின் நலனுக்காக, பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிப்பெண்கள், குழந்தைகள் மற்றும் சமூகம், ஆகியோர்க்கு பல்வேறு சமுதாயம் சார்ந்த நிகழ்வுகள் அங்கன்வாடி மைய அளவில் மாதம் இரு முறை நடத்தப்படுகின்றன.

சமுதாயம் சார்ந்த நிகழ்வுகளின்போது முக்கிய தகவல்களான, கர்ப்பகால பராமரிப்பு மற்றும் பரிசோதனை, தாய் மற்றும் குழந்தை பாதுகாப்பு அட்டையின் பயன்பாடு, தாய்ப்பால் உடனடியாகவும், தாய்ப்பால் மட்டுமே புகட்டுவதின் அவசியத்தை எடுத்துரைத்தல், அரசு நிதிஉதவி சார்ந்த தகவல்களை வழங்குதல், இரும்பு சத்து மாத்திரைகள் மற்றும் சுண்ணாம்பு சத்து மாத்திரைகள், தடுப்பூசி, புதிதாக பிறந்த பலவீனமான குழந்தைகளின் பராமரிப்பு, ஆரோக்கியமான உணவு, குடற்புழு நீக்குதல், துணை

உணவு, எடை அதிகரிப்பு, அயோடின் உள்ள உப்பு, கை கழுவுதல் மற்றும் பிற பொது சுகாதார தொடர்பான அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. இவைகள் கீழ்கண்ட ஐந்து கருப் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1) கர்ப்பத்தின் 1வது மற்றும் 2வது மூன்று மாதங்களில் பெண்களை அழைத்தல்.
2) இணை உணவினை சரியான நேரத்தில் கொடுக்க துவங்குதல்.
3) தாய்சேய் பராமரிப்பில் கணவன்மார்கள் தங்களின் பங்கினைப்பற்றி அறிந்து கொள்ளுதல்.
4) அங்கன்வாடி மையத்தில் முன்பருவக் கல்விக்கு குழந்தைகளை தயார்படுத்துதல் மற்றும்
5) ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்கும் நோயைக் குறைப்பதற்கும் பொது சுகாதாரம் தொடர்பான செய்திகளை வழங்குதல்.

## 4.23 மக்கள் இயக்கம் (Jan Andolan)

'மக்கள் இயக்கம்' என்பது தேசிய ஊட்டச்சத்து குழுமத்தின் ஒரு அங்கமாகும். ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் ஒவ்வொரு வீட்டையும் சென்றடைவது இதன் குறிக்கோளாகும். இது

போஷான் (ஊட்டச்சத்து விழிப்புணர்வு) செய்தியுடன் உள்ளாட்சி அமைப்புகளின் பொது பிரதிநிதிகள், மாநில அரசு துறைகள், சமூக அமைப்புகள் மற்றும் பொது மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் பொது பங்களிப்பை உள்ளடக்கியது.

மக்கள் இயக்கம் கூறுகளின் கீழ் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்டங்களுக்கு தேவையான நிதி கொடுக்கப்பட்டுள்ளன.

- சமுதாய வளைகாப்பு
- தாய்ப்பால் வாரம்
- ஊட்டச்சத்து மாதக் கொண்டாட்டங்கள் (போஷன் மா – செப்டம்பர்), போஷான் பக்வாடா (மார்ச் மாதம் முதல் 15 நாட்கள்)).
- பாரம்பரிய உணவுப் பழக்கத்தை மேம்படுத்துதல்.
- கை கழுவும் நாள்.
- இரத்தசோகை விழிப்புணர்வு திட்டம்.
- மாநில அளவில், மாவட்ட அளவில், வட்டார அளவில் விழிப்புணர்வு கண்காட்சிகள்.
- அனைத்து மாவட்டங்களிலும் பாரம்பரிய உணவு திருவிழா (Traditional Food Festival).
- வளரிளம் பெண்களுக்கு உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து கல்வி.

தேசிய ஊட்டச்சத்து மாதம் (Rashtriya Poshan Maah) ஆண்டு தோறும் செப்டம்பர் மாதம் கொண்டாடப்படுகிறது. இந்தக் கொண்டாட்டத்தில் கீழ்கண்ட இரண்டு முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

1. மிக கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு (SAM) உள்ள குழந்தைகளை அடையாளம் காணுதல் மற்றும் கண்காணித்தல்.
2. ஊட்டச்சத்தினை மேம்படுத்துவதற்காக ஊட்டச்சத்து தோட்டங்களை அமைத்தல்.

## 4.24 போஷான் 2.0

ஊட்டச்சத்து விழிப்புணர்வு மற்றும் நிலையான ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான நல்ல உணவுப் பழக்கம் மூலம் நல்ல ஊட்டச்சத்து பெறுவதை ஊக்குவிக்கும் வகையில், பெண்கள், வளரிளம் பெண்கள்/ ஆண்கள் மற்றும் பிறப்பு முதல் 6 வயது வரையிலான குழந்தைகள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பசியை ஒழிக்கும் நோக்கத்துடன் ஒன்றிய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள்

மேம்பாட்டு அமைச்சகத்தால் போஷான் 2.0 தொடங்கப்பட்டுள்ளது. ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்பு முறையே 80:20 என்ற விகிதாசார அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தேசிய ஊட்டச்சத்து திட்டம் கீழ்கண்ட குறிக்கோள்களை (போஷான் 2.0) கொண்டதாகும்:**

| அடிப்படை புள்ளி விவரம் | | 2022 | 2025 | 2030 | வருடாந்திர குறைப்பு (2025 வரை) | வருடாந்திர குறைப்பு (2026 முதல் 2030 வரை) |
|---|---|---|---|---|---|---|
| 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் % (சதவீதம்): | | | | | | |
| குறைவான எடை | 35.70% (CNNS) புள்ளி விவரம் 2016–18) | 34% | 28% | 8% | 2% | 4% |
| குள்ளத் தன்மை | 38.40% (CNNS) புள்ளி விவரம் 2016–18) | 36% | 30% | 10% | 2% | 4% |
| நோஞ்சான் (மெலிவு தன்மை) | 21% (CNNS) புள்ளி விவரம் 2016–18) | 19% | 13% | 3% | 2% | 2% |
| கர்ப்பிணிப்பெண்கள் | | | | | | |
| இரத்த சோகை | 65% (இரத்த சோகை முக்த் பாரத் புள்ளிவிவரம்: 2016–18) | 62% | 53% | 23% | 3% | 6% |

### 4.25 போஷான் கண்காணிப்பு (POSHAN Tracker)

போஷான் கண்காணிப்பு என்னும் செயலி மூலம் அனைத்து அங்கன்வாடி பயனாளிகளையும் பதிவு செய்து அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டு கண்காணிக்க ஒன்றிய அரசால் ஜனவரி 2021 முதல் இச்செயலி புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுநாள் வரையில் 54,439 அங்கன்வாடி மையங்களும் பதிவு செய்யப்பட்டு அனைத்து அங்கன்வாடி பயனாளிகளின் விவரங்களும் (பிறந்தது முதல் 6 வயது வரை குழந்தைகள்–26,04,507, கர்ப்பிணிப் பெண்கள்–3,65,591, பாலூட்டும் தாய்மார்கள்–3,63,371, வளரிளம் பெண்கள்–280, மற்றும் வளரிளம் ஆண்கள்) பதிவேற்றம் செய்யப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

### 4.26 ஒருங்கிணைப்பு (Convergence)

பல்வேறு ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் தொடர்பான திட்டங்களை ஒன்றிணைப்பதை எளிதாக்குவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும்

மாநில/மாவட்ட/வட்டார அளவில் பல்வேறு துறைகளை ஒன்றினைத்து ஒருங்கிணைப்பு செயல் திட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. உணவு முறையை மேம்படுத்துவது, திட்ட செயல்பாடுகளை ஒருங்கிணைப்பது, இந்திய மருத்துவ முறைகளை பின்பற்றுவது (AYUSH), அங்கன்வாடி மைய உள்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவது போன்ற செயல்பாடுகளுக்காக, அனைத்து மட்டங்களிலும் உள்ள குழு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

### 4.27 அங்கன்வாடி மையங்களுக்கு மருந்து பெட்டி / சுகாதாரப் பேழைகள் வழங்குதல்

அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு ஏற்படும் சிறு உடல் உபாதைகளான காய்ச்சல், வயிற்றுப்போக்கு, தோல் தொற்று, மற்றும் காயத்திற்கு கட்டுபோடுதல் ஆகியவைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் அடங்கிய மருந்து பெட்டி அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்படுகிறது. அங்கன்வாடி பணியாளர்களுக்கு மருந்தை பாதுகாப்பாக வைத்தல்,

கையாளும் விதம், பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு உரிய வழிமுறைகளுடன் கூடிய பயிற்சி மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறையினால் அளிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு மேற்கொண்டு ஏதேனும் சிகிச்சைகள் தேவைப்பட்டால் அருகிலுள்ள அரசு மருத்துவமனை/ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

குழந்தைகளிடையே சுகாதாரமான பழக்க வழக்கங்களை ஊக்குவிப்பதற்காகவும், குழந்தைகளை அங்கன்வாடி மையங்களில் சுத்தமாகவும் மற்றும் நேர்த்தியாகவும் பராமரிப்பதற்காகவும், அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் நகவெட்டி, சீப்பு, சோப்புகள், மற்றும் கைத்துண்டுகள் அடங்கிய சுகாதாரப் பேழைகள் வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தினை செயல்படுத்திட 2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.7.79 கோடி நிதி ஒதுக்கிடு செய்யப்பப்பட்டுள்ளது.**

## 4.28 ஆரம்ப கால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்வி

ஆரம்ப கால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்வி என்பது குழந்தையின் உடல், அறிவு, மனம் மற்றும் சமூக தேவைகளின் முழுமையான வளர்ச்சியினை நோக்கமாக கொண்டுள்ளது. குழந்தை வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொள்வதற்கும், வளமாக வாழ்வதற்கும் வலிமையான அடித்தளமாக அமைகிறது.

குழந்தையின் முதல் ஆறு ஆண்டுகளில் தூண்டுதல் செயல்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த பருவத்தில் தான் குழந்தையின் வளர்ச்சி நிலைகளில் வேகமான முன்னேற்றம் ஏற்படும். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் திருத்தப்பட்ட 45 வது விதியின்படி ஒவ்வொரு மாநிலமும் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கண்டிப்பாக ஆரம்ப கால குழந்தை பருவ பராமரிப்பு மற்றும் கல்வி அளித்திடல் வேண்டும். நிலையான வளர்ச்சி இலக்கு எண். 4ன் படி (Sustainable Development Goal), அனைத்து பெண்

மற்றும் ஆண் குழந்தைகளுக்கு தரமான ஆரம்பகால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் முன் பருவக் கல்வி அளித்து அவர்களை தொடக்கக் கல்விக்கு தயார் செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது.

நமது மாநிலத்தில், தேசிய ஆரம்ப கால குழந்தை பருவ பராமரிப்பு மற்றும் கல்வி கொள்கை 2013–னை பின்பற்றி "ஆடிப்பாடி விளையாடு பாப்பா" எனும் குழந்தையின் வளர்ச்சி, வயது, சூழ்நிலைக்கேற்ற வருடாந்திர பாடத்திட்டம் அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பாடத்திட்டத்தில், 11 மாதங்களுக்கும் குழந்தைகளுக்கு விருப்பமான 11 வகையான கருத்துக்களை மையமாக கொண்டு செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. 12–ஆம் மாதத்தில் பாடத்திட்டத்தின் திருப்புதல் பயிற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

தமிழகத்தில் 43,880 அங்கன்வாடி பணியாளர்களுக்கு தொகுதி வாரியாக பரவலாக்கப்பட்ட

முறையில் மூன்று கட்டமாக ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**2021–2022 –ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.27.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 4.29 மெய்நிகர் கற்றல் முறை (Virtual Learning)

ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியில், மெய்நிகர் கற்றல் முறைகள் கொரோனா பெருந்தொற்று காலத்தில் கடந்த மார்ச் 2020 முதல் அங்கன்வாடி மையங்களில் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது. இம்முறை ஒரு புதுமையான தனித்தன்மையான வகையில் பெற்றோர் மற்றும் குழந்தைகளை பேணுவோர் மூலம் இல்லங்களில் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு உதவுகின்றது. அங்கன்வாடி பணியாளர்களால்

பெற்றோர்களுக்கான பகிரி குழுக்கள் (whatsapp group) உருவாக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு காலத்தில், பாடத்திட்ட செயல்பாடுகள் வீடியோ மற்றும் குரல் வழி செய்தியாக பெற்றோர் மற்றும் குழந்தைகளை பேணுவோருக்கு அளிக்கப்பட்டு பலதரப்பட்ட தூண்டுதல் செயல்களை குழந்தைகளுக்கு அளிக்கவும், வீடுகளில் கற்பிக்கவும் செய்யப்படுகின்றன.

நிதி ஆயோக் இதனை சிறந்த நடைமுறையாக தனது டிவிட்டரில் பதிவு செய்துள்ளது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத் துறை, ஆரம்பகால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியில், 2021–ஆம் ஆண்டிற்கான ஸ்காட்ச் தங்க விருதினை பெற்றுள்ளது.

## 4.30 அரசு நடுநிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்களில் மாண்டிசோரி கல்வி முறையை அடிப்படையாகக் கொண்ட எல்.கே.ஜி / யு.கே.ஜி வகுப்புகள்

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், பள்ளிக்கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து, மாண்டிசோரி கல்வி முறையை அடிப்படையாகக் கொண்ட எல்.கே.ஜி. / யு.கே.ஜி. வகுப்புகள் அரசு நடுநிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள 2381 அங்கன்வாடி மையங்களில் முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம், குழந்தைகளின் வருகையை அதிகரித்தல், குழந்தைகளிடையே ஆங்கில மொழியில் வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன்களை மேம்படுத்துதல், சிறந்த தொடக்கக் கல்விக்கு வழிநடத்துதல் மற்றும் பெற்றோர்களின் பொருளாதார சுமையை குறைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

பள்ளிக் கல்வித் துறை ஆசிரியர்கள் மூலம் கல்வி அளிக்கப்படுகின்றது.

இத்திட்டம் மூன்று வருட காலத்திற்கு முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் 4 இணை சீருடைகள், தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் சுற்றுப்புற அறிவியல் ஆகிய புத்தகங்கள் பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. மேலும், மையங்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

### 4.31 அங்கன்வாடிக்கு வருகை புரியும் முன் பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ண சீருடைகள் வழங்குதல்:

பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையத்திற்கு தவறாது அனுப்புவதை ஊக்குவிக்கவும் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும்

பொருட்டும், அங்கன்வாடி மையங்களுக்கு வருகைபுரியும் 2 வயது முதல் 6 வயது வரையிலான முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ண சீருடைகள் வழங்கும் திட்டம் முதலில் 5 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, தற்போது 25 ஒருங்கிணைந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு குழந்தைக்கு ரூ.262.50 மதிப்பில் மாநில அரசின் நிதியினை கொண்டு 9.15 இலட்சம் குழந்தைகள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.24.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.32. அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

### (அ) அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்

ஒன்றிய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் பங்களிப்புடன், அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் ஒரு அங்கன்வாடி மையம் ரூ.10.19 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. [மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் பங்கு ரூ.5.00 இலட்சம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் துறையின் பங்கு ரூ.2.00 இலட்சம் (60:40 ஒன்றிய அரசு : மாநில அரசு என்ற நிதி பகிர்வின் அடிப்படையில்) மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதியிலிருந்து ரூ.3.19 இலட்சம் கடந்த 5 ஆண்டுகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் பங்களிப்புடன் 5303 புதிய

அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டதில் 3276 புதிய அங்கன்வாடி மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**இத்திட்டத்திற்காக 2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் துறையின் பங்கு தொகையாக ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**ஆ) குழந்தை நேயக் கழிப்பறைகள் கட்டுதல்**

ஒன்றிய அரசு குழந்தை நேய கழிப்பறைகள் கட்டுவதற்கு ஒரு அங்கன்வாடி மையத்திற்கு ரூ.12000/- (60:40 ஒன்றிய அரசு : மாநில அரசு என்ற நிதி பகிர்வின் அடிப்படையில்) அனுமதித்துள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் பங்களிப்பு தொகை ரூ.26,000/- என மொத்தம் ரூ.38,000/- செலவில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் அங்கன்வாடி மையங்களில் கட்டப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்திற்காக 2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் துறையின் பங்கு தொகையாக ரூ.1.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(இ) சிறிய மற்றும் பெரிய அளவிலான பழுதுகளை நீக்கி அங்கன்வாடி மையத்தின் தரத்தினை மேலும் உயர்த்துதல்**

அரசு சொந்த கட்டடங்களில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மைய கட்டடங்களின் தரத்தினை மேலும் உயர்த்திடும் பொருட்டு மையம் ஒன்றிற்கு ரூ.2.00 இலட்சம் செலவில் (60:40 ஒன்றிய அரசு : மாநில அரசு என்ற நிதி பகிர்வின் அடிப்படையில்) தேவையின் அடிப்படையில் கல்நார் கூரையினை அகற்றி கான்கீரிட் தளம் அமைத்தல், மாற்று திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சாய்வு தளம் அமைத்தல், குழந்தை நேய கழிப்பறை பழுதுபார்த்தல், மையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற இதர பணிகள் மூலம் தரம் உயர்த்தப்படுகிறது. இப்பணிகள்

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.27.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(ஈ) அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல்**

அனைத்து அங்கன்வாடி மையங்களும் குடிநீர் வசதியுடன் செயல்படுவதை உறுதி செய்யும் வகையில் ஒரு மையத்திற்கு ரூ.10000/– (60:40 ஒன்றிய அரசு : மாநில அரசு என்ற நிதி பகிர்வின் அடிப்படையில்) அனுமதித்து வருகிறது.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.1.03 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(உ) அங்கன்வாடி மையங்களுக்கு எரிவாயு இணைப்பு, எரி வாயு அடுப்பு மற்றும் பிரஷர் குக்கர் ஆகியன வழங்கி நவீனமயமாக்குதல்.**

அங்கன்வாடி மையங்களில் புகையில்லாத சுற்றுச்சூழலை ஏற்படுத்தவும் மற்றும் சமைக்கும்

நேரத்தை சேமிக்கவும் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் (மலை பகுதிகளில் அமைந்துள்ள 5 மையங்கள் தவிர) ஒவ்வொரு மையத்திற்கும் எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு, பிரஷர் குக்கர் மற்றும் சமையல் மேடை அமைத்தல் ஆகியன மாநில அரசு, சட்ட மன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியினை பயன்படுத்தி நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

**(ஊ) அங்கன்வாடி மையங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு தொகை**

அரசு சொந்த கட்டடங்களில் இயங்கி வரும் அங்கன்வாடி மைய கட்டடங்களில் ஏற்படும் சிறிய வகையிலான பழுதுகளை நீக்குவதற்கும், சமையலுக்கு தேவையான பாத்திரங்கள் வாங்குவதற்கு மற்றும் இதர செலவினங்களுக்காக வருடாந்திர பராமரிப்பு நிதியாக கடந்த இரண்டு ஆண்டுகளாக அங்கன்வாடி மையம் ஒன்றிற்கு ரூ.3000/– (60:40 ஒன்றிய அரசு : மாநில

அரசு என்ற நிதி பகிர்வின் அடிப்படையில்) அனுமதிக்கப்பட்டது.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.12.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(எ) அங்கன்வாடி மையங்களுக்கு தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வழங்குதல்**

கடந்த இரண்டு ஆண்டுகளாக அங்கன்வாடி மையங்களுக்கு உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வழங்கும் பொருட்டு, ஆண்டொன்றுக்கு 9900 முதன்மை அங்கன்வாடி மையங்களுக்கு தலா ரூ.10,000/- எனவும், 988 குறு அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.7000/- எனவும் (60:40 ஒன்றிய அரசு : மாநில அரசு) என்ற நிதி பகிர்வின் அடிப்படையில்) அனுமதிக்கப்படுகின்றது.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.10.59 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.33 வளரிளம் பெண்களுக்கானத் திட்டம்

இத்திட்டம் வளரிளம் பெண்களுக்கான சிறப்புத் திட்டமாகும். இதன் குறிக்கோள் வளரிளம் பெண்களுக்கு கல்வி வசதிகளை அளித்து தன்னம்பிக்கையுடைய, தன்னிறைவு பெற்ற தனிநபர்களாக மேம்பாடு அடையச் செய்வதாகும். இத்திட்டம் பள்ளி செல்லாத 11–14 வயது வளரிளம் பெண்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தில் ஊட்டச்சத்து மற்றும் ஊட்டச்சத்து அல்லாத பிரிவுகள் உள்ளன.

ஊட்டச்சத்து பிரிவின்கீழ், அங்கன்வாடி மையத்தில் பதிவு செய்துள்ள பள்ளி செல்லாத 11–14 வயது வளரிளம் பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு 165 கிராம், இணை உணவு (சத்துமாவு) வீட்டிற்கு எடுத்துச் செல்லும் உணவாக, வருடத்திற்கு 300 நாட்கள் வழங்கப்படுகிறது.

மேலும், பள்ளி செல்லா 11–14 வயது வளரிளம் பெண்களை ஊக்கப்படுத்தி, இடையில் நின்ற

படிப்பினை மீண்டும் தொடர அல்லது பல்வேறு திறன் பயிற்சிகள் பெற்றிட மற்றும் சுய மேம்பாட்டிற்கு ஆதரவான சூழ்நிலையை வழங்குகின்றது. ஊட்டச்சத்து அல்லாத பிரிவில், இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்குதல், மருத்துவப் பரிசோதனை, மருத்துவ பரிந்துரை, ஊட்டச்சத்து கல்வி, சுகாதார கல்வி, வாழ்க்கைத் திறன் கல்வி மற்றும் பொது சேவைகளை பெற்றுக் கொள்ள வழிகாட்டுதல் ஆகியவை அடங்கும்.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஊட்டச்சத்து அல்லாத பிரிவிற்கு ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.34 தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம்

சமுதாயத்தில் பணிக்கு செல்லும் தாய்மார்களின் 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைளை மிகவும் பாதுகாப்பான இடத்தில் பராமரிக்கவும் பணிபுரியும் பெண்கள் தொடர்ந்து பணிக்கு செல்வதை ஊக்குவிக்கும் வகையில் தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம் முக்கிய பங்கு வகிக்கின்றது. தற்போது தேசிய

குழந்தைகள் காப்பக திட்டத்தின் கீழ் 418 காப்பகங்கள் 60:30:10 என்ற நிதி பகிர்வின் அடிப்படையில் (60% ஒன்றிய அரசு : 30% மாநில அரசு : 10% தொண்டு நிறுவனம்) தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகிறது.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.6.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.35 பயிற்சி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தில், திட்டப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி, திட்டப் பணிகளின் தரத்தை மேம்படுத்துவதிலும் மற்றும் திட்டம் வெற்றிகரமாக செயல்படுவதற்கும் பயிற்சி இன்றியமையாததாக அமைகிறது.

தமிழ் நாட்டில் பரவலாக்கப்பட்ட பயிற்சி முறை பின்பற்றப்படுகிறது. குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள், அங்கன்வாடி பயிற்சி மையங்களின் பயிற்றுநர்கள் மற்றும் மேற்பார்வையாளர் நிலை–2

ஆகியோர்களுக்கான பணிப் பயிற்சி சென்னை, தரமணியிலுள்ள மாநில பயிற்சி மையத்தில் தங்கிப் பயிலும் வகையில் நடத்தப்படுகின்றது. மாநில பயிற்சி நிலையத்தில், பயிற்றுநர்கள், உள்கட்டமைப்பு வசதிகள், கற்பித்தல், கற்றல் உபகரணங்கள் மற்றும் களப்பயிற்சி ஆகியவை உள்ளன. மாநில பயிற்சி நிறுவனம் தங்கும் விடுதியுடன் செயல்படுகிறது.

அங்கன்வாடி பணியாளர்களுக்கான பணிப்பயிற்சி மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கான புத்தறிவு பயிற்சி, தொகுதி அளவில் ஒரு தனித்துவமான செலவு குறைந்த சிறந்த முறையில், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், மேற்பார்வையாளர் நிலை–1, சுகாதாரம் மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் பிரதிநிதிகளைக் கொண்ட வட்டார பயிற்சி குழுவின் மூலம் நடத்தப்படுகின்றது.

களப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியில், பச்சிளம் குழந்தைகள் மற்றும் இளம்

குழந்தைகளுக்கு உணவளித்தல் நடைமுறைகள் பற்றிய பயிற்சி ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது.

**2021 – 2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 5.52 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 4.36 தகவல், கல்வி, தொடர்பு

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள் மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவதையும், எண்ணங்களில் மாற்றங்களை தூண்டுவதையும், நேர்மறையான நடத்தை மாற்றங்களை கொண்டு வருவதன் மூலம் சமூகத்தில் ஊட்டச்சத்து குறைபாட்டை குறைப்பதையும் நோக்கமாக கொண்டுள்ளது.

தாய் மற்றும் குழந்தை வளர்ச்சி, ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை பேணுவோர் மற்றும் பங்கேற்பாளர்களிடம் ஏற்படுத்துவதற்காக சமுதாய வளைகாப்பு, பாரம்பரிய உணவு திருவிழாக்கள், பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு, கிராம

கலைஞர்களின் தெரு நாடகங்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் தகவல், கல்வி மற்றும் தொடர்பு பிரிவின் மூலம் நடத்தப்படுகின்றன.

தகவல் மற்றும் கல்வி மூலம் இத்திட்டத்தின் மதிப்பை பிரதிபலிப்பதற்கும் மற்றும் திட்டத்தின் பணிநடைமுறைகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குவதற்கும் ஏதுவாக அச்சு ஊடகம் மூலம் "சிட்டுக் குருவி சேதி தெரியுமா" என்ற இரு மாத செய்தி இதழ் வெளியிடப்படுகின்றன.

அங்கன்வாடி மையங்களில் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் நலப் பணிகள் குறித்து ஒலி–ஒளி வடிவிலான குறுந்தகவல்கள் (Jingles) தயாரிக்கப்பட்டு தொலைக்காட்சி, வலையொளி (youtube), முகநூல் போன்ற பல்வேறு சமூக ஊடக தளங்கள் மூலம் மாநிலம் முழுவதும் ஒளிபரப்பப்படுகின்றன.

மாநிலம் முழுவதும் சுகாதாரம், ஆரோக்கியம், தாய், சேய் ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் மற்றும்

பொது சுகாதார தகவல்கள் குறித்து கண்காட்சிகள் பல்வேறு நிலைகளில் நடத்தப்படுகின்றன.

## 4.37 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத் துறையின் கீழ் ஆதார் பதிவு திட்டம்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத் துறையின் கீழ் 0–6 வயதிலான குழந்தைகளுக்கு ஆதார் பதிவு கடந்த டிசம்பர் 2018 முதல் நடைப்பெற்று வருகிறது. 434 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் ஆதார் பதிவு மையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. ஆதார் பதிவு குறித்த நிகழ்நிலை தேர்வில் தேர்ச்சிப் பெற்ற குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் ஆகியோர் இந்திய தனித்துவ அடையாள ஆணையத்துடன் (Unique Identification Authority of India) இணைந்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத் துறையின் கீழ் ஆதார் பதிவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது 2321 ஆதார் சேர்க்கை முகவர்கள் களத்தில்

உள்ளனர். இவர்கள் மூலம் மாநிலம் முழுவதும் குழந்தைகளுக்கான ஆதார் பதிவு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.38 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத் துறைக்கு தொடர்புடைய நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

| இலக்கு | குறி இலக்கு எண் | குறி இலக்கு | மாநில குறியீடு கட்டமைப்பு | சாதனை |
|---|---|---|---|---|
| 1 | 1.3 | தேசிய அளவில் வறுமை மற்றும் அதனால் பாதிக்கப்படக்கூடிய மக்களின் வாழ்க்கை தரத்தை 2030ம் ஆண்டிற்குள் அடைய மேற்கொள்ளப்படும் சமூக பாதுகாப்பு முறைகள் | 1.3.2 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடையும் பயனாளிகள் | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் பதிவு செய்யப்பட்ட அனைவரும் பயனடைவர் |
| 2 | 2.1 | 2030ம் ஆண்டிற்குள் வறுமையில்லா நிலையை அடைய உறுதி செய்தல் அதற்கு குழந்தைகளின் பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் போதுமான உணவு அளித்தல் | 2.1.1 5 வயதிற்குட்பட்ட எடை குறைவான குழந்தைகள் சதவிகிதம் | 23.8 % லிருந்து 8.13% ஆக குறைக்கப்பட்டது ( ஆதாரம் ICDS CAS) |
| 3 | 2.2 | 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்து விதமான ஊட்டச்சத்து குறைபாடுகளை தவிர்த்தல், அத்துடன் 2025ஆம் ஆண்டிற்குள் சர்வதேச அளவில் இலக்கிடப்பட்டுள்ள குறியீடுகளான 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் மெலிந்த மற்றும் குள்ளத் தன்மையனை குறைத்தல், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முதியவர்கள் ஊட்டச்சத்து தேவையினை பூர்த்தி செய்தல். | 2.2.1 5 வயதிற்குட்பட்ட குள்ளத்தன்மை உள்ள குழந்தைகள் சதவிகிதம்.<br><br>2.2.2 5 வயதிற்குட்பட்ட மெலிந்த குழந்தைகள் சதவிகிதம் | 27.1 % லிருந்து 24.29% ஆக குறைக்கப்பட்டது ( ஆதாரம் ICDS CAS)<br><br>19.7 % லிருந்து 6.63% ஆக குறைக்கப்பட்டது ( ஆதாரம் ICDS CAS) |

## 4.39 ஊட்டச்சத்து குறியீடுகள் மற்றும் நிலையான நீடித்த இலக்குகளை அடைந்ததற்கான துறை சார்ந்த சாதனைகள்

| குறியீடு | NFHS-4(2016)% | | ICDS CAS (Feb'2020)% |
|---|---|---|---|
| | மாநில அளவில் | இந்திய அளவில் | மாநில அளவில் |
| குள்ளத்தன்மை (%) | 27.1 | 38.4 | 24.29 |
| மெலிந்த தன்மை (%) | 19.7 | 21.0 | 6.63 |
| எடை குறைவு(%) | 23.8 | 35.7 | 8.13 |

NFHS- National Family Health Survey.

CAS- Common Application Software.

## 4.40 அங்கன்வாடிப் பணியாளர்களின் நலன்

தமிழ்நாட்டில் உள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் 7-வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ. | ஒன்றிய அரசின் பங்களிப்பு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | அங்கன்வாடி பணியாளர்கள் | 49,499 | 7,700 – 24,200 | 2700 |
| 2. | குறு அங்கன்வாடி பணியாளர்கள் | 4,940 | 5,700 – 18,000 | 2100 |
| 3. | அங்கன்வாடி உதவியாளர்கள் | 49,499 | 4,100 – 12,500 | 1350 |

- இது தவிர அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி, மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி மற்றும் ஆண்டு ஊதிய உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது.
- அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது, ஒட்டுமொத்த ஓய்வு தொகையாக அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ரூ 1,00,000/-மும், அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ரூ50,000மும் வழங்கப்படுகிறது. ஓய்வுபெற்ற அங்கன்வாடி ஊழியர்களுக்கு சிறப்பு ஓய்வூதியமாக ரூ.2000/- வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு புடவை ஒன்றுக்கு ரூ.400/- வீதம் இரண்டு புடவைகள் சீருடையாக வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் சேவைகள், பாதிக்கப்படக் கூடிய குழந்தைகள், வளரிளம் பெண்கள், தாய்மார்களுடைய சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து மேம்பாடு அடைந்திட, சமுதாயத்தில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வியை வளர்ப்பதன் மூலம் ஒரு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகும். இந்த நோக்கம், முழுமையடையும் போது ஒரு முற்போக்கான சமுதாயம் உருவாகும். இது மாநிலத்தின் சமூக பொருளாதார குறியீட்டில் வலுவான முன்னேற்றத்தைக் கொண்டிருக்கும்.

*****

## அத்தியாயம்–5

## சமூகப் பாதுகாப்பு

### முன்னுரை

தமிழ்நாடு அரசானது இந்திய அரசியலமைப்பிலும் குழந்தை உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையிலும் கூறப்பட்டுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளை செயல்படுத்துவதில் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. குழந்தைகள் ஒரு தேசத்தின் சொத்தாவர். அனைத்து விதமான பாகுபாடுகள் மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. தமிழக அரசு குழந்தைகளின் மீது மிகுந்த அக்கறையும் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு பல்வேறு சட்டங்கள் மற்றும் திட்டங்களை இயற்றி செயல்படுத்துவதன் மூலமும், வலுவான குழந்தை பாதுகாப்பு அமைப்பை நிறுவுவதன் மூலமும்

குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை அதிகபட்ச அளவில் வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

வருங்கால சமுதாயத்தை கட்டமைக்க, பல்வேறு முன்னேற்ற நலன் சார்ந்த திட்டங்கள் மூலம் குழந்தைகளின் நல்வாழ்வுக்காக தமிழ்நாடு அரசு அதன் வளங்களை முதலீடு செய்கிறது.

சுதந்திரத்திற்கு முன், சீர்திருத்த பள்ளிச் சட்டம் 1876–இன்கீழ் அரசு, சீர்திருத்த பள்ளிகளை 1887–இல் நிறுவியது. அதைத் தொடர்ந்து, இந்திய அளவில் முதன்முதலில், மெட்ராஸ் குழந்தைகள் சட்டம், 1920–ஆம் ஆண்டு இயற்றப்பட்டு மாநிலத்தில் சீர்திருத்த பள்ளிகள் மாநில அரசால் நிறுவப்பட்டது.

**5.1** சமூகப் பாதுகாப்புத் துறை, இடர்பாடான சூழ்நிலையிலுள்ள பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் தேவைப்படும் குழந்தைகள், ஒழுக்கநெறி பிறழ்தலுக்கு உட்படுத்தப்பட்டு கவனிப்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு தேவைப்படும் சிறுமியர் மற்றும் மகளிர் ஆகியோரை

பாதுகாத்து, சேவைகள் புரிவதை கடமையாக கொண்டுள்ளது. இத்துறை, இளைஞர் நீதி அமைப்பிற்குள் வரும் சிறார்களின் மறுவாழ்வினைக் கருத்திற்கொண்டு நிறுவனம் மற்றும் நிறுவனம் சாராத் தேவைகளையும் வழங்கி வருகிறது. இது தவிர, குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யவும் அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும் துறையின் அனைத்து திட்டங்களிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் ஈடுபடுத்தி வருகிறது.

இத்துறையின் கீழியங்கும் நிறுவனங்களில், இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–இன் கீழ் அனுமதிக்கப்படும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் தவறிழைத்ததாக கருதப்படும் சிறார்கள் ஆகியோரின் மறுவாழ்விற்காக கவனிப்பு, பாதுகாப்பு, கல்வி, சிகிச்சை, தொழிற்கல்வி ஆகியவை அளிக்கப்படுகிறது. மேலும், ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956–இன் கீழ் நிறுவனங்களில்

அனுமதிக்கப்பட்ட பெண் குழந்தைகள் மற்றும் மகளிர் ஆகியோருக்கு இல்ல பராமரிப்பு சேவைகளையும் இத்துறை அளித்து வருகிறது.

மேலும், மேற்கண்ட இரண்டு சட்டங்களின் சட்டபூர்வமான கடமைகளை நிறைவேற்ற, சமூக பாதுகாப்புத் துறை குழந்தைகள் இல்லங்கள், திறந்தவெளி புகலிடங்கள், சிறப்பு தத்தெடுப்பு முகமைகள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பாதுகாப்பு இடம் மற்றும் விழிப்பு/பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றை பராமரித்து வருகிறது. இந்நிறுவனங்களிலிருந்து வீடேகும் சிறார்கள் மற்றும் மகளிருக்கு தேவையான பிற்காப்பு சேவைகளை அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளில், பிற்காப்பு நிறுவனங்கள் மூலமாக இத்துறை அளித்து வருகிறது. மேலும், "மிஷன் வத்சல்யா"–வின் கீழ் குழந்தைகள் பாதுகாப்பினை திறம்படவும் பயன்மிகுந்ததாகவும் வழங்கும் ஒரு குழந்தை பாதுகாப்பு அமைப்பு மூலமாக

குழந்தை பாதுகாப்பு சேவைகளை இத்துறை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.

மேற்கூறிய இரண்டு சட்டங்களின் கீழ் நிறுவன பராமரிப்பின் பொருட்டு பல்வேறு நிறுவனங்களை நடத்தி வருவதுடன், குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005 மற்றும் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012 ஆகிய இரு முக்கிய சட்டங்களையும் இத்துறை செயல்படுத்தி வருகிறது.

### 5.1.1 சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தால் செயல்படுத்தப்படும் சட்டங்கள்

1. இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015
2. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012
3. குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005
4. ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

## 5.2 இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015, குழந்தையின் சிறந்த நலனை கருத்திற்கொண்டு குழந்தை நேய சூழலுக்கேற்ற அணுகுமுறையை கடைபிடித்து இடர்பாடான சூழ்நிலையில் உள்ள குழந்தைகளின் முறையான பராமரிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு, நடத்தும் முறை மற்றும் சமூகத்தின்பால் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது. இச்சட்டம், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளை கையாளுவது குறித்து சட்டரீதியான கட்டமைப்பை வழங்கியுள்ளது. இச்சட்டம், மேற்படி குழந்தைகளின் நலன் பேணப்படுவதற்கு முனைகிறது.

### 5.2.1 பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்

இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015, பிரிவு 2(14)– இன்படி, "பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தை" என்பவர் வீடு அல்லது தங்குமிடம் இல்லாமல் காணப்படும் ஒரு குழந்தை அல்லது வாழ்வாதாரம் இல்லாத அல்லது குழந்தை தொழிலாளர் சட்டத்திற்கு முரண்பாடாக வேலை செய்யும் குழந்தைகள் / மனநலம் பாதிக்கப்பட்ட / மாற்றுத் திறனாளி / பெற்றோர் அல்லது பாதுகாவலர் தகுதியற்றவர் அல்லது இயலாதவர் எனக் கண்டறிப்பட்டவர்களின் குழந்தைகள் / தெருவோர குழந்தைகள் / திருமண வயதை அடையாத நிலையில் திருமணத்திற்கு உட்படுத்தப்படும் வகையில் உடனடி ஆபத்தில் உள்ளவர் / பெற்றோர் இல்லாதவர் / பராமரிக்க எவரும் தயாராக இல்லாதவர்கள் / பாலியல் ரீதியாக பாதிப்பிற்குள்ளான குழந்தைகள் / பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகள் காணாமல் போன அல்லது

வீட்டை வீட்டு வெளியேறிய குழந்தைகள் மற்றும் உரிய விசாரணைக்கு பின்னர் பெற்றோர்களை கண்டறிய இயலாத குழந்தைகள் ஆகியோர் ஆவார்கள்.

### 5.2.1.1 குழந்தை நலக் குழுக்கள்

குழந்தை நலக் குழுக்களானது, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–இன்படி அமைக்கப்பெற்ற சட்டமுறையான அமைப்பாகும். மேற்படி சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளில், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கென வழங்கப்பட்டுள்ள அதிகார வரைமுறைக்குட்பட்டு குழந்தைகள் தொடர்பான நேர்வுகளைத் தீர்வு செய்வதற்கான அமைப்பாகும். 1973ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை விதிகளின்படி, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் ஆகியோருக்கு உள்ள அதிகாரத்துடன் குழந்தை நலக் குழுக்களும் ஓர் அமர்வாக செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குழந்தை நலக் குழுவும் ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களைக் (ஒரு மகளிர் உறுப்பினர் உட்பட) கொண்டது. குழந்தை நலக் குழுவின் நடைமுறைகள் குழந்தைகளின் சிறந்த நலனை முன்னிட்டு குழந்தை நேய சூழலுடன் நடத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசு, மாநிலத்தின் 38 மாவட்டங்களில் 34 குழந்தை நலக் குழுக்களை நிறுவியுள்ளது. இக்குழுக்களின் மூலம் 2020-2021-ஆம் ஆண்டில் 8,337 வழக்குகள் கையாளப்பட்டுள்ளன.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.799.21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.2.1.2 குழந்தைகள் இல்லங்கள்**

குழந்தை நலக் குழுக்கள் மூலம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளாக இளைஞர் நீதி அமைப்பிற்குள் வரும் இல்லப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள், குழந்தை இல்லங்களில் குறுகிய கால மற்றும் நீண்ட கால

பராமரிப்பு, சிகிச்சை, கல்வி, பயிற்சி, முன்னேற்றம் மற்றும் மறுவாழ்விற்காக தங்கவைக்கப்படுகிறனர். இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–இன் கீழ் குழந்தைகள் இல்லங்கள் மாநிலம் முழுவதும் நிறுவப்பட்டுள்ளது. நாளது வரையில் மாநிலம் முழுவதும் 1,103 குழந்தைகள் இல்லங்கள் சமூக பாதுகாப்புத் துறை மூலம் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–இன் கீழ் பதிவு செய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன. 36 குழந்தைகள் இல்லங்கள் நேரடியாக அரசாலும், 149 குழந்தைகள் இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும் அரசின் நிதி உதவியுடன் இயங்கி வருகின்றன. இதில் மனநலம் குன்றிய மற்றும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 5 இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. குழந்தை பாதுகாப்புச் சேவைகளின் கீழ் ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.2,160/–வீதம் பராமரிப்பு

மானியமாக 149 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக உணவு, உடை, தங்குமிடம், மருத்துவ உதவிகள், கல்வி, தொழிற்கல்வி முதலியன வழங்கப்பட்டு வருகின்றன. கொரோனா நோய் தொற்றிற்கு முன்பு குழந்தைகள் இல்லங்களில் 46,979 குழந்தைகள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். தற்போது 11,109 குழந்தைகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர் மீதமுள்ள குழந்தைகள் பெற்றோர்/ பாதுகாப்பாளர் வசம் தற்காலிகமாக திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.14337.98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.2.1.3 நகர்ப்புறம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கான திறந்த வெளிப் புகலிடங்கள்

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் அனைத்து குழந்தைகள் குறிப்பாக பிச்சை எடுக்கும் சிறார்கள், தெருவோர மற்றும் பணிபுரியும் சிறார்கள், குப்பை பொறுக்கும் சிறார்கள், சிறு வியாபாரம் செய்யும் குழந்தைகள், தெருக்கலைஞர்கள், அனாதை, கைவிடப்பட்ட, கடத்தப்பட்ட மற்றும் வீட்டைவிட்டு வெளியேறிய குழந்தைகள், இடம்பெயர்ந்தோரின் குழந்தைகள் மற்றும் ஏனைய பாதிப்பிற்குள்ளாகும் சூழலில் உள்ள குழந்தைகள் ஆகியோரின் தேவைகளை நகர்ப்புறம் மற்றும் புறநகர் பகுதிகளில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் சிறார்களுக்கான திறந்தவெளிப் புகலிடங்கள் பூர்த்தி செய்யும். வீடற்ற மற்றும் தெருவோர குழந்தைகளின் மேம்பாட்டிற்கான தேவைகளை அவர்களுக்கு

கிடைக்கச் செய்வதன் மூலம் அவர்களின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை பாதுகாப்பதை உறுதி செய்யவதும் சமூகத்தில் ஒன்றிணைப்பதுமே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தற்போது, தமிழ்நாட்டில் உள்ள 17 திறந்தவெளிப் புகலிடங்களில், 11 திறந்தவெளிப் புகலிடங்கள் அரசின் நிதி உதவியுடன் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.2,160/–வீதம் பராமரிப்பு மானியமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. 436 குழந்தைகள் தங்கும் வகையில் இப்புகலிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.234.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

நிறுவன பராமரிப்பு தவிர, குழந்தைகளை சமூகத்துடன் இணைக்க பின்வரும் பல புதுமையான திட்டங்களை தமிழ்நாடு அரசு தொடங்கி உள்ளது:–

**(அ) மாநில அளவிலான வருடாந்திர விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்.**

சமூக பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் 36 அரசு இல்ல குழந்தைகள் மற்றும் அரசின் மானியம் பெறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு அவர்களின் திறமைகளை ஊக்குவித்து, வளர்ச்சியுறச்செய்து வெளிக்கொண்டுவர தமிழ்நாடு அரசால், மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் 2017–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 10.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், அரசு குழந்தை பராமரிப்பு இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளின் பொழுதுப்போக்கு மற்றும்

மறுவாழ்விற்காக விளையாட்டு பொருட்கள் கொள்முதல் செய்ய ரூபாய் 2.75 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

**2021–2022ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(ஆ) குழந்தைகளுக்கான கல்வி சுற்றுலா திட்டம்**

சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் 36 அரசு குழந்தைகள் இல்ல குழந்தைகளுக்கு, அவர்கள் வெளியுலக அனுபவத்தை பெற மற்றும் அவர்களிடையே சமூக ஒருங்கிணைப்பினை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் கல்வி சுற்றுலா திட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

**2021–2022ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(இ) குழந்தை தகவல் அமைப்பு**

இளைஞர் நீதி அமைப்பின் கீழ் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சேவைகளை கண்காணிப்பதை வலுப்படுத்துவதற்காகவும் மற்றும் குழந்தைகளின் மொத்த தகவலை சேகரித்து பதிவேற்றம் செய்து ஆவணப்படுத்தவும் ரூ.65.00 இலட்சம் செலவில் "குழந்தை தகவல் அமைப்பு" என்ற பெயரில் ஒரு புதிய இணைய முகப்பு (Portal) உருவாக்க அரசு ஆணையிட்டுள்ளது. இந்த இணைய முகப்பு (Portal) மூலம் எல்லா பங்குதாரர்களும் குழந்தைகளை பற்றிய மதிப்பீடு மற்றும் அறிக்கைகளை சமர்ப்பிக்க ஏதுவாக மென்பொருள் பயன்பாடுகள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. இந்த அமைப்பு, அறிக்கைகளை உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படுவதையும் பெறப்படுவதையும், அறிக்கைகளின் தரத்தை கண்காணிக்கவும், குழந்தையின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிப்பதையும் உறுதிசெய்யும். குழந்தைகளின்

வளர்ச்சியை கண்காணிக்க தனிநபர் பராமரிப்பு திட்டமேலாண்மை, சமூக விசாரணை அறிக்கை மற்றும் சுகாதார அறிக்கை போன்றவைகளும் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றை எளிதாக அணுகவும், பராமரிக்கவும், தேவைகளுக்கேற்ப பிரதிகள் எடுக்கவும் ஏதுவாக மின்னணு முறையில் பராமரிக்கப்படுகிறது.

**(ஈ) பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012–இன்கீழ் உருவாக்கப்பட்டுள்ள "தமிழ்நாடு பாதிக்கப்பட்ட குழந்தை இழப்பீட்டு நிதி"**

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012–இன் கீழ் பாலியல் குற்றங்களினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இடைக்கால இழப்பீடு மற்றும் இறுதி இழப்பீடு வழங்குவதற்காக, ரூபாய் 2.00 கோடி நிதியுடன் "தமிழ்நாடு பாதிக்கப்பட்ட குழந்தை இழப்பீட்டு நிதி" உருவாக்கப்பட்டுள்ளது.

**(உ) பல்நோக்கு ஆதார வளமையங்கள்**

இத்துறையின் கீழ் இயங்கும் இராணிப்பேட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள வரவேற்பு இல்லங்களில் ஒரு பல்நோக்கு ஆதார வளமையத்தினை ரூ.9.00 இலட்சம் வீதம் நான்கு வளமையங்கள் ரூபாய் 36.00 இலட்சம் செலவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**(ஊ) கொரோனா நோய்த்தொற்றில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

1) மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள் மூலம் கொரோனா நோய்த்தொற்றில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க, செய்ய வேண்டியவை மற்றும் செய்யகூடாதவை (Do's and Don'ts) என்பன குறித்த விளம்பர பலகைகள் அனைத்து குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களில் அமைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.
2) மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூபாய் 45.00 இலட்சம் சமூகப் பாதுகாப்பு துறையின் கீழ் இயங்கிவரும் அரசு நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு கொரோனா தடுப்புப்பணிகள்

மேற்கொள்ளப்பட்டு மருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு இல்லங்களில் குழந்தைகள்/ பெண்கள் நலனுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**(எ) முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் கொரானா தொற்றினால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்த குழந்தைகளின் நலவாழ்விற்கான நிதி உதவி மற்றும் பல்வேறு நலத்திட்டங்கள்**

குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பில் அதிக அக்கறை கொண்டுள்ள தமிழக அரசானது, அவர்களின் நலன் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. கோவிட்–19 பெருந்தொற்றின்போது, இத்தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் தொற்றால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் குழந்தைகளுக்கும் மறுவாழ்வு அளிக்க அரசு விரைவான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கோவிட்–19 நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அத்தொற்றால் பாதிக்கப்பட்ட

பெற்றோர்களின் குழந்தைகளை பராமரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் தலையீட்டு (intervention) திட்டங்களை வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்டு அவர் உட்பட ஏழு உறுப்பினர்களை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான பணிக்குழுவை அரசு அமைத்துள்ளது.

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்ட ஒரு குழந்தை பராமரிப்பு நிறுவனம், குழந்தைகளுக்கான பிரத்யேகமாக கோவிட் பராமரிப்பு மையமாக அடையாளம் காணப்பட்டு, அந்நிறுவனங்களுக்கு தேவைப்படும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கோவிட்–19 நோயால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்த குழந்தைகள் அல்லது ஒரு பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்துள்ளார். இத்துறை மூலமாக கொரானா தொற்றினால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்து,

ஆதரவின்றி தவிக்கும் குழந்தைகளின் நலவாழ்விற்காக கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:–

- கொரோனா நோய்த் தொற்றினால் பெற்றோர்களை இழந்து, ஆதரவின்றி தவிக்கும் குழந்தைகளுக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து குழந்தையின் பெயரில் ரூ.5.00 இலட்சம் தமிழ்நாடு மின் நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டு அக்குழந்தை 18 வயது நிறைவடையும் போது, அத்தொகையை குழந்தைக்கு வட்டியோடு வழங்குதல்.
- ஏற்கெனவே தாய் அல்லது தந்தையை இழந்து, தற்போது கொரோனா நோய்த் தொற்றினால் மற்றொரு பெற்றோரையும் இழந்த குழந்தைகளுக்கும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து குழந்தையின் பெயரில் ரூ.5.00 இலட்சம் தமிழ்நாடு மின் நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டு அக்குழந்தை 18 வயது நிறைவடையும் போது, அத்தொகையை குழந்தைக்கு வட்டியோடு வழங்குதல்.
- பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்லங்கள்

மற்றும் விடுதிகளில் சேருவதற்கு முன்னுரிமை வழங்குதல்.

- பெற்றோர்களை இழந்த குழந்தைகளின் பட்டப்படிப்பு வரையிலான கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து செலவினங்களையும் அரசே ஏற்றுக்கொள்ளுதல்.
- கொரோனா நோய்த் தொற்றினால் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து உடனடி நிவாரணத் தொகையாக ரூ.3.00 இலட்சம் வழங்குதல்.
- பெற்றோர்களை இழந்த குழந்தை, அரசு காப்பகம் அல்லது விடுதிகளில் இல்லாது, உறவினர்/பாதுகாவலரின் ஆதரவில் வளரும்போது பராமரிப்புச் செலவாக, மாதந்தோறும் ரூ.3,000 உதவித் தொகை, குழந்தையின் 18 வயது நிறைவடையும் வரையில் வழங்குதல்.
- இக்குழந்தைகளுக்கும், நோய்த் தொற்றினால் கணவன் அல்லது மனைவியை இழந்து, குழந்தையுடன் இருக்கும் பெற்றோருக்கும் அனைத்து அரசு நலத் திட்டங்களிலும் முன்னுரிமை வழங்குதல்.

மேலும், ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை, அவர்களின் கல்வி வளர்ச்சி, பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை கண்காணிக்க மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுவரை கோவிட்–19 நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்த 127 குழந்தைகளுக்கு ரூ.6.35 கோடியும் மற்றும் ஒரு பெற்றோரை இழந்த 2,987 குழந்தைகளுக்கு ரூ.89.61 கோடியும், ஆகமொத்தம் 3,114 குழந்தைகளுக்கு ரூ.95.96 கோடி தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

### 5.2.1.4 குழந்தை தத்தெடுப்பு

"தத்தெடுத்தல் என்பது", பெற்றோர்களிடமிருந்து நிரந்தரமாக பிரிய நேரிட்ட ஒரு குழந்தை, தத்து பெற்றோர் என்று அழைக்கப்படும் புதிய பெற்றோரின் உறவுமுறையோடு இணைந்து அனைத்து

தார்மீக உரிமைகள், சலுகைகள் மற்றும் பொறுப்புகளோடு அவர்களது சட்டப்பூர்வமான குழந்தையாக மாறும் செயல்முறையை குறிப்பதாகும். அதுபோல ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் ஒப்படைவு செய்யப்பட்ட குழந்தைகள், பெற்றோர் அல்லது சட்ட ரீதியான பாதுகாவலர் இல்லாத அல்லது சட்ட ரீதியான பாதுகாவலர் பராமரிக்க விரும்பாத / இயலாத நிலையில் உள்ள குழந்தைகளையே தத்து வழங்க இயலும்.

கைவிடப்பட்ட, ஆதரவற்ற, ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்கான மாற்றுபராமரிப்பு மற்றும் குடும்பத்தை உருவாக்கும் பொருட்டு தத்தெடுத்தலை அரசாங்கம் ஊக்குவிக்கிறது. ஒரு குழந்தை உரிய விசாரணைக்கு பிறகு கடைசி தீர்வாகவே நிறுவன பராமரிப்பில் சேர்க்கப்பட வேண்டும்.

தத்தெடுத்தல் என்பது ஒன்றிய அரசின் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் தன்னாட்சி நிறுவனமாக செயல்படும் மத்திய தத்துவள

அதிகார அமைப்பால் (CARA) வகுக்கப்பட்ட தத்தெடுப்பு ஒழுங்குமுறைகள், 2017–இன்படி நடைபெறுகிறது. தத்தெடுப்பு திட்டத்தில் வெளிப்படைத் தன்மையை பேணுவதற்காக இவ்வொழுங்கு முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது இணையதள பதிவை கட்டாயப்படுத்துவதுடன், தத்தெடுக்கப்படும் குழந்தைகள் குறித்த விவரங்கள் மற்றும் தத்தெடுப்பு மையங்கள் குறித்த தகவல் மத்திய தத்து வள அதிகார அமைப்பின் இணையதளம் www.cara.nic.in வாயிலாக மேற்கொள்ளப்பட்டு குழந்தை தத்தெடுப்பிற்கான வழிமுறைகள் நாடு முழுமைக்கும் பொதுவாக அமைந்துள்ளது.

சமூக பாதுகாப்பு இயக்ககத்தில் செயல்பட்டு வரும் "மாநில தத்து வள முகமை" (State Adoption Resource Agency – SARA) மாநிலத்தில் தத்தெடுத்தல் திட்டத்தை 2015–ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் மற்றும் அதன் கீழமைந்த விதிகளின் கீழ்

செயல்படுத்தும் பொறுப்பான அமைப்பாகும். தத்தெடுத்தலை எளிதாக புரிந்து கொள்ள ஏதுவாக "தத்தெடுத்தல் குறித்த கையேடு" ஒன்றை மாநில தத்து வள முகமை வெளியிட்டுள்ளது. பொதுமக்களிடையே குழந்தை தத்தெடுத்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் செய்திகளை பரப்புவதற்கும் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள், சிறப்பு தத்தெடுப்பு முகமைகள், சமூக குழுக்கள் மற்றும் பொது இடங்களில் விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. சட்ட பூர்வமற்ற குழந்தை தத்தெடுத்தலைத் தடுக்க மருத்துவ துறைவல்லுநர்களுக்கும் இதர பங்குதாரர்களுக்கும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

### 5.2.1.5 சிறப்பு தத்தெடுப்பு முகமைகள்

தமிழ்நாட்டில் உள் மற்றும் வெளிநாட்டில் தத்து வழங்கிட 22 சிறப்பு தத்தெடுப்பு முகமைகள் செயல்படுகின்றன. மேற்படி முகமைகள் முறையே மதுரையில் இரண்டும், காஞ்சிபுரத்தில் மூன்றும், சேலத்தில் இரண்டும் மற்றும் அரியலூர், சென்னை, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றும் என அமைந்துள்ளன.

1993 முதல் மார்ச் 2021 வரை தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விவரம் கீழ்க்கண்டவாறு :–

| வ. எண் | தத்தெடுப்பின் தன்மை | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1 | உள்நாட்டுத் தத்தெடுப்பு | 1572 | 4288 | 5860 |
| 2 | வெளிநாட்டுத் தத்தெடுப்பு | 116 | 396 | 512 |
| | **மொத்தம்** | **1688** | **4684** | **6372** |

2020–2021ஆம் ஆண்டில் தத்து வழங்கப்பட்ட குழந்தைகளின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | தத்தெடுப்பின் தன்மை | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1 | உள்நாட்டுத் தத்தெடுப்பு | 138 | 216 | 354 |
| 2 | வெளிநாட்டுத் தத்தெடுப்பு | 5 | 3 | 8 |
| | **மொத்தம்** | **143** | **219** | **362** |

## 5.2.1.6 நிதி ஆதரவுத் திட்டம் (Sponsorship)

குழந்தைகளின் ஆதரவற்ற நிலையை தடுப்பதற்கும், குழந்தைகளை குடும்பத்துடன் வைத்து பராமரிப்பதற்கும், கல்வியை தொடர்வதற்கும் குடும்பத்திற்கு நிதி ஆதரவு வழங்கப்படுகிறது. இது குழந்தைகள் பாதிக்கப்படாமல் இருப்பது, வீட்டை விட்டு வெளியேறுவது, குழந்தை திருமணத்திற்கு கட்டாயப்படுத்துவது, கட்டாயப்படுத்தி குழந்தை தொழிலாளராக ஆக்குதல் போன்றவற்றை தடுப்பதற்கான ஒரு முயற்சியாகும். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் ரூ.2,000/– வீதம் மூன்று ஆண்டுகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

2020–2021–ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 1,330 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக அரசு ரூ.3.19 கோடி செலவிட்டுள்ளது.

### 5.3 சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகள்

குற்றம் புரிந்ததாக தெரிவிக்கப்படும் நாளன்று பதினெட்டு வயது நிறைவடையாத, சட்டத்திற்கு முரணான செயல்களை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட குழந்தைகள் "சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகள்" எனக் கருதப்படுவர்.

### 5.3.1 இளைஞர் நீதிக் குழுமங்கள்

இளைஞர் நீதிக் குழுமமானது, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ன்படி அமைக்கப்பெற்ற சட்டமுறையான அமைப்பாகும். மேற்படி சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளில் சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளுக்கென வழங்கப்பட்டுள்ள அதிகார வரன்முறைக்குட்பட்டு குழந்தைகள் தொடர்பான

நேர்வுகளைத் தீர்வு செய்வதற்கான அமைப்பாகும். இளைஞர் நீதிக் குழுமமானது, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் (முதன்மை நீதித்துறை நடுவர்) மற்றும் இரண்டு சமூகப் பணி உறுப்பினர்கள் (ஒரு பெண் உறுப்பினர் உட்பட) ஆகியோரை உள்ளடக்கியது. இளைஞர் நீதிக் குழும நடைமுறைகள் ஒரு நீதிமன்ற நடைமுறைபோல் அல்லாமல் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் குழந்தை நேய அணுகுமுறைப்படி நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில் 32 இளைஞர் நீதிக் குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இக்குழுமங்களின் மூலம் 2020–2021ஆம் ஆண்டில் 1,094 வழக்குகள் கையாளப்பட்டுள்ளன.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.430.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.3.2 கூர்நோக்கு இல்லங்கள்

கூர்நோக்கு இல்லங்கள் என்பது சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள், இளைஞர் நீதிக் குழுமங்களின் முன்பு விசாரணை மேற்கொள்ளப்படும் காலங்களில் தற்காலிகமாக தங்கவைப்பதற்கான இடம் ஆகும். தமிழ்நாட்டில் தற்போது 9 கூர்நோக்கு இல்லங்கள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் உறையும் சிறார்களுக்கு அடிப்படைத் தேவைகளான தங்குமிடம், உணவு, உடை, படுக்கைகள் மற்றும் மருத்துவ வசதிகள் மட்டுமின்றி அவர்களின் குறுகிய கால மறுவாழ்வின் ஒரு பகுதியாக கல்வி, முறைசாராக் கல்வி, தொழிற்கல்வி ஆகியவற்றோடு ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதல் சேவையும் வழங்கப்படுகின்றன. தொடர் கண்காணிப்பை உறுதி செய்வதற்காக, அரசு அனைத்து கூர்நோக்கு இல்லங்களிலும் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை அமைத்துள்ளது. தற்போது

9 கூர்நோக்கு இல்லங்களில் 154 குழந்தைகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.647.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.3.3 சிறப்பு இல்லங்கள்

தவறிழைத்ததாக கருதப்படும் குழந்தை இளைஞர் நீதிக் குழுமத்தால் குற்றம் உறுதி செய்யப்பட்டவர்கள் என தீர்மானிக்கப்படும் நேர்வில் அவர்களின் நீண்டகால மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பிற்காக நிறுவன பராமரிப்பின் கீழ் தங்க வைப்பதற்கான இல்லங்களே சிறப்பு இல்லங்களாகும். இக்குழந்தைகள் மூன்றாண்டுகளுக்கு மிகாமல் இவ்வில்லங்களில் தங்க வைக்கப்படுவார்கள். இச்சிறப்பு இல்லங்களில் குழந்தைகளுக்கு கல்வி, தொழிற்கல்வி, ஆற்றுப்படுத்துதல் மற்றும் இணை பாடத்திட்டங்களுக்கான வசதிகள் வழங்கப்படுகின்றன. சிறுமியர்களுக்காக சென்னையில் ஓர் அரசினர் சிறப்பு

இல்லமும் சிறுவர்களுக்காக செங்கல்பட்டில் ஓர் அரசினர் சிறப்பு இல்லமும் என இரண்டு சிறப்பு இல்லங்கள் இயங்கி வருகின்றன. தற்போது 2 சிறப்பு இல்லங்களில் 28 குழந்தைகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.331.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.3.4 பாதுகாப்பு இடம்

பாதுகாப்பு இடம் என்பது 16 வயதிலிருந்து 18 வயதிற்கு இடைப்பட்ட குழந்தை ஒரு கொடுங்குற்றத்தைச் செய்ததாக கருதப்படுபவராகவோ அல்லது தண்டிக்கப்பட்ட குற்றவாளியாகவோ இருப்பவர் மற்றும் 18 வயதிற்குள் சட்டத்திற்கு முரணாக செயல்பட்ட 18 வயதை கடந்த ஒரு நபர் ஆகியோரை தங்க வைப்பதற்கான இடமாகும். இவர்கள் இளைஞர் நீதிக் குழுமம் அல்லது குழந்தைகள் நீதிமன்றத்தின் ஆணையின்படி 21 வயது நிறைவடையும் வரை பாதுகாப்பு இடத்தில் தங்க

வைக்கப்படுகின்றனர். தமிழ் நாட்டில் பாதுகாப்பு இடமானது வேலூரில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வில்லத்தில் தங்கியுள்ள காலங்களில் இவர்களுக்கு கல்வி, ஆற்றுப்படுத்துதல், நடத்தை மாற்றம் போன்றவை அடங்கிய சீர்திருத்த சேவைகள் வழங்கப்படுகின்றன. தற்போது இவ்வில்லத்தில் 30 குழந்தைகள்/நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**2021-2022-ஆம் ஆண்டு திருத்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.39.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.4 தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி (Juvenile Justice Fund)

இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-இன்படி குழந்தைகள் நலன் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள "தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி" ரூ.25.00 இலட்சம் குழும நிதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதி அரசின் திட்டங்களின் கீழ் வராத ஏனைய திட்டங்கள் மற்றும் அவசர தேவைகளை செயல்படுத்துவதற்கு

வழிவகை செய்கிறது. இந்நிதி குழந்தைகளுக்கு கல்வி, மருத்துவம், பயிற்சி, விளையாட்டு, சுயதொழிலுக்கான மூலப்பொருட்கள் அல்லது மூலதனம் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்கான ஏனைய பிற செயல்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இந்நிதியின் கீழ் 2020–2021ஆம் நிதியாண்டில், 7 குழந்தைகளுக்கு கடல்சார் பயிற்சிக்கான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 5.5 குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மையம்

குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மையம், குழந்தைகள் குறிப்பாக சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளிடையே காணப்படும் போதை மருந்து மற்றும் பொருட்களுக்கு அடிமையாதல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கிறது. குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மையம் ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டு, செங்கல்பட்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2020–2021ஆம் ஆண்டில் 82 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். தற்போது மதுரை மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மையம் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நிறுவப்பட்டு முறையே 15.07.2021 மற்றும் 01.08.2021 முதல் செயல்பட்டு வருகின்றன.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 41.51 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.6 நன்னடத்தை அமைப்பு (Probation System)

இளைஞர் நீதி அமைப்பின் நன்னடத்தை பணியானது, ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தைகளின் விரைவான மறுவாழ்வு மற்றும் குழந்தைகளை குடும்பத்தினருடன் ஒருங்கிணைக்க திறன்மிக்க கருவியாக செயல்படுகிறது. குழந்தை நலக் குழு மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்கள் முன் நிறுத்தப்படும் வழக்குகள் மீது சரியான முடிவு மேற்கொள்ள சமூக

விசாரணை அறிக்கை தயாரிப்பது நன்னடத்தை அலுவலர்கள் பணியாகும். ஒரு சில வழக்குகளில் சிறார்களை தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் குழந்தைகள் இல்லங்களிலிருந்து பயிற்சி பெற்று வெளியேறும் குழந்தைகளின் பிற்காப்பு நிலை அறிதல் போன்றவை நன்னடத்தை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமூகப் பாதுகாப்புத் துறையில், மாவட்டத்திற்கு ஒரு நன்னடத்தை அலுவலர் வீதம் 32 மாவட்டங்களில் நன்னடத்தை அலுவலர்கள் உள்ளனர். அதிகப்படியான வழக்குகள் காரணமாக, சென்னை மாவட்டத்தில் கூடுதலாக 3 நன்னடத்தை அலுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 5.7 சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்

**(அ) காணொலி காட்சி வசதி**

இளைஞர் நீதிக் குழுமத்தின் முன்பு முன்னிலைப்படுத்த வேண்டிய சட்டத்திற்கு முரன்பட்ட சிறார்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய ஏதுவாக

அரசானது காணொலிகாட்சி வசதியினை ஏற்படுத்தியுள்ளது. இவ்வசதியின் மூலம் சட்டத்திற்கு முரண்பட்ட செயலில் ஈடுபட்டதாக கருதப்படும் சிறார்களுக்கான இல்லங்களை சம்பந்தப்பட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுடன் இணைக்கப்பட்டு, இச்சிறார்கள் இளைஞர் நீதிக் குழுமத்தின் முன்பு நேரிடையாக முன்னிலைப்படுத்துவதை தவிர்த்து அவர்கள் காணொலி காட்சி மூலமாக முன்னிலைப்படுத்தப்படுகிறார்கள். தற்போது மாநிலத்திலுள்ள அனைத்து கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இடம் ஆகியவற்றிற்கிடையே காணொலி காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**(ஆ) குழந்தைகளுக்கான உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்துதல் சேவை**

சட்டத்திற்கு முரண்பட்ட செயலில் ஈடுபடும் சிறார்கள் இளைஞர் நீதிக் குழுமங்கள் மூலம் இளைஞர்

நீதி அமைப்பின் கீழ் வரும்பொழுது அவர்கள் உணர்வு ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் மற்றும் போதை பழக்கத்திலிருந்து விடுபட்டதால் ஏற்படும் உடனடி தாக்கத்தாலும் பாதிக்கப்படுகின்றனர். இவ்விதமான மன மற்றும் உளவியல் ரீதியான பாதிப்பிலிருந்து மீண்டெழ அரசு கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இடத்திலுள்ள குழந்தைகளுக்கு உளவியல் நிபுணர்கள் மூலமாக ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்கி வருகிறது. இத்திட்டம் அனைத்து அரசு குழந்தைகள் இல்லங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.58.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

### 5.8 பிற்காப்பு நிறுவனங்கள்

குடும்பம் மற்றும் பிற ஆதரவு இல்லாத நிலையில் உள்ள எந்த குழந்தையும் 18 வயது நிறைவடைந்து நிறுவனங்களிலிருந்து வெளியேறும் போது அவர்கள்

சமூகத்துடன் ஒன்றிணைக்கப்படும் காலம் வரை சுயமாக வாழும் நிலைக்கு தங்களை மாற்றிக் கொள்ள தேவையான இடைப்பட்ட காலத்தில் பிற்காப்பு சேவை வழங்க பிற்காப்பு நிறுவனங்கள் செயல்படுகின்றன. ஆண்களுக்காக செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆத்தூரில் 24 பயனாளிகளுடனும், மதுரையில் 14 பயனாளிகளுடனும் மற்றும் பெண்களுக்காக வேலூரில் 15 பயனாளிகளுடனும் அரசு பிற்காப்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் பிற்காப்பு நிறுவனங்களில் தங்கவைக்கப்படும் சிறார்களுக்கு மாதம் தலா ரூ.2,000/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் தற்போது பிற்காப்பு நிறுவனங்களில் 196 பயனாளிகள் உள்ளனர். மயிலாடுதுறையில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டத்தின் கீழ் வயது வந்த மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பிற்காப்பு நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தில் 190 குழந்தைகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**2020-2021-ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.214.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.9 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி

அரசினர் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் முறையான கல்வி வழங்குவதற்காக நிறுவனங்களின் வளாகத்திலேயே பள்ளிக் கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் செயல்படுகின்றன. அவ்வாறு, வளாகத்திலேயே பள்ளிகளற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் வரவேற்பு பிரிவுகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்படும் குழந்தைகளுக்கு முறைசாராக்கல்வி மற்றும் தொழிற்கல்வி அளிக்கப்பட்டு வருகின்றன.

நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் திறன்களை மேம்படுத்த தையல், புத்தகம் கட்டுதல், திரை அச்சடித்தல், அடிப்படை கணினி பயிற்சி, பேக்கரி பொருட்கள் தயாரித்தல் போன்ற குறுகியகால தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சியின் மூலம் 878 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் தையல் இயந்திரம் இயக்குபவர், எலக்ட்ரீஷியன் உதவியாளர், பிளம்பர் உதவியாளர், குளிர்சாதனப்பெட்டி பழுதுபார்த்தல், இருசக்கர வாகன பழுதுபார்த்தல் ஆகிய குறுகிய காலப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியின் மூலம் 291 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.26.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.10 குழந்தைகளுக்கான கட்டணமில்லா தொலைபேசி *1098*

“பத்து ஒன்பது எட்டு” என்பது இடர்பாடான சூழலில் உள்ள குழந்தைகளுக்கான 24 மணிநேர தேசிய அளவிலான இலவச தொலைபேசி சேவையாகும். நெருக்கடி நிலையில் உள்ள குழந்தைகள் அல்லது இக்குழந்தைகளை காணும் எந்தவொரு நபரும் இக்குழந்தைகளை நெருக்கடியிலிருந்து உடனடியாக மீட்டல் அல்லது வழிகாட்டுதலுக்காக 1098ஐ அழைக்கலாம். இந்திய அரசின் நிதியுதவி மூலம் சைல்டுலைன் இந்தியா பவுண்டேசன் கட்டுப்பாட்டின்கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் சைல்ட்லைன் சேவை செயல்படுத்தப்படுகின்றன. 2020–2021ஆம் ஆண்டில் இச்சேவையின்கீழ் தமிழ்நாட்டில் 4,39,080 தொலைபேசி அழைப்புகள் பெறப்பட்டுள்ளன.

## 5.11 குழந்தை பாதுகாப்புச் சேவைகள்

"மிஷன் வத்சல்யா" என்ற ஒரு குடையின்கீழ் "குழந்தை பாதுகாப்புச் சேவைகள்" திட்டத்தை மாநில மற்றும் மாவட்ட அளவில் குழந்தைகளுக்கு சேவைகள் வழங்கும் போதுமான அமைப்புகளை ஏற்படுத்தி செயல்படுத்தி வருவதில் தமிழ்நாடு அரசு முன்னோடி மாநிலமாக திகிழ்கிறது.

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ஐ செயல்படுத்திட இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டம், குழந்தை உரிமைகள் மீறலை தடுப்பதை வலுப்படுத்துவதுடன், குழந்தை பாதுகாப்புக்கான உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காகவும் நிதியுதவி வழங்குகிறது. இத்திட்டம் குழந்தை பாதுகாப்பு சேவைகளை பரந்த அளவிலும் சிறந்த தரத்திலும் அணுகுவதற்கு உதவுகிறது. இத்திட்டத்தின் மூலம் அரசு குழந்தை பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்தி, குழந்தைகளின்

உரிமைகளை மேம்படுத்துவதை தொடர்ச்சியாக மேற்கொள்கிறது.

### 5.11.1 குழந்தை பாதுகாப்புச் சேவைகள் கீழ் செயல்படும் சேவை அளிக்கக் கூடிய கட்டமைப்புகள்

குழந்தை பாதுகாப்புச் சேவைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்த, கீழ்க்காணும் சேவை அளிக்கக் கூடிய கட்டமைப்புகளை அரசு உருவாக்கியுள்ளது:–

1. மாநிலக் குழந்தை பாதுகாப்புச் சங்கம்
2. மாவட்டக் குழந்தை பாதுகாப்பு அலகுகள்.
3. மாநிலத் தத்தெடுப்பு வள முகமை.

குழந்தை பாதுகாப்பிற்கான பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒருங்கிணைந்த சேவையினை இந்த சேவை வழங்கல் கட்டமைப்பானது சுகாதாரம், கல்வி, நீதித்துறை, காவல்துறை, தொழிலாளர் மற்றும் திறன்மேம்பாட்டு துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் ஒரு இடைமுகமாக செயல்பட்டும்,

பல்வேறு நிலைகளில் பங்குதாரர்களுக்கு பயிற்சியும் அளிக்கிறது.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2760.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.12 இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–இன் கீழ் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை பதிவு செய்தல்

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–இன் கீழ் அனைத்து குழந்தை பராமரிப்பு நிறுவனங்களும் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படாத குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் மீது சட்ட ரீதியான தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் பதிவு செய்யப்படுவதன் மூலம் அந்நிறுவனம் செயல்படுவதை முறைப்படுத்தவும் அவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்து

கண்காணிக்க உதவுவதோடு குறைந்தபட்ச வசதிகள் கொண்டதாக இருப்பதை உறுதி செய்கிறது.

தற்போது 1,103 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், 2014 முதல் மார்ச், 2021 வரை 1,013 நிறுவனங்கள் குறைந்தபட்ச தரம்/வசதிகள் இல்லாத காரணத்தினால் மூடப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டின் தமிழ்நாடு இளைஞர் நீதி விதிகளின் கீழ் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தரம்/வசதிகளுக்கான வரையறையின்படி, தங்குமிடம், கட்டடத்தின் உறுதித்தன்மை, கட்டட உரிமம், தீயணைப்பு வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் போன்ற வசதிகளை பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. சுமார் 42,806 குழந்தைகள் பதிவு செய்யப்பட்ட இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## 5.13 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் ஆய்வு மற்றும் கண்காணிப்பு

### 5.13.1 ஆய்வு

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ன், கீழ் மாநிலத்தில் செயல்படும் அனைத்து குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை திறன்பட ஆய்வு செய்யவும் நிர்ணயிக்கப்பட்ட தரத்தினை உறுதி செய்யவும் மாநில அளவிலான ஆய்வுக்குழு மற்றும் மாவட்ட அளவிலான ஆய்வுக் குழுக்களை அரசு அமைத்துள்ளது. மேற்கண்ட ஆய்வு அமைப்புகளுடன், இளைஞர் நீதிக் குழுமங்கள் மற்றும் குழந்தை நலக் குழுக்கள் ஆகியவை தங்களது வரம்பிற்குள் வரும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை ஆய்வு செய்து வருகின்றன. மாநில அளவிலான ஆய்வுக் குழு, சமூகப் பாதுகாப்பு இயக்குநர்/செயலர், மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம் அவர்களை தலைவராக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான ஆய்வுக்

குழுக்கள் மாவட்ட ஆட்சியர்களை தலைவர்களாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பே அரசின் முதன்மையான நோக்கமாக உள்ளது. குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டத்தின் கீழ் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு பாதுகாப்பினை உறுதிசெய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. மாநிலத்தில் 1,103 நிறுவனங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் காவல் துறை சரிப்பார்ப்புக்கு உட்படுத்தப்பட்டு, பணியாளர்கள் மீது எவ்விதமான குற்ற நடவடிக்கையும் இல்லை என்பதை உறுதி செய்யப்பட்டு வருகிறது. இதுவரை காவல்துறை சரிபார்ப்பு சான்றிதழ் 13,854 நபர்களுக்கு பெறப்பட்டுள்ளது. மேலும், 422 பணியாளர்கள் காவல்துறை சரிபார்ப்பு சான்றிதழுக்காக விண்ணப்பித்துள்ளனர். இயற்கை பேரிடர், விபத்து

போன்ற எதிர்பாரா நிகழ்வுகளை திறம்பட கையாளும் விதமாக இதுவரை 672 பேரிடர் மேலாண்மை பயிற்சிகள் குழந்தை பராமரிப்பு நிறுவன பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொற்றுநோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கையாக காலமுறைப்படி நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதன் இரசாயன மற்றும் நுண்ணுயிர் ஆய்வானது அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை 1,039 மாதிரிகள் ஆய்வுக்காக சேகரிக்கப்பட்டுள்ளது. தமிழக முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின்கீழ் 3,213 குழந்தைகள் பயனாளிகளாக கொண்டு வரப்பட்டுள்ளனர்.

### 5.13.2 குழந்தை பின்தொடர் முறைமை

ஒன்றிய அரசு தேசிய தகவல் மையத்தின் மூலம் காணாமல் போன குழந்தைகள் மற்றும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளையும் கண்காணிக்கக்கூடிய (www.trackthemissingchild.gov.in)

இணைய முகப்பினை உருவாக்கியுள்ளது. குழந்தை பின்தொடர் முறைமை, காணாமல் போன குழந்தையையும், கண்டெடுக்கப்பட்ட குழந்தையையும் ஒப்பிட்டு பார்க்க வசதி செய்து தருகிறது. மேலும், இம்முறையின் மூலம் இக்குழந்தைகளின் தேடல் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிக்க உதவுகிறது. இவ்வாறு இத்திட்டத்தின் மூலம் சரியான மேற்பார்வையும் குழந்தை நலனும் இணைய முகப்பு மூலம் உறுதிப்படுத்த முடிகிறது. இத்தேசிய இணைய முகப்பு மூலம் அனைத்து காவல் நிலையங்கள், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள், குழந்தை நலக் குழுக்கள், இளைஞர் நீதிக் குழுமங்கள் மற்றும் மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் இயங்கி வரும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

### 5.13.3 தனிநபர் பராமரிப்பு திட்டம்

தனிநபர் பராமரிப்பு திட்டம் என்பது குழந்தைகளின் முன்னேற்றம் குறித்து மதிப்பீடு

செய்வதற்கு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு தேவையான குறுக்கீடுகளுக்கான யுக்திகளை வடிவமைத்தல், குழந்தைகளின் மறுவாழ்வு, குடும்பத்துடன் சேர்த்தல் மற்றும் குழந்தைகளை சமூகத்துடன் ஒருங்கிணைத்தல் குறித்து திறம்பட திட்டமிடுதல் ஆகியவற்றை குழந்தை பராமரிப்பு நிறுவனங்களால் அனைத்து குழந்தைகளுக்கும் அவ்வப்போது தயாரிக்கப்பட வேண்டிய முக்கிய ஆவணமாகும். மாநிலத்தில் செயல்பட்டு வரும் குழந்தை பராமரிப்பு நிறுனங்களில் உள்ள பணியாளர்களுக்கு தரமான தனிநபர் பராமரிப்பு திட்டத்தை தயாரிக்க காலமுறை பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

### 5.13.4 கண்காணிப்பு அமைப்புகள்

தமிழ்நாடு அரசு, குழந்தை பாதுகாப்பினை உறுதி செய்யவும், குழந்தை பாதுகாப்பு சேவைகளுக்கெனவும் ஊரகப் பகுதிகள் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில், புதிதாக குழந்தை பாதுகாப்பு குழுக்களை அமைத்துள்ளது.

### 5.13.4.1 ஊரகப் பகுதிகளிலுள்ள குழந்தை பாதுகாப்பு குழுக்கள்:–

1. கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு (Village Level Child Protection Committee)
2. வட்டார அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு (Block Level Child Protection Committee)
3. மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு (District Level Child Protection Committee)

### 5.13.4.2 நகர்ப்புற பகுதிகளிலுள்ள குழந்தை பாதுகாப்பு குழுக்கள்:–

1. நகர பஞ்சாயத்து அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு (Child Protection Committee at Town Panchayat Level )
2. நகராட்சி அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு (Child Protection Committee at Municipal Level)
3. மாநகராட்சி மண்டல அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு (Child Protection Committee at Zonal level in Municipal Corporation)

இக்குழுக்களானது, குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர், குழந்தை தொழிலுக்காக இடம் பெயர்தல், சுரண்டப்படுதல், சட்டத்திற்கு புறம்பாக குழந்தைகளை தத்து வழங்குதல், குழந்தை பாதுகாப்பு

ஆகியவற்றைப் பற்றி கலந்தாலோசித்து அதுதொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல், குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்களைத் தடுத்தல், பெண் சிசுக் கொலையைக் குறைத்து பெண் குழந்தை பாலின விகிதத்தை உயர்த்துதல் போன்ற குழந்தை பாதுகாப்பு சேவை பணிகளை மேற்கொள்கின்றன.

## 5.14 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆதார் எண் இணைப்பு, வங்கி கணக்கு துவங்குதல்

குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள 48,427 குழந்தைகளுக்கு ஆதார் எண் பெறப்பட்டுள்ளது. 299 குழந்தைகளுக்கு (மார்ச் 2021 வரை) ஆதார் எண்ணுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தில் உள்ள குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள 59,034 குழந்தைகளில், இதுவரை 41,999 குழந்தைகளுக்கு (மார்ச் 2021 வரை) வங்கிகளில் சேமிப்பு கணக்கு துவங்கப்பட்டுள்ளது.

## 5.15 ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956, பெண்களை வணிக நோக்கிலான பாலியல் சுரண்டலுக்கும், கடத்தலுக்கும் உள்ளாக்குவதை தடுப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. இச்சட்டம், கடத்தல்காரர்கள், தீங்கிழைப்பவர்கள் மற்றும் இடைத்தரகர்களை நீதிமன்றத்தின் முன் கொண்டு வருவதோடு பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு வழங்க நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்குகிறது.

### 5.15.1 மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள்

ஒழுக்க நெறி அச்சுறுத்தலுக்குள்ளான/ பாதிக்கப்பட்ட பெண்கள் மகளிர் காப்பகங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்கள் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956–இன்கீழ் நீதிமன்ற ஆணையின்படி இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வில்லங்களில் தங்கியுள்ள மகளிரின் மறுவாழ்விற்கென பராமரிப்பு, மருத்துவ சிகிச்சை,

உளவியல் ஆலோசனை மற்றும் தொழிற்பயிற்சிகள் ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன. "பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரண நிதியிலிருந்து" ரூ.10,000 நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956–ன் கீழ் மாநில அரசால் சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பாதிப்பப்பட்ட பெண்களின் மறுவாழ்விற்காக மகளிர் காப்பகங்கள்/ பாதுகாப்பு இல்லங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட பெண்களின் வழக்குகளை விரைந்து தீர்வு செய்யவும் அவர்களின் கண்ணியத்தை காத்திடவும், நீதிமன்றத்தின் நேரடி விசாரணைக்கு உட்படுத்தப்படுவதற்கு பதிலாக, காணொலி காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ள மயிலாப்பூர், அரசினர் மகளிர் காப்பகத்திற்கும் சைதாப்பேட்டை பெருநகர நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையே

ரூ.20.00 இலட்சம் செலவில் காணொலி காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**2021–2022– ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.476.37 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.15.2 'உஜ்ஜவாலா' திட்டம்

பெண்கள் மற்றும் குழந்தைகள் வணிகரீதியான பாலியல் தொழிலுக்காக கடத்தப்படுவது, மனித உரிமைகளுக்கு எதிரான குற்றமாகும். பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் முறையான மறுவாழ்வை உறுதி செய்வதற்காக ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் 'உஜ்ஜவாலா' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வணிக ரீதியான பாலியல் சுரண்டலை தடுக்கவும், கடத்தப்பட்டவர்களை மீட்டு, மறுவாழ்வு அளித்து சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் வழிவகை செய்வதற்குமான ஒரு விரிவான திட்டமாகும்.

தமிழ்நாட்டில் 5 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2020–2021–ஆம் ஆண்டில் 243 பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.111.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.16 போதை தடுப்புத் திட்டம்

தமிழக அரசு, ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் போதை தடுப்பு திட்டத்தை மாநிலத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த மறுவாழ்வு மற்றும் சிகிச்சை மையங்களில் குடி மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களை உள்நோயாளியாக அனுமதித்து, 21 நாட்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது மாநிலத்தில் 27 மையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன.

2020–2021–ஆம் ஆண்டில் 4,836 குடி மற்றும் போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு, போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்கு ஏற்படும் பாதகமான விளைவுகளை குறைப்பதற்கு, அதன் விளைவு குறித்து கற்பிப்பதற்கு, போதைத் தடுப்பு மற்றும் மறுவாழ்வு போன்ற பல்நோக்கு அணுகுமுறையை கொண்ட, போதைப் பொருள் தேவை குறைப்புக்கான தேசிய செயல் திட்டம் (National Action Plan for Drug Demand Reduction) என்ற புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத்தேசிய செயல்திட்டம் (2018–2023) போதைத் தடுப்பு கல்வி, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திறன் மேம்பாடு, குறிப்பிடத்தக்க இடையீட்டு திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய போதை தேவை குறைப்பு செயல்திட்டத்தை செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்த ஒன்றிய அரசு இதுவரை ரூ.4.34 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 5.17 தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்

குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005, பிரிவு 17(1)–ன் கீழ் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆணையத்தின் முக்கிய நோக்கமே தற்சமயம் அமலில் இருக்கும் குழந்தைகள் சார்ந்த பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்தலாகும். இந்த ஆணையம் ஒரு தலைவர் மற்றும் 6 உறுப்பினர்களைக் கொண்டு 18.01.2013 முதல் செயல்பட்டு வருகிறது.

**2021–2022– ஆம் ஆண்டு திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.75.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.18 குழந்தை பாதுகாப்பிற்காக பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு

சமூகப் பாதுகாப்புத் துறை, இதர அரசு துறைகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, இடர்பாடான சூழ்நிலையால் துன்பப்படும் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் குழந்தைகளை சமூகத்துடன் ஒருங்கிணைக்கின்றது.

சமூகப் பாதுகாப்புத் துறை, சமூக நலன், கல்வித் துறை, தொழிலாளர் நலன், வருவாய் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, மருத்துவம் மற்றும் சுகாதாரம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், சமக்ரா சிக்ஷா அபியான், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், ரயில்வே காவல்துறை, சைல்டு லைன், காவல்துறை, நீதித்துறை ஆகியவற்றுடன் திறம்பட ஒருங்கிணைந்து அனைத்து குழந்தைகளின் பாதுகாப்பையும், பராமரிப்பையும் உறுதி செய்கிறது.

மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு, மாவட்ட அளவிலான, காலமுறை கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதில் நீதித்துறை உட்பட அனைத்து பங்களிப்பாளர்களும் கலந்து கொள்கின்றனர்.

குழந்தைத் திருமணம், குழந்தை கடத்தல், குழந்தைகளை பிச்சையெடுக்க பயன்படுத்துதல், உடல் மற்றும் மனரீதியாக தீங்கிழைத்தல் மற்றும் குழந்தை தொழிலாளர் ஆகியோரை கண்டறிந்து பொருத்தமான மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில், அரசுத் துறை மற்றும் அரசு நிறுவனங்களின் உதவியுடன் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

*****

## அத்தியாயம்–6

# நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் (SDG)

உலக நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து வருங்காலத்தில் சிறந்த மற்றும் நிலையான எதிர்காலம் பெற எட்டவேண்டிய இலக்குகளை தீர்மானித்தன. அவை ஐக்கிய நாடுகள் பொது அவையில் 193 நாடுகளால் 2030 வளர்ச்சிக்கான நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவை 17 இலக்குகளும் 169 குறிக்கோள்களும் உள்ளடக்கியவை ஆகும்.

இந்தியாவில் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை பின்பற்றுவதை நிதி ஆயோக் என்னும் மத்திய அமைப்பு கண்காணிக்கிறது. தமிழ்நாட்டில் அரசு துறைகள் செயல்படுத்தி வரும் திட்டங்கள் மற்றும் சட்டங்கள் மூலம் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதை மாநில திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கண்காணித்து வருகிறது. இலக்கு

வாரியான பணிக்குழுக்கள் அமைத்தல், மாநில, மாவட்ட, வட்டார அளவில் இலக்குகள் நிர்ணயித்து கண்காணித்தல், அரசு துறைகள் மற்றும் இதர நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பணிபுரிந்து இலக்குகளை எய்திட இத்துறை தொடர் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி வழிகாட்டியாக செயல்படுகிறது.

"பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரமளித்தல்" எனும் இலக்கு 5–க்கான செயல்பாட்டுத் துறையான சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் மற்றும் சட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**குறியீடு 5.1 :**

**மகளிர் மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிரான பலவகையான பாகுபாடுகளையும் அனைத்து இடங்களிலும் முடிவுக்கு கொண்டு வந்திட** தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பெண் குழந்தைகளுக்கு எதிரான பாகுபாட்டின் வெளிப்பாடாக நடைபெறும் பெண் சிசு கொலைகளை தடுத்திடும் வகையில் தொட்டில் குழந்தை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பெண் குழந்தைகளை பாதுகாத்து அவர்களின் உரிமைகளை நிலை நிறுத்திடும் வகையிலும், பெண்குழந்தைகள் பொருளாதார ரீதியில் பயன்பெறும் வகையிலும், அரசால் நேரடியாக நீண்ட கால வைப்பீடு திட்டமாக முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உயர்ந்து வரும் பாலின வேறுபாட்டை களைந்திடவும், பெண் குழந்தைகளின் பிறப்பு, கல்வி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்திட, ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**குறியீடு 5.2 :**

**பொது மற்றும் தனியார் இடங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் மற்றும்**

**கடத்தப்படுதல் போன்ற பிற வகையான சுரண்டல்கள் உள்ளிட்ட அனைத்து விதமான வன்முறைகளை அகற்றிட** குழந்தைகளுக்கான உதவி எண் (1098) மற்றும் பெண்களுக்கான உதவி எண் (181) ஆகியவை இத்துறையில் செயல்பட்டு வருகின்றன.

அனைத்து மாவட்டங்களிலும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் 'சகி' என்னும் ஒரு நிறுத்த மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

பெண்களின் உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இத்துறை பல்வேறு சமூக சட்டங்களை செயல்படுத்துகிறது.

**குறியீடு 5.3:**

**குழந்தை திருமணம், இளம் வயது திருமணம், கட்டாய திருமணம், பெண் உறுப்பு சிதைத்தல் உள்ளிட்ட கொடிய பழக்கங்களை ஒழித்திட** இத்துறை யுனிசெப் மற்றும் மாநில திட்டக்குழுவுடன் இணைந்து வளரிளம் பெண்களின் மேம்பாட்டிற்காகவும், குழந்தை

திருமணம், இளவயது கர்பம் ஆகியவற்றை தடுக்கவும், பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, நிறுவன அமைப்புகளை வலுப்படுத்தி, பாதிக்கப்பட்ட பிரிவினர் எளிதில் அணுகும் வகையில் பொறுப்புணர்வுடன் செயல்படவும் இத்துறை செயல்பாடுகள் மேற்கொண்டு வருகிறது.

**குறியீடு 5.4:**

**சமூகப் பாதுகாப்பு, பொது சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வழிவகைகள் மூலம் ஊதியமற்ற பராமரிப்பு மற்றும் குடும்ப பணிகளுக்கு மதிப்பு மற்றும் அங்கீகாரம் அளித்தல் மற்றும் நாட்டிற்கு ஏற்ற வகையில் வீட்டிலும், குடும்பத்திலும் பொறுப்புகளை பகிர்ந்து கொள்வதை ஊக்குவித்தல்.**

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள், திருநங்கைகள் உள்ளிட்ட சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரை பாதுகாத்திட, வருவாய் நிர்வாக துறையின்

வாயிலாக, பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

**குறியீடு 5.5:**

**அரசியல், பொருளாதாரம் மற்றும் பொது வாழ்வில் பெண்களின் முழுமையான, பயனுள்ள பங்கேற்பு மற்றும் அனைத்து நிலைகளிலும் முடிவெடுக்கும் தலைமைக்கும் சம வாய்ப்புகள் அளித்தல்**

பாலின வரவு செலவுத் திட்டம் மூலம் பெண்களுக்கான திட்டம், செயலாக்கம், மதிப்பீடு, ஒதுக்கீடு மற்றும் கொள்கைகள் ஆகியவற்றை பல்வேறு கட்டங்களில் ஆய்வு செய்து பாலின முன்னேற்றம் பெற வழிவகை செய்யப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, வேலைவாய்ப்பில் 30% இட ஒதுக்கீடு, பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள், பெண்களின்

பொருளாதார உயர்வுக்கான திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

குறியீடு 5.6:

**மக்கட்தொகை மற்றும் வளர்ச்சி குறித்த பன்னாட்டு மாநாட்டிலும், செயல்பாட்டிற்கான பீஜிங் மாநாட்டிலும் ஒப்புக் கொண்ட நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு, பாலியல் இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் உரிமைகளை அனைவருக்கும் உறுதிப்படுத்துதல் மற்றும் மறுசீராய்வு மாநாடுகள் மூலம் நடவடிக்கைகளை கண்காணித்தல்**

மேற்கண்ட குறியீட்டை அடைந்திடவும், ஆரோக்கியமான சமுதாயம் உருவாக்கிடவும், கர்ப்ப காலத்தில் தொடர் கண்காணிப்பு, ஊட்டச்சத்து பெட்டகம், வருவாய் இழப்பினை ஈடு செய்திட மகப்பேறு நிதியுதவித் திட்டம், போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

வறுமை மற்றும் பசிகொடுமையை ஒழித்திடும் நோக்கமாக கொண்ட நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்கு 1 மற்றும் 2 ஆகியவற்றிற்கு 43,174 பள்ளிகளில் 5–15 வயதிற்குட்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி இத்துறை பங்காற்றி வருகிறது. 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்தவும், குழந்தைகளின் முன்பருவ கல்வி மற்றும் சுகாதார தேவைகளை நிறைவேற்றிடவும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இலக்கு 5 மற்றும் இதர தொடர்புடைய இலக்குகளின் நோக்கங்களை எய்திட, இதர துறைகளுடன் இணைந்து, பல்வேறு உத்திகளை கையாண்டு சமுதாயத்தில் பாலின சமன்பாடு பெற்றிட

இத்துறை தொடர்ந்து முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடைய துறையின் திட்டங்கள் மற்றும் சேவைகளை பொது மக்கள் முழு அளவில் பயன்படுத்திட அனைத்து நிலைகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம், நலிவடைந்த பிரிவினருடன் அனைத்து மக்களும் வளர்ச்சி, அமைதி, வளம் மற்றும் பாதுகாப்பு பெற்றிட உறுதி செய்யப்படுகிறது.

*****

## அத்தியாயம்–7

# சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு தேசிய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரான மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதை கடந்த ஆதரவற்ற மற்றும் திருமணமாகாத ஏழைப் பெண்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தற்போது அனைத்து சமூக பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக ரூ.1000/– வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் பெரும்பான்மையான மக்களுக்கு குறிப்பாக முதியோர்களுக்கும், மாற்றுத் திறனுடையவர்களுக்கும் சென்றடைய ஏதுவாக இத்திட்டத்திற்கான விதிமுறைகள் வெகுவாக தளர்த்தப்பட்டுள்ளது.

2021–22 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியத் திட்டங்களுக்கு ரூ.4,807.56 கோடியாக நிதி ஒதுக்கீடு உயர்த்தப்பட்டுள்ளது. 25.08.2021 அன்று உள்ள பதிவுகளின்படி 34,12,916 பயனாளிகள் கீழ்காணும் திட்டங்களின் மூலம் பயன் பெற்று வருகின்றனர்.

| வ. எண் | திட்டங்களின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதியத் தேசிய திட்டம் | 14,63,750 |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியத் தேசிய திட்டம் | 63,127 |
| 3. | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதியத் தேசிய திட்டம் | 5,84,221 |
| 4. | மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 3,28,546 |
| 5. | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | 5,26,613 |
| 6. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதியோர் ஓய்வூதியம் | 2,97,327 |

தொடர்ச்சி..

| வ. எண் | திட்டங்களின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 7. | ஆதரவற்ற /கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | 1,19,941 |
| 8. | 50 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 24,874 |
| 9. | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் | 4,517 |
| | **மொத்தம்** | **34,12,916** |

## சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வயது வரம்பு | மத்திய அரசின் பங்கீடு ரூ. | மாநில அரசின் பங்கீடு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 60 வயது முதல் 79 வயது வரை | 200/- | 800/- |
| | | 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | 500/- | 500/- |

## தொடர்ச்சி..

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 18 வயது முதல் 79 வயது வரை | 300/- | 700/- |
| 3 | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 40 வயது முதல் 79 வயது வரை | 300/- | 700/- |
| 4 | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | -- | 1000/- |
| 5 | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | -- | 1000/- |
| 6 | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம் – முதியோர் ஓய்வூதியம் | 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | -- | 1000/- |
| 7 | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதிய திட்டம் | 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | -- | 1000/- |
| 8 | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | -- | 1000/- |
| 9 | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் | மேற்கண்ட ஓய்வூதிய திட்டங்களில் எந்த திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறதோ அதற்கான வயது வரம்பு பொருந்தும். | மேற்கண்ட ஓய்வூதிய திட்டங்களில் எந்த திட்டத்தின் கீழ் வழங்கப் -படுகிறதோ அதற்குரிய நிதி பங்கீடு வழங்கப்படும். | |

தேசிய சமூக உதவித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மூன்று ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெற கீழ்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **தகுதி / நிபந்தனைகள்** |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்<br>வயது – 60 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்<br>வயது – 18 முதல் 79 வரை ஊனம் நிலை – 80 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |
| 3. | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்.<br>வயது– 40 முதல் 79 வரை |

தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களில் பயன்பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதி / நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | தனியார் மற்றும் சுயவேலையில் இருப்பின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>வயது – 18 மற்றும் அதற்கு மேல்<br>ஊனம் நிலை – 40சதவிகிதம் மற்றும் அதற்கு மேல். |
| 2. | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். வயது – 18 மற்றும் அதற்கு மேல் அசையா சொத்து ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (பயனாளிக்கு அரசால் வழங்கப்பட்டுள்ள இலவச வீடு அசையா சொத்து மதிப்பீடு செய்வதில் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது) |
| 3. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம். | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வயது – 60 மற்றும் அதற்கு மேல்<br>நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும்.<br>அசையா சொத்து ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் |
| 4. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதிய திட்டம் | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வயது – 30 மற்றும் அதற்கு மேல்<br>சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அசையா சொத்து ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் |
| 5. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | ஆதரவற்ற திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும்.<br>வயது – 50 மற்றும் அதற்கு மேல்<br>அசையா சொத்து ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் |

**இதர பயன்கள்**

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளின் போது, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் 34.13 இலட்சம் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது.

**ஓய்வூதியதாரர்களுக்கு அரிசி வழங்குதல் திட்டம்**

மேற்கண்ட திட்டங்களின் கீழ் உள்ள பயனாளிகளுக்கு அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் 4 கிலோ சன்ன ரக அரிசியும், அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ சன்ன ரக அரிசியும் வழங்கப்படுகிறது.

**சமூக பாதுகாப்பு திட்டங்கள் மூலம் வழங்கப்படும் ஓய்வூதியத்தை பெற இணையதளம் மூலம் விண்ணப்பித்தல்**

மார்ச் 2020 முதல், வருவாய் துறை சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ் அரசு நலத்திட்டங்களை

பெற எளிதான ஒருபக்க படிவத்தில் இணையவழி மூலமாகவும், இ–சேவை மையத்தின் மூலமாகவும் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளரால் சரிபார்க்கப்பட்டு வருமான சான்று, இருப்பிடச் சான்று வழங்கப்படுவதை போல தகுதியின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்க உரிய அலுவலர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பப்படும். தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) இதனை சரிபார்த்து ஓய்வூதியம் வழங்குவார். இந்நடைமுறை முறையான பொறுப்புடைமை, வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதோடு நிலுவையில் உள்ள மனுக்களை உயர் அலுவலர்கள் கண்காணிக்க ஏதுவாயிருப்பதன் மூலம் அரசின் ஆட்சித்திறன் மேம்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**பி. கீதா ஜீவன்**
**சமூக நலன் – மகளிர்**
**உரிமைத் துறை அமைச்சர்**

# இணைப்பு – 1

## சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை கடைபிடிக்கப்படும் முக்கியமான நாட்களின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஜனவரி 24 | தேசிய பெண் குழந்தைகள் தினம் |
| 2. | பிப்ரவரி 24 | மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினம் |
| 3. | மார்ச் 8 | சர்வதேச மகளிர் தினம் |
| 4. | ஏப்ரல் 15 | திருநங்கையர் தினம் |
| 5. | ஜூன் 12 | குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் |
| 6. | ஜூன் 15 | முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம் |
| 7. | அக்டோபர் 1 | சர்வதேச முதியோர் தினம் |
| 8. | நவம்பர் 14 | குழந்தைகள் தினம் |
| 9. | நவம்பர் 20 | சர்வதேச குழந்தை உரிமைகள் தினம் |
| 10. | நவம்பர் 26 | வரதட்சணை எதிர்ப்பு தினம் |

# இணைப்பு – 2

## திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு – 2021–2022

## மானியக் கோரிக்கை எண்.45
## சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

2021–2022–ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு **ரூ.5,77,149.24 இலட்சம்.**

| 2021–2022 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|
| கணக்குத் தலைப்பு | | (ரூ.இலட்சத்தில்) |
| வருவாய் பகுதி | | ஒதுக்கீடு |
| 2059 | பொதுப் பணிகள் | 262.56 |
| 2225 | சமூக நல இயக்ககம் | 12.72 |
| 2235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 18,587.96 |
| 2235 | சமூக நல இயக்ககம் | 1,136,27.77 |
| 2235 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 14,881.39 |
| 2236 | தலைமைச் செயலகம் | 24.48 |
| 2236 | சமூக நல இயக்ககம் | 1,87,874.32 |
| 2236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 2,33,919.37 |
| 2251 | தலைமைச் செயலகம் | 607.73 |
| 2551 | சமூக நல இயக்ககம் | -- |
| | **வருவாய் பகுதி மொத்தம்** | **5,69,798.30** |

| மூலதனப் பகுதி | | |
|---|---|---|
| 4235 | சமூக நல இயக்ககம் | 717.01 |
| 4235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 1,760.90 |
| 4236 | சமூக நல இயக்ககம் | 0.02 |
| 4236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 4,848.00 |
| | **மூலதனப்பகுதி மொத்தம்** | **7,325.93** |
| | **கடன் பகுதி** | |
| 7610 | அரசு பணியாளர்களுக்கான கடன்கள் | 25.01 |
| | **கடன் பகுதி மொத்தம்** | **25.01** |
| | **முழு மொத்தம்** | **5,77,149.24** |

## முழு மொத்தம்

| | | |
|---|---|---|
| வருவாய் பகுதி | : | ரூ. 5,69,798.30 இலட்சம் |
| மூலதனப் பகுதி | : | ரூ. 7,325.93 இலட்சம் |
| கடன் பகுதி | : | ரூ. 25.01 இலட்சம் |
| மொத்தம் | : | **ரூ. 5,77,149.24 இலட்சம் அல்லது ரூ.5,771.49கோடி** |

2021-2022-ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண்.41-ன் கீழ் ரூ.4,807.56 கோடி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*******

# குழந்தைகள் உதவி எண்

# 1098

# மகளிர் உதவி எண்

# 181

# முதியோர் உதவி எண்

# 14567




**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கொரோனா நோய் தொற்று நிவாரண நடவடிக்கை குறித்து தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்தாலோசனை கூட்டம் (19.05.2021)**




**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் (28.07.2021)**



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு திருமண நிதியுதவியுடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் நிகழ்ச்சி (11.06.2021)



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16.06.2021 அன்று கொரோனாவால் பெற்றோரை இழந்து தவிக்கும் குழந்தைகளுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து குழந்தையின் பாதுகாவலர் ஒருவருக்கு ரூ.5.00 இலட்சம் நிலையான வைப்புத் தொகை இரசீது வழங்குதல்



கொரோனாவால் பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

16.06.2021 அன்று நிவாரண உதவித் தொகை ரூ.3.00 இலட்சம் வழங்கினார்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு 16.06.2021 அன்று கொரோனா நிவாரண உதவித் தொகை வழங்கி ஆறுதல் அளித்தல்



திருநங்கைகளுக்கு கோவிட்-19 முதற்கட்ட நிவாரண நிதியுதவித் தொகை ரூ.2,000/- மற்றும் அடையாள அட்டை வழங்குதல் (24.06.2021)




**மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களால் தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனாவால் பெற்றோரை இழந்து தவிக்கும் குழந்தைக்கு நிவாரண உதவித் தொகையாக ரூ.5.00 இலட்சம் வழங்குதல்**




**மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்களால்**

**சேலம் மாவட்டத்தில் முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட பயனாளிக்கு**

**முதிர்வுத் தொகை வழங்குதல் (05.07.2021)**




மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களால்
காஞ்சிபுரம் மாவட்டத்தில் “உங்கள் தொகுதியில் முதலமைச்சர் ” திட்டத்தின் கீழ்
ஏழைப் பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கப்பட்டது (11.06.2021)




மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்களால் தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற ஒருங்கிணைந்த சேவை மைய கட்டிட திறப்பு விழா (06.07.2021)



**மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில்**

**தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெற்ற மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம் (17.07.2021)**